# திட்டம்

மாத இதழ்

மலர் 50

இதழ் 3

நவம்பர் 2017

கார்த்திகா - அக்ரஹாயன 1939



முதன்மை ஆசிரியர்

**தீபிகா கச்சல்**

முதுநிலை ஆசிரியர்

**ஆ.இளங்கோவன்**



- தமிழ்நாட்டில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்
  - ராஜேந்திரகுமார்
- ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு வழங்கி வரும் தொழில்முனைவு, வேலைவாய்ப்புசார் பயிற்சிகள்
  - எம். சிவகுமார்
- தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம்
  - எஸ்.நடராஜன்
- குறு, சிறு நடுத்தரத்தொழில் நிறுவனங்களில் தொழில்நுட்ப மேம்பாடு : தேவையான விளைவுகளுக்கான நோக்கங்கள், ஆதாரங்கள் மற்றும் வழிவகைகள்
  - பாலசுப்ரமண்யமுங்கிலா ஹில்லிமனே
- காதி ஆணையத்தின் புதிய முன் முயற்சிகள்
  - வி.கே.சக்சேனா
- இந்தியாவின் குறு, சிறு, நடுத்தரத்தொழில் (MSME) அமைப்புகளுக்கு அதிகாரமளித்தல்
  - அருண் குமார் பாண்டா
- குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள்
  - சந்திரசேகர் ரெட்டி, திவ்யேந்து சௌத்ரி
- குறு, சிறு, நடுத்தரத்தொழில்களுக்கான தரச்சான்றிதழ்
  - ஜிதேந்திரசிங்
- இந்தியாவில் சிறு, குறு, நடுத்தரத்தொழில்களுக்கு நிதி வழங்குவதில் உள்ள சவால்கள்
  - அனில் பரத்வாஜ்
- இந்தியாவின் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் : தற்போதைய சவால்கள், வாய்ப்புகள் மற்றும் உடனடி தேவைகள்
  - P.M. மேத்யூ



**கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.**

**திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.**


**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |


**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

**துணை இயக்குநர்**

**திட்டம்**

**A Wing இராஜாஜி பவன்,**

**பெசன்ட் நகர்**

**சென்னை -600 090.**

**தொலைபேசி : 044-2491 7673**

Log on to **http://publicationsdivision.nic.in/**

*in collaboration with* **bharatkosh.gov.in**

# தமிழ்நாட்டில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்

- ராஜேந்திரகுமார்

பொருளாதாரத்தின் பன்முகத்தன்மைக்கும், சமூகத்தின் நிலைத்தன்மைக்கும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் பெரிதும் துணை நிற்கின்றன. பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் முனைவோரின் புதுமையான முயற்சிகளுக்கும் பங்களிப்பு செய்கின்றன. வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் உள்ளன. தனியார் துறை வேலைவாய்ப்பில் ஏறத்தாழ 60% பங்கினை அளிப்பதோடு, புதிய கண்டுபிடிப்பு, மண்டலத்தின் வளர்ச்சி, சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுகின்றன.

## இந்தியாவின் பொருளாதாரத்தில் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் பங்கு:

இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 45 விழுக்காடும், ஏற்றுமதியில் 40 விழுக்காடும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் பங்களிப்பு செய்கின்றன என்று 12ஆவது ஐந்தாண்டுத்திட்ட (2012 - 2017) வளர்ச்சி செயல் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. சுமார் 6000 வகையான பாரம்பரியப் பொருள்கள் முதற்கொண்டு உயரிய தொழில்நுட்பப் பொருள்கள் வரை பலவிதமான பொருள்கள் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களால் தயாரிக்கப்படுகின்றன. தொழிலாளர் மூலதன விகிதத்தை ஒப்பிடும்போது பெரிய தொழில் நிறுவனங்களைக் காட்டிலும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு அதிகமாக உதவுகின்றன. புவியியல் ரீதியிலான பகிர்வும் கூட இத்துறையில் அதிகம். எனவே நாட்டின் வளர்ச்சிக்கு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

## தமிழ்நாட்டில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்:

குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அனைத்து பிரிவுகளிலும் பலவிதமான பொருள்களைத் தயாரித்து வருகின்றன. இவற்றில் முக்கியமாக ஜவுளி, மின் பொருள்கள், மின்னணுப் பொருள்கள், பொறியியல் பொருள்கள், தானியங்கி மின் பொருள்கள், தோல் பொருள்கள், இரசாயனம் சார்ந்த பொருள்கள், நெகிழிப் பொருள்கள் (பிளாஸ்டிக்), ஆயத்த ஆடைகள், அலங்கார ஆபரணங்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. www.msmeonline.tn.gov.in. என்ற இணையதளம் வாயிலாக தமிழ்நாட்டில் தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி 2 பதிவு செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் படி, சுமார் 7.22 இலட்சம் தொழில் முனைவோர் பதிவு செய்துகொண்டுள்ளனர். சுமார் ரூ.109073.27 கோடி மொத்த முதலீட்டில் 41.24 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் இவற்றின் மூலம் உருவாகியுள்ளன.

உத்யோக் ஆதார் பதிவறிக்கை செயலாக்கத்திற்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் 31.12.2016 வரை 236012 நிறுவனங்கள் உத்யோக் ஆதார் பதிவறிக்கை பெற்றுள்ளன. இவற்றில் 204569 குறுந் தொழில்நிறுவனங்களும், 30710 சிறுதொழில் நிறுவனங்களும், 733 நடுத்தரத்தொழில் நிறுவனங்களும் அடங்கும்.

## குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை:

தமிழ்நாட்டில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறையில் நான்கு முக்கிய அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவையாவன:

1. தொழில் வணிக ஆணையரகம் (IC & DIC)
2. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO)
3. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI)
4. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDI)
5. தாய்கோ வங்கி/இன்கோசர்வ்/சேகோசர்வ் முதலான கூட்டுறவு நிறுவனங்கள்

**தொழில் வணிக ஆணையரகம்:**

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு குறிப்பாக, குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த தலைமையகமாக தொழில் வணிக ஆணையரகம் விளங்குகிறது. தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டத்தொழில் மையங்களும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. மண்டல இணை இயக்குநரின் தலைமையில் இந்த அலுவலகம் சென்னையில் செயல்பட்டுவருகிறது. தொழில் தொடங்க முன்வருவோருக்கு உகந்த தொழில்களைக் கண்டறிதல், தொழில் திட்டஅறிக்கையினைத் தயாரித்தல், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுத்தருதல், தொழில் துவங்குவதற்கு அரசின் பல்வேறு துறைகள் சார்ந்த ஒப்புதல்களைப் பெற்றுத்தருதல், அரசு மானியங்கள் மற்றும் ஊக்குவிப்புத்தொகைகளை வழங்குதல், குறு, சிறு தொழில் நிறுவன வசதியாக்கக்குழுவின் மூலம் நிலுவையில் உள்ள தொகைகளைப் பெற்றுத்தருதல் போன்ற பணிகளை தொழில் வணிக ஆணையரகம் செய்துவருகிறது.

**உத்யோக் ஆதார் பதிவறிக்கை:**

வணிகக்குறிக்கோளை எளிமையாக அடையும் பொருட்டு இந்திய அரசால் உத்யோக் ஆதார் பதிவு தொடங்கப்பட்டது. குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை சட்டம் 2006, பிரிவு 8இன் படி இந்திய அரசாணை எண் 1643 நாள் 18.09.2015இன் மூலம் உத்யோக் ஆதார் பதிவு செய்யும் பதிவறிக்கை புதிதாக அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு கட்டணம் எதுவும் பெறப்படுவதில்லை. இது http://udyogaadhaar.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டுவருகிறது. உத்யோக் ஆதார் திட்டத்தின் கீழ் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

| நிறுவனங்கள் | உத்யோக் ஆதார் வகை | பிரிவு | இயந்திரம்/தளவாடம் முதலீட்டு அலகு ரூ. |
|---|---|---|---|
| குறு நிறுவனங்கள் | A | உற்பத்தி | 25 இலட்சத்திற்கு மிகாமல் |
| | B | சேவை | 10 இலட்சத்திற்கு மிகாமல் |
| சிறு நிறுவனங்கள் | A | உற்பத்தி | 25 இலட்சத்திற்குமேல் 5கோடி வரை |
| | B | சேவை | 10 இலட்சத்திற்குமேல் 2கோடி வரை |
| நடுத்தர நிறுவனங்கள் | A | உற்பத்தி | 5 கோடிக்கு மேல் 10கோடி வரை |
| | B | சேவை | 2 கோடிக்கு மேல் 5கோடி வரை |

**குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவன ஆதரவுத்திட்டங்கள்:**

**1. புதிய தொழில்முனைவோர், புதிய தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் (NEEDS)**

படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து முதல் தலைமுறை தொழில் முனைவோராக அவர்களை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு புதிய தொழில்முனைவோர், புதிய தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் (NEEDS) என்ற திட்டத்தை 2012ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தத்திட்டத்தில் தெரிவுசெய்யப்படுவோர் வங்கிக்கடன் பெற்று தொழில் நடத்தவும், 25 சதமுதலீட்டு மானியத்தை (ரூ.25 இலட்சங்களுக்கு மிகாமல்) 3% பின்முனை வட்டி மானியமாகப் பெறவும் தகுதி உடைவர்கள் ஆவர். இந்தத்திட்டத்தில் ரூ.5 இலட்சம் முதல் ரூ.100 இலட்சம் வரை கடன் பெறலாம்.

**2. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP):**

படித்துவிட்டு வேலைவாய்ப்பில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்குப் பொருளாதார முன்னேற்றத்தினை அளிக்கும் பொருட்டு Un Employed Youth Employment Generatiom Programme (UYEGP) என்ற திட்டத்தினை அறிவித்து,

இந்தத்திட்டத்தின் கீழ் உற்பத்தித் தொழில்களுக்கு ரூ.10 இலட்சமும் , சேவை நிறுவனம் தொடங்க ரூ.3 இலட்சமும், வியாபாரம் செய்ய ரூ.1 இலட்சமும் கடன் பெற முடியும். இந்தத்திட்டத்தில் திட்டமதிப்பீட்டில் 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

3. **பிரதம மந்திரியின் சுய வேலைவாய்ப்பு உருவாக்கத்திட்டம் (PMEGP):** இந்திய அரசின் குறு, சிறு, நடுத்தரத்தொழில்கள் அமைச்சகம் ஏற்கனவே செயல்படுத்திவந்த பிரதமரின் சுயவேலைவாய்ப்புத்திட்டத்துடன் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தினையும் இணைத்து செயல்படுத்தப்பட்ட ஒரு புதிய திட்டமே பிரதம மந்திரியின் சுய வேலைவாய்ப்பு உருவாக்கத்திட்டம் (PMEGP) ஆகும். இந்தத்திட்டத்தினை கிராமப்புறங்களில் கதர் கிராமத்தொழில் ஆணையம் மற்றும் வாரியமும், கிராமப்புறங்களிலும், நகர்புறங்களிலும் மாவட்டத்தொழில் மையமும் செயல்படுத்திவருகின்றன. இந்தத்திட்டத்தின் மூலம் உற்பத்திப்பிரிவிற்கு ரூ.25இலட்சமும், சேவைப் பிரிவிற்கு ரூ.10இலட்சமும், கடனாகப்பெறலாம். இந்தத்திட்டத்தின்மூலம் ரூ. 15இலட்சம் முதல் ரூ.35இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

4. **குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மானியங்கள்:**

தாராளமயம், உலகமயம் ஆகியவற்றில் இருந்து இந்திய நிறுவனங்களைக் காப்பதற்காக மத்திய அரசானது குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவன மேம்பாட்டுச் சட்டம் 2006 என்பதை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. பின்தங்கிய பகுதிகள், அரசு நிறுவனங்களான சிப்காட், சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொடங்கப்படும் நிறுவனங்களுக்கு பின்வரும் மானிய உதவிகள் அளிக்கப்படுகின்றன:

அ) மூலதனமானியம்: இயந்திரங்கள், தளவாடங்களின் மதிப்பில் 25%, அதிகபட்சமாக ரூ.30இலட்சம் வரை மூலதன மானியம் வழங்கப்படும்.

ஆ) வேலைவாய்ப்புப் பெருக்க மானியம்: உற்பத்தி துவங்கிய 5 ஆண்டுகளில் 3 ஆண்டுகளுக்கு குறைந்தபட்சம் 25 பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்கு கூடுதலாக 5% அதிகபட்சமாக ரூ.2இலட்சம் வரை கூடுதல் மூலதன மானியம் தரப்படும்.

இ) குறிப்பிட்ட வகை தொழில் முனைவோருக்கான கூடுதல் மூலதன மானியம்: மகளிர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர், திருநங்கைகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில் 5% அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கூடுதல் மானியமாக வழங்கப்படும்.

ஈ) சுற்றுச்சூழலுக்கு இசைவான, மாசற்ற தொழில்நுட்பத்திற்கான கூடுதல் மானியம்: தூய்மையைக் காக்கும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என்று தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சான்றளிப்பதன் அடிப்படையில் இதற்கென நிறுவப்பட்ட இயந்திரத்தளவாடங்களின் மதிப்பில் 25%, அதிகபட்சமாக ரூ.3இலட்சம் வரை கூடுதல் முதலீட்டு மானியமாக வழங்கப்படும். தொழில் தொடங்கிய ஒரு ஆண்டு காலத்திற்குள் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

உ) குறைந்த அழுத்த மின் மானியம்: உற்பத்தி துவங்கிய நாள் முதல் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் முதல் இவற்றில் எது பிந்தி உள்ளதோ அந்நாளில் இருந்து முதல் 36 மாதங்களுக்கு 20% என்ற வீதத்தில் குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படும், உற்பத்தி துவங்கிய மூன்று மாதத்திற்குள் இதற்கு விண்ணப்பிக்கவேண்டும்.

ஊ) சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான மூலதன மானியம்: மின்பொருள்கள், மின்னணுப்பொருள்கள், தோல் மற்றும் தோல் பொருள்கள், மருந்துப்பொருள்கள், சூரியசக்திப் பயன்பாட்டு உபகரணங்கள், ஏற்றுமதிக்கான தங்கம், வைர நகைகள், பட்டை தீட்டுதல், மாசுக்கட்டுப்பாட்டு உபகரணங்கள், விளையாட்டுப்பொருள்கள், சிக்கனக் கட்டுமானப்பொருள்கள், ஆயத்த ஆடைகள் ஆகியவற்றைத் தயாரிக்கக் கூடிய தமிழ்நாட்டின் எந்தப்பகுதியிலும் அமைக்கப்படும் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு தகுதியான

இயந்திரங்கள், தளவாடங்களின் மதிப்பில் 25% அதிகபட்சமாக ரூ.30இலட்சம் வரை சிறப்பு முதலீட்டு மானியம் தரப்படும்.

ஏ) மின்னாக்கி மானியம்: மின்சாரவாரியத்திடம் உரிய அனுமதியினைப் பெற்று 22.05.2009க்குப்பிறகு வாங்கப்பட்ட 320KVA திறனுள்ள புதிய மின்னாக்கிகளுக்கு அவற்றின் மதிப்பில் 25% வரை அதிகபட்சமாக ரூ.5இலட்சம் வரை மின்னாக்கி மானியம் தரப்படுகிறது.

5. **இதர சலுகைகள்:** குறுந்தொழில்களுக்கு சிப்கோ தொழிற்பேட்டையில் 30% இட ஒதுக்கீடு. சிறு, நடுத்தரத்தொழில்களுக்கு சிப்காட் தொழிற்பேட்டையில் 20% இடம் ஒதுக்கீடு. தனியார் மூலம் தொழிற்பேட்டை உருவாக்க 20%, அதிகபட்சமாக ரூ.100 கோடிவரை மானியம். அரசு கொள்முதல்களில் 15% விலை முன்னுரிமை, பணியாளர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு 50% மானியம், குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தனிக்குழு அமைத்தல், தொழில் துவங்கத் தேவையான அனுமதி வழங்க ஒற்றைசாளரத் தீர்வுச்சட்டம் இயற்றுதல் ஆகிய உதவிகள் மாவட்டத் தொழில் மையம் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

### 6. குடிசைத்தொழில் கைவினைத்தொழில் பதிவுச்சான்றிதழ்:

குடிசைத்தொழில், கைவினைத்தொழில் செய்பவர்களைக் கண்டறிந்து பதிவுசெய்து சான்றிதழ் வழங்குவதன் மூலம் தேவையான கடன் உதவி கிடைப்பதற்கு மாவட்டத் தொழில் மையம் வழி செய்கிறது.

### 7. தொழில் முனைவோர் மேம்பாட்டு வளர்ச்சிக் குழுக்கூட்டம்:

மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாதம்தோறும் நடைபெறும் இந்தக்கூட்டத்தின் மூலம் தொழில் தொடங்குபவருக்கு விரைவான நிலவரைபட ஒப்புதலும், தடையின்மைச் சான்றும், உரிமங்களும், மின்னிணைப்பும் காலதாமதமின்றி கிடைப்பதற்குரிய விரைவான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

8. **தரக்கட்டுப்பாட்டு ஆணையினை செயல்படுத்துதல்:** மாவட்டத் தொழில்மையத்தின் பொதுமேலாளர் தரக்கட்டுபாட்டு அலுவலராக செயல்படுவார். வீட்டு உபயோக மின் சாதனப்பொருள்களின் தரத்தினை ஆய்வு செய்யவும். தரம் குறைந்த பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்களின் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும் இவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எண்ணெய் அழுத்த அடுப்புகள், சிமெண்ட் ஆகியவையும் தரக்கட்டுப்பாட்டு ஆணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

9. **நலிவுற்ற குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களைப் புனரமைத்தல்:** இவற்றின் புனரமைப்பிற்காகவும், மறுகட்டமைப்புக்காகவும் இந்திய அரசின் அரசிதழில் மே29, 2015 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள வருமான அங்கீகாரம், சொத்துக்களை வகைப்படுத்துதல், முன்பணம் வழங்குவதற்கான நடைமுறைகள் ஆகியவற்றை வங்கிகள் எளிதாக செயல்படுத்துவதற்கு மத்திய ரிசர்வ் வங்கி சில நடைமுறை மாற்றங்களைச் செய்துள்ளது.

நலிவுற்ற குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களைப் புனரமைத்தல், புத்துயிர் அளித்தல் கட்டமைப்பின்படி வங்கிகள் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து காலாண்டிற்கு ஒருமுறை மத்திய ரிசர்வ் வங்கிக்குழு ஆய்வு செய்கிறது.

நலிவுற்ற நிறுவனங்களின் புனரமைப்பை அரசு மேற்கொள்ள தீர்வுகளை முன் வைக்கும் மாநில அளவிலான குழு (SLRC) குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறையின் செயலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. நலிவுற்ற குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களைப் புனரமைப்பது தொடர்பான, திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக இந்தக்குழு காலாண்டு அடிப்படையில் கூட்டங்களை நடத்திவருகிறது.

### 10. மத்திய மாநில அரசுகளின் விருதுக்குப் பரிந்துரை;

உற்பத்தி, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படும் தொழில் முனைவோருக்கும், தொழிலகங்களுக்கும் விருதுகள் கிடைப்பதற்கு ஏதுவாக தகுதியான நபர்கள் தேந்தெடுக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படுகிறது.

11. **இரசாயனப் பரிசோதனை, பகுப்பாய்வுக்கூட்டங்கள்:** தொழில் வணித்துறையின் கீழ் இயங்கிவரும் பரிசோதனைக்கூடங்கள் மாநிலத்தில் உள்ள குறு,

சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் பொருட்டு பரிசோதனை வசதிகள் மூலம் முக்கிய பங்காற்றுகின்றன. சென்னை, மதுரை, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் இவை செயல்பட்டுவருகின்றன. உலோகங்கள், உலோகக்கலவைகள், தண்ணீர், வர்ணப்பூச்சு, சிமெண்ட், ஆர்.டி.எஸ், கம்பி, செங்கல், கான்கிரீட், உலோகத்தகடுகள், ரப்பர், ப்ளாஸ்டர் பலகை, பெட்ரோலியப்பொருள்கள் தொடர்பான பரிசோதனைகள் இங்கு செய்யப்படுகின்றன.

**12. மின் மற்றும் மின்னணுப்பிரிவு:**

குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் மின்னணு, அவை சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கென மாநிலத்தில் எட்டு தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு சென்னையிலும் (திருவான்மியூர், பெருங்குடி), திருவள்ளூர் (காக்களூர்), மதுரை (கப்பலூர்), சேலம் (சூரமங்கலம்), கோயம்புத்தூர் மானகரம், கிருஷ்ணகிரி (ஓசூர்), திருச்சிராப்பள்ளி (துவாகுடி) என்று மாவட்டத்திற்கு ஒன்றாக அமைந்துள்ளன. இவற்றுள் காக்களூரில் மத்திய மின்பொருள் சோதனைக்கூடம் அமைக்கப்பட்டு இந்திய தர நிர்ணய மையம் (BIS), சோதனைக்கூடங்களுக்கான தேசிய அங்கீகாரக் குழுமம் (NAPL) ஆகியவற்றின் அங்கீகாரத்தைப் பெற்று 160க்கும் மேற்பட்ட மின்சாதனங்கள் இங்கு சோதனை செய்யப்படுகின்றன.

**13. தொழிற் கூட்டுறவு சங்கங்கள்:**

மாநிலத்தில் சிறு தொழில்களையும், குடிசைத்தொழில்களையும் மேம்படுத்துவதில் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சிறப்பான இடத்தை வகிக்கின்றன. ஊரகப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. நலிவடைந்த பிரிவினரை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவிப்பதும், அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி மேம்பாடு அடையச்செய்வதும் இதன் குறிக்கோள். தற்போது இவை ஊரகக்கைவினைஞர்கள், திறனாளிகள், பகுதிதிறனாளிகள், தொழிலாளர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்பினை வழங்கிவருகின்றன. சிறு விவசாயிகளுக்கும், மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவோருக்கும் நியாயாமான விலை கிடைக்க வழி செய்கின்றன. குறு சிறு தொழில்களை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தொழில் முனைவோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகளையும், தொழிற்கூடங்களையும் தொழிற்பேட்டைகள் அமைப்பதன் மூலம் வழங்குகின்றன. தொழிற் கூட்டுறவுப்பிரிவில் இன்கோசர்வ், டீசர்வ் போன்ற சங்கங்கள் மிக முக்கியமானவையாகும். இந்தக் கூட்டுறவு சங்க்களுக்கு போதுமான நிதி வசதியை செய்து கொடுப்பதற்கென்று தனியாக ஒரு நிதி நிறுவனம் தாய்கோ வங்கி என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**14. அம்மா திறன் பயிற்சி, வேலைவாய்ப்புத்திட்டம்:**

அம்மா திறன் பயிற்சி, வேலைவாய்ப்புத்திட்டம்: என்ற புதிய திட்டத்தின் கீழ் பொறியியல் தொழிற்கல்வி, தொழிற்படிப்பு படித்துள்ள 18 முதல் 25 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ.5000 உதவித்தொகை வழங்கப்படும். ஆறு மாதப் பயிற்சிக்குப்பிறகு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ரூ.12000 அரசு வழமங்கும். பயிற்சி பெற்றவர்கள் தேசிய திறன் மேம்பாட்டுக்கழக சான்றிதழ் பெறுவர். பயிற்சி முடித்த இளைஞர்கள வேலையில் அமர்த்தப்படுவர். அவர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்படும்.

- **ராஜேந்திரகுமார்**, முதன்மைச்செயலர்/தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் தமிழ்நாடு அரசு.

அடுத்த மாத இதழில்

**“நுகர்வோர் விழிப்புணர்வு”**

**பற்றிய சிறப்புக் கட்டுரைகள் இடம் பெறும்.**

# ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு வழங்கிவரும் தொழில்முனைவு மற்றும் வேலைவாய்ப்புசார் பயிற்சிகள்

- எம். சிவகுமார்

**முன்னுரை**

உலக வங்கியின் உலக மேம்பாடு 2013 அறிக்கையின்படி, 600 மில்லியனுக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தினால் மட்டுமே அடுத்த 15 ஆண்டுகளில் பெருகவிருக்கும் மனிதவளத்தின் வேலைவாய்ப்புத் தேவைகளை எதிர்கொள்ள முடியும்.

இத்தேவையை எதிர்கொண்டு வளர்ச்சியடைய, கல்வி, தொழில்சார் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்குச் சமமாக தொழில்முனைவுத் திறன் மேம்பாட்டின் தேவையும் பெருகி வருகிறது. ஏனெனில், தொழில்முனைவோரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகின்றனர்.

வெற்றிகரமான தொழில்முனைவோர் புத்தாக்கத்தில் ஈடுபடுவதுடன், புதிய பொருட்கள் மற்றும் வணிகக் கொள்கைகளை சந்தைப்படுத்தி, சந்தை ஆற்றலைப்பெருக்கி, செல்வம் பெருக உறுதுணையாக இருப்பதுடன் புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் காரணிகளாகவும் இருக்கின்றனர். தொழில்முனைவோர் புதிய திட்டங்களை புத்தாக்கத்தின்மூலம் பொருளீட்டும் வாய்ப்புகளாக மாற்றி வளர்ந்துவரும் பொருளாதாரச் சூழலுக்கு வலுசேர்க்கின்றனர்.

இதனடிப்படையில் உலகின் பெரும்பான்மையான அரசாங்கங்கள் உலகத்தரம் வாய்ந்த தொழில் முனைவோரை தத்தமது நாடுகளில் உருவாக்க வேண்டிய கட்டாயச்சூழலில் இருக்கின்றன. வளர்ந்தநாடுகளில் போதிய அளவிலான தொழில்முனைவோர் இருந்தாலும், வளர்ந்துவரும் நாடுகளில் தொழில்முனைவோர் மற்றும் தொழில்முனைவுசார் திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் தேவை இருந்தே வருகிறது.

மேலும் வளர்ந்துவரும் நாடுகளில் 10இல் 9 வேலைகள் தனியார் துறைகளினாலேயே உருவாக்கப்படுகின்றன. இனிவரும் காலங்களில் வளரும் நாடுகள் தம் பொருளாதாரத்தை இறக்குமதித்தேவை, உள்நாட்டுநுகர்வு, மற்றும் பெருவணிகம் சார்ந்து மீள்கட்டுமானம் செய்துகொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன.

இத்தேவையை பூர்த்தி செய்ய வளர்ந்துவரும் தொழில்நுட்பம்சார் நிறுவனங்கள் மற்றும் புதிய தொழில்முனைவோரை ஊக்குவிப்பதுடன் பெருமளவில் பண்பட்ட புத்தாக்க முயற்சிகளை உற்பத்தித்துறை, ஏற்றுமதித்துறை, மற்றும் கிராமப்புற, நகர்ப்புற வணிகத்துறைகளிலும் ஊக்குவிக்கும் சூழமைவைக் கட்டமைப்பதும் அவசியம் ஆகும். இத்துறைகள் அதிக வேலைவாய்ப்பை உருவாக்கும் திறமுடையவை ஆகும்.

இச்சூழலை ஒத்து அண்மைக் காலங்களில் தொழில்முனைவை நோக்கி மேனிலைக்கல்வி நிறுவனங்களின் கவனம் திரும்பி வருகின்றது. இது ஒரு நேர்மறைக் குறியீடாகும். இதனை, இன்று ஐஐடி ஐஐஎம் போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களை மட்டுமே அணுகி வந்த "ஸ்டார்ட்அப் இன்குபேட்டர்" எனப்படும் தொழில்முனைவு ஊக்கிகள் பல, தொழில்நுட்பம்சார் மற்றும் தொழில்நுட்பம் சாரா கல்வி நிறுவனங்களை நோக்கிப் படைஎடுப்பதைக் கவனிப்பதன்மூலம் அறியலாம்.

இம்மாறுபட்டச் சூழல்களைக் கருத்தில் கொண்டு, ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு, மத்திய மாநில அரசுகள் மற்றும் அரசுத் துறைகளுடன் இணைந்து நாடு தழுவிய அளவில்

இளைஞர் மற்றும் மாணவர் திறன் மேம்பாடு, தொழில்முனைவு மேம்பாடு சார்ந்த பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இவ்வகையில், இந்தியாவை தொழில் முனைவோர் நிறைந்த நாடாக உருவாக்கும் நோக்கில் இத்துறையில் இளைஞர் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தொழில்முனைவு மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை, தொழில் முனைவு சார்ந்த விழிப்புணர்வை மாணவ சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கத்தில் மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சகம் உருவாக்கி, அதனை ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மையம் மற்றும் ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு மூலம் வழங்கிவருகிறது. இத்திட்டம் தொழில்முனைவு என்றால் என்ன, தொழில்முனைவில் எப்படி ஈடுபடுவது என்பது சார்ந்த விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது.

### ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு

ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் உருவான இலாப நோக்கில்லாத அமைப்பாகும். ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு இரண்டாம் மூன்றாம் தட்டு நகர மாணவர்களின் திறன் தேவையைப் பூர்த்தி செய்யவும் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் துவங்கப்பட்டது.

ஆசிரியர் திறன் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு ஆசிரியர் மேம்பாடு, மாணவர் திறன் மேம்பாடு, தொழில்முனைவு மேம்பாடு, இளைஞர் மேம்பாடு, தொழில்துறைகல்வி நிறுவன தொடர்பு, டிஜிட்டல் திறன் மேம்பாடு, ஆய்வு மற்றும் பிரசுரங்கள் ஆகிய ஏழு தளங்களில் இயங்கிவருகிறது.

ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு மத்திய அரசின் NITI Aayog ஆல் (National Institution for Transforming India Aayog) தேசிய அளவில் சேவை செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு தனது பல்வேறு சேவைகளின்மூலம் இந்தியாவின் ஸ்கில் இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட்அப் இந்தியா மற்றும் மேக் இன் இந்தியா போன்ற தொலைநோக்குத் திட்டங்களை வலுப்படுத்தும் முகமாகச் செயல்பட்டு வரும் நிறுவனமாகும்.

### 25,000 ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு சேவை துவங்கியது முதல் இதுவரை ஏறத்தாழ 700 ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளின் மூலம் 1500க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் 25,000 ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியளித்துள்ளது. இப்பயிற்சித் திட்டங்களை அரசுடன் கைகோர்த்தும் தனியார் தொழில் நிறுவனங்களின் மேற்பார்வையிலும் உருவாக்கி, மாறிவரும் தொழிற் சூழலுக்கு ஏற்ப பல புதிய பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து வழங்குவதன்மூலம் திறன்மிகு ஆசிரியர்களை உருவாக்கவும் மாணவர்களின் திறன் மேம்பாட்டிற்கும் வழிவகுத்து வருகிறது.

### 30,000 இளைஞர்களுக்கு தொழில்முனைவுப் பயிற்சி

மேலும் கடந்த 2016ஆம் ஆண்டு ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு தொழில்முனைவு மேம்பாட்டு மையத்துடன் இணைந்து தொழில்முனைவுசார் விழிப்புணர்வுப் பயிற்சித்திட்டமொன்றை தமிழகத்தின் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் பகுதிகளில் மூன்று கட்டங்களாக நடத்தியது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக தமிழகத்தின் 112 கல்லூரிகளின் இறுதியாண்டு மாணவர்களில் 30,000 இளைஞர்களுக்கு தேர்ந்த தொழில்முனைவு நிபுணர்கள்மூலம் தொழில்முனைவு சார்ந்த விழிப்புணர்வு வழங்கப்பட்டது. விழிப்புணர்வு அமர்வில் பங்கேற்ற மாணவர்களில் சிறந்த 20 மாணவர்கள் கண்டறியப்பட்டு இரண்டாம் கட்டமாக 5 நாட்களில் 30 மணிநேர தீவிர தொழில்முனைவுப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர். இரண்டாம் கட்டப்

பயிற்சியில் பங்கேற்ற மாணவர்களிடமிருந்து புதிய தொழில் திட்டங்கள் வரவேற்கப்பட்டு ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் மூன்றாம் கட்டப்பயிற்சியான மேம்பட்ட "எதிர்கால இந்தியாவின் தொழில்முனைவோர்" என்ற தொழில்முனைவுப் பயிற்சிக்குத் தகுதியான சிறந்த இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு புதுத்தொழில் துவக்கம், தொழில்முனைவுக்கு தேவையான திறன்கள், வளர்ச்சி அளவிடல், தொழில் நிலைத்தன்மை மேலாண்மை மற்றும் நிதி உருவாக்குதல் ஆகிய திறன்கள் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**ஐசிடி அகாடெமியின் அரசுசார் பல்துறைப் பயிற்சித் திட்டங்கள்:**

**கிராமப்புற மாணவிகளுக்கான மொழித்திறன் மற்றும் அலுவலக மேலாண்மைப் பயிற்சித் திட்டம்**

சமூகநல இயக்ககத்திற்காக முறைசார் மற்றும் முறைசாராத்துறைகளில் சமூகத்தின் அடித்தட்டிலுள்ள 100 மாணவிகளுக்கு மொழித்திறன் மற்றும் அலுவலக மேலாண்மைப் பயிற்சித் திட்டமொன்றை செயல்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 11 மற்றும் 12ஆம் வகுப்பு முடித்த 14 முதல் 22 வயதுவரை உள்ள பெண்களுக்கு வருடாவருடம் இரண்டு மாதகாலப் பயிற்சி வழங்கி வருகிறது. இப்பயிற்சி தமிழகத்தின் சென்னை, கடலூர், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மையங்களில் நடைபெற்றுவருகிறது. மாணவியரின் வேலைவாய்ப்புத்திறன்களை அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்டு, பயிற்சியின் இறுதியில் பரீட்சித்துச் சான்றிதழும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்மூலம் ஐசிடி அகாடெமி மாணவிகள் மற்றும் பெண்களுக்கான வாழ்வாதார இலக்கை அடைய வகை செய்வதோடு அவர்களின் வாழ்வியல் அடிப்படையிலும் மாற்றம் செய்து வருகிறது.

**தொழிலாளர் மேலாண்மை நிறுவன மாணவர்களுக்கான ஐடி மற்றும் மென்திறன் பயிற்சி**

தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையின்கீழ் நிறுவப்பட்டுள்ள தொழிலாளர் மேலாண்மை நிறுவனம் தொழிலாளர் மேலாண்மையில் இளங்கலை, முதுகலை மற்றும் பட்டயப்படிப்புகளை நடத்தி வருகிறது. இப்படிப்புகளில் பயின்றுவரும் மாணவர்களின் ஐடி மற்றும் மென்திறன் சார்ந்த திறன் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் 200 மணி நேரப் பயிற்சித் திட்டத்தை ஐசிடி அகாடெமியின் மூலம் வழங்கியது.

**எஸ்.சி./எஸ்.டி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

இந்திய அரசின் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மையம் மற்றும் இளைஞர் நல இயக்ககத்தின்கீழ் வரும் இளைஞர் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எஸ்.சி./எஸ்.டி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சித்திட்டமொன்றை பட்டப்படிப்பை முடிக்கவிருக்கும் இளைஞர்களுக்காக உருவாக்கியது. இத்திட்டத்தின்கீழ் வங்கித்துறை மற்றும் ஐடிசார் துறைகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஐசிடி அகாடெமி மூலம் ஒடிஷா, சத்தீஸ்கர், அஸ்ஸாம், மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 1000 எஸ்.சி./எஸ்.டி. மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது.

**வேலையில்லா இளைஞர்களுக்கான மேம்பட்ட ஐடி & ஐடிஈஎஸ் வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி**

மாறிவரும் தொழிநுட்பச்சூழலுக்கிணங்க அமையாத கல்வித்திட்டத்தால் பாதிக்கப்படும் பொறியியல் மாணவர்களுக்கான மேம்பட்ட ஐடி-ஐடிஈஎஸ் சார்ந்த வேலைவாய்ப்புத் திறன் பயிற்சியை ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு வழங்கியது. ஐடி மற்றும் ஐடிஈஎஸ் துறைகளின் தற்காலத் திறன் தேவைகளுக்கேற்ப பயிற்சித் திட்டங்களை உருவாக்க தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து தமிழகத்தின் 300 மாணவர்களுக்கான வேலைவாய்ப்புத் திறன் மேம்பாட்டுப்பயிற்சியளித்தது. இப்பயிற்சியின் தொடராக மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி வேலைவாய்ப்புக்கான சூழலையும் ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

**வேலையில்லா இளைஞர்களுக்கான BFSI சார்ந்த மேம்பட்ட வேலைவாய்ப்புத் திறன் பயிற்சித் திட்டம்**

“வணிகம், பொருளியல் சேவைகள் மற்றும் காப்பீட்டுச் சேவைகள் (BFSI)” சார்ந்த வேலைவாய்ப்புகள் பெருகி வருவதன் அடிப்படையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து பட்டம் பெற்ற வேலையில்லா பட்டதாரி இளைஞர்களுக்கு வருடாவருடம் BFSI துறைசார் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை ஐசிடி அகாடெமி வழங்கிவருகிறது. இதுவரை தமிழகம் முழுதும் 800 மாணவர்களுக்கு இத்திறன்களைப் பயிற்றுவித்துள்ளது ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு.

**ராஜீவ் காந்தி இளைஞர் மேம்பாட்டு மையம் மற்றும் ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு இணைந்து 12 மாநிலங்களில் நடத்திய தொழில்முனைவுப் பயிற்சி**

ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மையம் மற்றும் ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு இணைந்து அஸ்ஸாம், புதுச்சேரி, தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், தெலுங்கானா, சத்தீஸ்கர், ஒடிஷா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கோவா ஆகிய 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த 300 தேசிய சாரணர் இயக்கஅதிகாரிகள் மற்றும் 12000 மாணவர்களைப் பயிற்றுவித்தது.

ஒவ்வொரு மாநிலத்தின் கலை அறிவியல் கல்லூரிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலா 25 தேசிய சாரணர் இயக்க அதிகாரிகள் (மொத்தம் 300 அதிகாரிகள்) பயிற்றுவிக்கப்பட்டனர். பயிற்சிபெற்ற 300 சாரணர் இயக்க அதிகாரிகளும் தத்தமது கல்லூரிகளில் தலா 40 மாணவர்களை தேர்ந்தெடுத்து பயிற்சியளித்ததன் மூலம் மொத்தம் 12,000 மாணாக்கர் பயிற்றுவிக்கப்பட்டனர். இதில் பங்குபெற்ற மாணவர்கள் தொழில்முனைவுக்குத் தேவையான பல புதிய தொழில் திட்டங்களை உருவாக்கிச் சமர்ப்பித்தனர். மேலும் இப்பயிற்சித் திட்டம் தற்சார்புடைய இந்தியாவை உருவாக்கத் தேவையான தலைமைத்துவப் பண்புகளையும் மாணவர்கள் மத்தியில் விதைத்தது.

மேலும் வேலையில்லா பட்டதாரி இளைஞர்களுக்கான தொலைத்தொடர்புத்துறைசார் வேலைவாய்ப்புத் திறன்பயிற்சி, சில்லறை விற்பனை மற்றும் மேலாண்மைப்பயிற்சி ஆகியவற்றை நடத்துவதுடன், தொழில்முறை வாகன ஒட்டிகளுக்கான “ஸ்மார்ட் டிரைவ்ப்ரனர்” பயிற்சி , மத்திய அரசின் RUSA திட்டத்தின்கீழ் தொழில்முறை பயிற்சி, புதிதாகப் பணியமர்த்தப்பட்ட தலைமைக் காவலர்களுக்கான “டிஜிட்டல் லிட்டரசி” பயிற்சி மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கான “டிஜிட்டல் லிட்டரசி” பயிற்சி போன்ற பல பயிற்சிகளை ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு வழங்கியுள்ளது, வழங்கியும் வருகிறது.

**முடிவுரை**

நாட்டின் வளமான கட்டுமானத்திற்கு இளைஞர் மற்றும் மாணவர்களின் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டின் இன்றியமையாமையைக் கருத்தில்கொண்டு மத்திய மாநில அரசுகள் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் மாறிவரும் காலச் சூழலுக்கும், கல்வி மற்றும் தொழிற் சூழலுக்கும் ஏற்ப தக்க அரசு மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து பல முன்னோடித் திட்டங்களில் பங்குபெற்று இச்சேவைகளை ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு செய்து வருகிறது.

ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு ஆசிரியர் மற்றும் மாணவர் திறன் மேம்பாட்டுக்காக உழைப்பதோடு தேசத்தின் வளமான கட்டுமானத்திற்கு அடிக்கல்லாகவும் தன்னை வடிவமைத்துச் செயல்பட்டு வருகிறது. தன் சேவைகளின்மூலம் நாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றிவரும் ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு மத்திய அரசின் NITI Aayog ஆல் (National Institution for Transforming India Aayog) தேசிய அளவில் சேவை செய்வதற்காக பரிந்துரைக்கப் பட்டுள்ளது. ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு தன் சேவையை தொடர்ந்து நாட்டின் நலன்மீது அக்கறையுடன் ஆற்றிவரும்.

- **எம். சிவகுமார்**, முதன்மைச் செயல் அதிகாரி, ஐசிடி அகாடெமி ஆஃப் தமிழ்நாடு.

# தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம்

எஸ்.நடராஜன்

“கதர் என்பது எளிமையின் அடையாளமேயன்றி மலிவானதல்ல”

- **மகாத்மா காந்தியடிகள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959-இன்படி ஏப்ரல் 1960-இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒரு சட்டபூர்வ அமைப்பாக உருவாக்கப்பட்டது. கிராமப்புற ஏழைமக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன் அவர்களின் தற்சார்பு நம்பிக்கையினை வளர்த்து அவர்களது பொருளாதார நிலையினை மேம்படுத்திட உதவுவதே இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

**வாரியத்தின் முக்கிய நோக்கங்களாவன:**

- கிராமப்புற ஏழை மக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பு நம்பிக்கையினை வளர்த்தல்.
- கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி மற்றும் இலாபத் திறனை மேம்படுத்துதல்.
- கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியதாகும் .

**கதர்**

கதர் துணிகள், பருத்தி மற்றும் பட்டு நூல்களைப் பயன்படுத்தி இராட்டைகள் மூலம் கையினால் நெய்யப்படுவதாகும். முன்னர் கதர் துணிகள் நூறு விழுக்காடும் பருத்தியில் ஆனவையாக இருந்தன. சந்தையில் பாலியஸ்டர் வந்த பின்பு, கையினால் நூற்கப்பட்ட பாலியஸ்டர் நூலுடன் கதர் நூலும் சேர்க்கப்படுவதினால் தற்போது கதர் என்பது கதர் பருத்தி, பாலிவஸ்திரா மற்றும் கதர் பட்டு ஆகிய மூன்று வகைகளில் கிடைக்கின்றது.

**கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா**

கதர் உற்பத்தியானது நூற்பு, நெசவு, சலவை மற்றும் சாயமிடுதல் போன்ற பல்வேறு செயல்முறைகளை உள்ளடக்கி கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு இலாபம் அளிக்கக்கூடிய வேலைவாய்ப்பினை உருவாக்கி தருகிறது. வாரிய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 107 கிராமிய நூற்பு நிலையங்களில், பஞ்சு பட்டைகளை இராட்டைகளில் பயன்படுத்தி கையினால் நூல் நூற்கப்பட்டு கதர் நூலாக மாற்றப்படுகின்றது. கையினால் நூற்கப்பட்ட நூல் கட்டுகள் சிட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. கிராமிய நூற்பு நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சிட்டங்கள் கோரா துணி உற்பத்தி செய்வதற்காக 40 கதர் உற்பத்தி உபகிளைகள் மற்றும் 9 நேபாளி தறி அலகுகளின் மூலம் நெசவாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இப்பிரிவு சுமார் 20,000 ஏழை கைவினைஞர்களுக்கு குறிப்பாக கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் வேலைவாய்ப்பினை வழங்குகிறது. இது தவிர கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவினால்

சான்றளிக்கப்பட்ட 67 சர்வோதய சங்கங்கள், கதர் உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதன் மூலம் நூற்பு, நெசவு மற்றும் இதர தொடர்நிலை பணிகளில் ஈடுபட்டுள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு இதே மாதிரியான வேலைவாய்ப்பை வழங்கிவருகின்றன. 2016-2017 -ஆம் ஆண்டில் வாரியம் ரூ.929.73 இலட்சம் மதிப்புள்ள கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா இரகங்களை உற்பத்தி செய்து ரூ.1348.37 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.

### கதர் பட்டு

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான 16 கதர் பட்டு உற்பத்தி அலகுகளின் மூலம் கதர் பட்டுப் புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. வழக்கமான பட்டுப் புடவைகளைத் தவிர சந்தைப்போக்கின் மாற்றங்களுக்கேற்ப அச்சிட்ட மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டுச் சேலைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளுக்கு, மத்திய பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு சான்றாக "சில்க் மார்க்" முத்திரை வழங்கப்பட்டுள்ளது. வாரியம் தனது உற்பத்தி அலகுகள் மூலம் சுமார் 1500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது. 2016 2017ஆம் ஆண்டில் ரூ.539.66 இலட்சம் மதிப்புள்ள கதர் பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.658.46 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள்

### கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட அரசினால் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெற்றுள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக அரசு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

இந்த நல வாரியத்தில் 9042 நபர்கள் உறுப்பினராகப் பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 1134 பயனாளிகளுக்கு இதுவரை ரூ.54.52 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக நலநிதி ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கைவினைஞர்கள், அவர்கள் பெறும் கூலித்தொகையில் 12 விழுக்காடு தொகையினை பங்களிப்பதோடு வாரியமும் அதற்கு ஈடான தொகையினை பங்களிக்கிறது. கைவினைஞர்களின் கணக்கில் தொகை இருக்கும்பட்சத்தில் நூற்போர் மற்றும் நெசவாளர் குடும்பத்தினரின் திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும் திரும்ப வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித்தொகை தவிர அவர்களது அடிப்படை கூலியில் 10 விழுக்காடு ஊக்கத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 20162017ஆம் ஆண்டில் 827 கைவினைஞர்களுக்கு ரூ.30.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### உற்பத்தித் திறனை மேம்படுத்திட உதவி

கதர் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியினை அதிகரித்திட நெசவாளர்களது, அச்சு, விழுது, நாடா, ஜக்கார்ட் பெட்டி, தார் சுற்றும் இயந்திரம் போன்ற பழைய தறி உபகரணங்களைப் பழுது நீக்கம் செய்து புதுப்பித்திட வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 292 கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு நெசவாளர்களுக்கு 2014-2015ஆம் ஆண்டில் ரூ.26.00 இலட்சம்

ஒப்பளிக்கப்பட்டது. 2015-2016ஆம் ஆண்டில் 201 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.10.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இன்றியமையாத உதிரிபாகங்களை பழுது நீக்கம் செய்து புதுப்பித்ததன் மூலம் நெசவாளர்களது பணிப்பளு குறைந்து நெசவு வேகம் கணிசமாக அதிகரித்ததினால் உற்பத்தித் திறனும் அதிகரித்து அதன் அடிப்படையில் கதர் மற்றும் பட்டு நெசவாளர்களின் வருமானமும் அதிகரித்துள்ளது.

### வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம்

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில் கதர் கிராமத் தொழில் ஆணையம் 2010-2011ஆம் ஆண்டு "வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தினை" (MDA) அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்படி கதர் உற்பத்தி மதிப்பின் மீது 20 விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியாக கதர் வாரியம் மற்றும் கதர் நிறுவனங்களுக்கு கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கி வருகிறது. மாநில அரசும் கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கி வருவதற்கு ஏற்ப, கதர் உற்பத்தி மதிப்பின் மீது 20 விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியினை, ஆண்டு முழுவதும் வழங்கி வருகிறது. மாநில அரசு 20142015ஆம் ஆண்டிலிருந்து சர்வோதய சங்கங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிடும் வணிக அபிவிருத்தி நிதியுதவியின் உச்சவரம்பினை ரூ.10.00 கோடியிலிருந்து ரூ.15.00 கோடியாக உயர்த்தியது. நடப்பாண்டில் இத் தொகை ரூ. 30.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### கிராமத் தொழில்கள்

கிராமப்புற ஏழை மக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல் என்ற முதன்மை நோக்கத்தினை பூர்த்தி செய்திடும் வகையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படுகின்ற தச்சு மற்றும் கருமாரத் தொழில், தோல்பொருட்கள் உற்பத்தி, சோப்பு தயாரித்தல், கைமுறை காகிதத் தொழில், மண்பாண்டத் தொழில் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற கிராமத் தொழில்களை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நடத்தப்படும் இந்த கிராமத் தொழில்கள் அனைத்தும் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு, இயன்ற அளவுக்கு மனித சக்தியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கிராமத் தொழில்கள் அனைத்திலும் அந்தந்தப் பகுதியின் பணியாட்களே பணியமர்த்தப்படுவதால் இவை கிராமப்புற கைவினைஞர்களின் கலைத்திறனை மேம்படுத்திக் கொள்ளவும், அவர்களது பாரம்பரியத் தொழிலை வளர்த்து பாதுகாக்கவும் பெரிதும் துணை புரிகின்றன.

### சோப்புத் தொழில்

தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 7 குளியல் சோப்பு உற்பத்தி அலகுகளும், 7 டிடர்ஜெண்ட் சோப்பு உற்பத்தி அலகுகளும், 3 சலவை சோப்பு உற்பத்தி அலகுகளும் உள்ளன.

குமரி, மூலிகா, குறிஞ்சி சந்தனம், வேம்பு, கிளிசரின் மற்றும் நித்தம் ஆகிய பல்வேறு வகையிலான குளியல் சோப்புகளை வாரியம் உற்பத்தி செய்து வருகிறது. வாரியம் உற்பத்தி செய்திடும் சோப்பு வகைகளுக்கான வணிக முத்திரை பதிவுக்கு வாரியம் விண்ணப்பித்துள்ளது. சந்தை நிலவரத்திற்கு ஏற்ப நியாயமான விலையில் பலதரப்பட்ட உபயோகிப்பாளர்களின் தேவைக்கேற்ப வாரியம் புதிய வகை சோப்புகளை அறிமுகம் செய்து வருகிறது. 2016-2017ஆம் ஆண்டில் 43 தொழிலாளர்களுக்கு வாரியம் அதன் சோப்பு உற்பத்தி அலகுகள் மூலம் வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது.

2016-2017ஆம் ஆண்டில் சோப்பு உற்பத்தி மதிப்பு ரூ.1002.61 இலட்சம் மற்றும் விற்பனை மதிப்பு ரூ.998.00 இலட்சம் ஆகும்.

### தச்சு மற்றும் கருமாரத் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் உள்ள தச்சு மற்றும் கருமாரத் தொழில்

அலகுகள் பாரம்பரிய திறமையுள்ள கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்து வருகின்றன. பள்ளிகொண்டா, அரக்கோணம், வீரராகவபுரம், திருப்பூர், நாஞ் சிக்கோட்டை, திருநெல்வேலி-பேட்டை மற்றும் நாகமலை-புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ஏழு தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகள் இயங்கி வருகின்றன. இந்த தச்சு மற்றும் கருமாரத்தொழில் அலகுகள் மரம் மற்றும் இரும்பு அறைகலன்களான மேஜை, நாற்காலி, அலமாரி மற்றும் இருக்கையுடன் இணைந்த மேஜை போன்றவைகளை அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றன.

2016-2017ஆம் ஆண்டில் இந்த தச்சு மற்றும் கருமாரத்தொழில் அலகுகளின் உற்பத்தி மதிப்பு ரூ.416.44 இலட்சம் மற்றும் விற்பனை மதிப்பு ரூ.416.44 இலட்சம் ஆகும்.

### தோல் தொழில்

மிகவும் பழமையான கிராமத் தொழில்களில் தோல் தொழில் ஒன்றாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அம்பத்தூர் (இரு அலகுகள்), வேலூர், திண்டுக்கல், மதுரை, திருச்சி, திருப்பூர், திருநெல்வேலி, ஈரோடு, கரூர், கோயம்புத்தூர், சேலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய 13 இடங்களில் காலணி அலகுகள் இயங்கி வருகின்றன.

காவல் துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை, சமூக நலத்துறை, போக்குவரத்து கழகங்கள் மற்றும் சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான தோல் பொருட்களை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காலணி அலகுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகின்றன. கதர் அங்காடிகள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த காலணி உற்பத்தி அலகுகள் மூலம் சுமார் 500 கைவினைஞர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றன.

2016-2017-ஆம் ஆண்டில் இந்த காலணி அலகுகளின் தோல் பொருட்களின் உற்பத்தி மதிப்பு ரூ.760.25 இலட்சம் மற்றும் விற்பனை மதிப்பு ரூ.758.00 இலட்சம் ஆகும்.

### 5.4 தேனீ வளர்ப்புத் தொழில்

வாரியத்தின் தேனீ வளர்ப்பு அலகு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அம்சியில் இயங்கி வருகின்றது. இம்மாவட்டத்தில் மார்த்தாண்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் சுமார் 2000 தேனீ வளர்ப்போரும், 10,000 தொழிலாளர்களும் தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

புதுதில்லி தேசிய தேனீ வாரியத்தில் அதன் நிரந்தர உறுப்பினராக "எப்" பிரிவில் (மாநில அளவிலான நிறுவனம்) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இணைக்கப்பட்டுள்ளது.

தேனீ வளர்போரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பச்சைத் தேன் மதிப்பு மற்றும் பதப்படுத்தப்பட்டு விற்பனை செய்த தேனின் மதிப்பு 2016-2017ஆம் ஆண்டில் முறையே ரூ.181.00 இலட்சம் மற்றும் ரூ.270.00 இலட்சம் ஆகும்.

### கைமுறை காகிதத் தொழில்

வாரியத்தினால் நடத்தப்பெறும் கைமுறை காகிதத்தொழில் அலகுகளில் காகிதக் கழிவுகள், பயன்படுத்தப்பட்ட மற்றும் சிதைந்த காகிதங்களை மறுசுழற்சி செய்து அவைகளை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி கச்சா அட்டை, கோப்பு அட்டை, மெல்லிய தாள், பாண்டுத்தாள்கள், கோப்பு மேலுறைகள், அட்டைப் பெட்டிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. கோவனூர், செண்பகப்புதூர், பிடாகம், மற்றும் உதகை ஆகிய இடங்களில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நான்கு கைமுறை காகித அலகுகள் இயங்கி வருகின்றன.

வாரியத்தினால் நடத்தப்பெறும் கைமுறை காகித அலகுகளின் மூலம் 2016-2017-ஆம்

ஆண்டில் 149 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கைமுறை காகித அலகுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை மதிப்பு 20162017ஆம் ஆண்டில் முறையே ரூ.64.27 இலட்சம் மற்றும் ரூ.63.00 இலட்சம் ஆகும்.

**மண்பாண்டத் தொழில்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு மண்பாண்ட கடலூர் மாவட்டத்தில் விருத்தாச்சலத்திலும், வீரப்பெருமாநல்லூரிலும் அமைந்துள்ளன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் 34 மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு 3,816 மண்பாண்டத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மாநிலத்தில் வாழும் 8175 எண்ணிக்கையிலான அனைத்து மண்பாண்டக் குடும்பங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியினை அதிகரித்திட நவீன மற்றும் இயந்திர முறையில் இயங்கும் சைலா சக்கரங்களை பல்வேறு கட்டங்களாக நான்கு ஆண்டுகளில் வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. 2016-2017-ஆம் ஆண்டில் 2000 பயனாளிகளுக்கு இதுபோன்ற மின்விசை சைலா சக்கரங்கள் வழங்கிட அரசு ரூ.4.08 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. மண்பாண்ட கூட்டுறவு சங்கங்களின் பணிக்கூடத்தினை பழுது நீக்கம் செய்து புதுப்பித்திட ரூ.1 கோடியும் புதிய பணிக்கூடங்கள் கட்ட ரூ.1 கோடியும் என அரசு ரூ.2 கோடியை அரசு முதற்கட்டமாக ஒப்பளிப்பு செய்துள்ளது.

மண்பாண்டத் தொழிலாளர்கள் மழைக்காலங்களில் சந்திக்கும் இடர்பாடுகளை கருத்தில் கொண்டு 2014-2015-ஆம் ஆண்டிலிருந்து பயனாளி குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ரூ.4,000/- வீதம் பராமரிப்பு உதவித் தொகை அரசு வழங்குகிறது. 2016-2017-ஆம் ஆண்டில் பராமரிப்பு உதவித்தொகைக்கென அரசு ரூ.489.44 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. 12199 7 மண்பாண்டத் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு உரிய மாவட்ட ஆட்சித்தலைவர்களால் மின்னணு தீர்வு சேவை மூலம் மொத்தத் தொகையும் வழங்கப்பட்டுவிட்டது.

**விற்பனை நிலையங்கள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் துணி வகைகள் மற்றும் பல்வேறு கிராமப்பொருட்களைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்வதற்கென வாரியம் **'காதி கிராப்ட்'** என்ற பெயரில் மாநிலம் முழுவதும் 90 விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இத்துடன் பண்டிகை காலங்களில் முக்கிய இடங்களில் தற்காலிக விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மட்டுமல்லாது, சுயஉதவிக்குழுக்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களும் இந்த கதரங்காடிகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வாரியம் நடத்திவரும் விற்பனை நிலையங்களில் சென்னை குறளகத்தில் அமைந்துள்ள **"காதி கிராப்ட்"**, மிகப் பெரியதாகும். இதில் அமைந்துள்ள இயற்கை சிகிச்சை மையத்தில் கதரங்காடியின் வாடிக்கையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு குறைந்த கட்டணத்தில் நீராவிக் குளியல், தண்டுவட குளியல், மண் குளியல் மற்றும் எண்ணெய் மசாஜ் போன்ற இயற்கை முறை சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கதர் கிராமப்பொருட்களை பிரபலப்படுத்தவும் விற்பனையினை அதிகரிக்கவும் சென்னை, இதர மாவட்ட தலைமையிடங்கள், முக்கிய நகரங்கள், கிராமங்களில் கண்காட்சிகளும், சிறப்பு விற்பனை முகாம்களும் நடத்தப்படுகின்றன. தசரா காலத்தில் சென்னை குறளக கதரங்காடியில் நடைபெறும் வருடாந்திர கொலு விற்பனை கண்காட்சி பிரசித்தி பெற்றதாகும். இக்கண்காட்சி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பதிவு செய்துள்ள மண்பாண்ட கூட்டுறவு சங்க உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய மற்றும்

நிகழ்கால கலைநயம் மிக்க காகித கூழ் மற்றும் மண் பொம்மைகளைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்திடுவதற்கு உகந்த தளமாகத் திகழ்கிறது.

### பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

கதர் கிராமத் தொழில் ஆணையம் 2008 -2009-ஆம் ஆண்டில் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை ஒருங்கிணைத்து **பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தினை** அறிமுகப்படுத்தியது. கதர் கிராமத் தொழில் ஆணையம், மாவட்ட தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகியவைகளால் கூட்டாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் தொழில் தொடங்க 25 விழுக்காடு முதல் 35 விழுக்காடு விளிம்புத் தொகை மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஜுலை 2016 முதல் விண்ணப்பித்தல், ஆய்வு செய்தல், செயல்படுத்துதல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் கணினி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


### கதர் கிராமத் தொழில் வாரிய அலகுகளை நவீனமயமாக்கல்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடத்தி வரும் பல்வேறு உற்பத்தி அலகுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியினை அதிகரித்திடும் வகையில் இவ்வலகுகளை நவீனப்படுத்திட மாநில அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் **கிராமிய நூற்பு நிலையங்கள், அம்பத்தூர் காலணி அலகு,** சமயபுரம் **சோப்பு அலகு, சமயபுரம் எண்ணெய் பிழியும் அலகு ஆகியவை** நவீனப்படுத்தப்பட்டுள்ளன. பள்ளிகொண்டா தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகில் புதிய கட்டடத்துடன் நவீன இயந்திரங்கள் ரூ.65 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் அரக்கோணம் தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகில் ரூ.25 இலட்சம் மதிப்பில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் அம்சியில் தேன்பதப்படுத்தும் அலகில் புதிய கட்டடம் கட்டுமானப் பணி, நவீன தேன் பதப்படுத்தும் மற்றும் தானியங்கி தேன் நிரப்பும் இயந்திரங்கள் நிறுவப்படவுள்ளன. இந்த நவீன வசதிகள் அமைக்கும்பணி நிறைவு பெற்ற பின்பு இந்த அலகின் தேன்பதப்படுத்தும் திறன் தற்போதைய அளவான நாளொன்றுக்கு 300 கிலோ என்பதிலிருந்து 800 கிலோவாக அதிகரிப்பதுடன் அழகிய பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் வேடபட்டியில் உள்ள ஜவ்வாது அலகினை நவீனப்படுத்திடும் நடவடிக்கை ரூ.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த அலகில் ரூ.22 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு ரூ.6.31 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. மண்பாண்டங்கள் தயாரிப்பில் நவீன சூளைக்கென புதிய சுடுதிறன் கொண்ட சூளை விருத்தாசலம் பீங்கான் கலைக்கூடத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. உட்புறத் துணியுடன் கூடிய காகித உறை தயாரிக்கும் ஒருங்கிணைந்த நவீன இயந்திரம் கோவனூர் கைமுறை காகித அலகில் ரூ.3.84 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. உபயோகப்படுத்தப்பட்ட, சிதைந்த காகிதங்களை மறுசுழற்சி செய்திடும் வகையில் கைமுறை காகிதம் தயாரிக்கும் புதிய அலகினை கடலூர் மாவட்டம் வடலூரில் உள்ள சோப்பு அலகு வளாகத்தில் நிறுவிட அரசு ரூ.90 இலட்சம் ஒப்பளித்துள்ளது. கதர் அங்காடிகளை நவீனப்படுத்தி புனரமைத்திடும் நடவடிக்கையினை வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் நெய்வேலி கதர் அங்காடிகளை ரூ.43.37 இலட்சம் மொத்த செலவில் நவீனப்படுத்தப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016-2017ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய அலகுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு.

| வ.எண் | தொழில்களின் பெயர் | 2016-2017ஆம் ஆண்டில் எய்தப்பட்டது (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1469.39 | 2063.39 |
| 2. | கிராமத் தொழில்கள் | | |
| | அ. தோல் | 760.25 | 758.00 |
| | ஆ. தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 416.44 | 416.44 |
| | இ. சோப்பு | 1002.61 | 998.00 |
| | ஈ. கைமுறைக் காகிதம் | 64.27 | 63.00 |
| | உ. தேனீ வளர்ப்பு | 181.00 | 270.00 |
| | ஊ. இதர தொழில்கள் | 88.21 | 500.00 |
| | **கூடுதல்** | 2512.78 | 3005.44 |
| | **மொத்த கூடுதல்** | **3982.17** | **5068.83** |




**கடந்த ஐந்தாண்டுகளில் கதர் கிராமப்பொருட்களின் விற்பனை**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பொருட்கள் விற்பனை வரலாற்றில் 2016-2017-ஆம் ஆண்டு எய்தப்பட்ட ரூ.50 கோடிக்கு மேற்பட்ட விற்பனையே அதிகபட்சமானதாகும்.

### அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட நிகர ஈட்டு மானியமும், கதர் பொருட்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவியினையும் மாநில அரசு ஒப்பளித்து வருகிறது. 2017-2018-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு **மொத்தம் ரூ.12141.04 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் அவர்களே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைவராவார். அரசினால் நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் வாரியத்தின் உறுப்பினர்கள் ஆவர். திட்டங்களை செயல்படுத்திடுவதற்காக மேற்கொள்ளப்படும் முக்கிய கொள்கை முடிவுகளை வாரியம் மேற்கொள்கின்றது. வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் வாரிய உறுப்பினராக உள்ள தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **எஸ்.நடராஜன்,** தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம். ●

# குறு, சிறு நடுத்தரத்தொழில் நிறுவனங்களில் தொழில்நுட்ப மேம்பாடு : தேவையான விளைவுகளுக்கான நோக்கங்கள், ஆதாரங்கள் மற்றும் வழிவகைகள்

- பாலசுப்ரமண்யமுங்கிலா ஹில்லிமனே

## 1. முன்னுரை

உலகெங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் கொள்கை வகுப்பவர்களால் மிகவும் அத்தியாவசியமாக கருதப்படும் ஒரு துறையாகும். ஏனெனில் அவை, வேலை வாய்ப்பு, உற்பத்தி, ஏற்றுமதிக்குப் பெரும் பங்களிக்கின்றன. அவர்களால் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைத்து நிற்கும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, வேலை வாய்ப்புகள் பெருகி, தொழில்மயமாக்கல் போற்றப்பட்டு, புதிய கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்டு பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறைகின்றன (OECD 2017) தற்போதுள்ள உலகமயமாக்கலில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் திறந்த நிலை சுற்று சூழலை ஏற்றுக்கொண்டு, முன்னேற வழிவகை செய்யப்பட்டு, மின்மய மாற்றங்களை ஏற்றுக்கொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கு உரமிட்டு, எல்லோரையும் உள்ளடக்கிய உலக மயமாக்கலை ஏற்படுத்த அவைகளுக்கு உதவ வேண்டும் (OECD 2017).

பல அளவுகளில் உள்ள நிறுவனங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சி பெற ஏதுவான தொழில்நுட்பத்தை பெறுவதில் பல பிரச்சினைகள் உள்ளன. குறு, சிறு மற்றம் நடுத்தர நிறுவன முனைவோரிடம் குறைவான மனித வளங்களும், நிதி ஆதாரமும் உள்ளதால் அவைகள் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய கருவியாக பயன்படுத்த முடிவதில்லை. இவைகள் எல்லாம் தாங்களே தொழில்நுட்ப மேம்பாடு அடைவதற்கான தடைக்கற்களாக உள்ளன (புரட்டி & பென்கோ 2001). ஆகவே, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களுடைய தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு அந்நிய தொழில்நுட்பங்களையே நம்பியுள்ளன. இந்த நிலைமை தொழில்வளர்ச்சி அடைந்த நாடுகளுள், தொழில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் ஆகிய இரண்டுக்குமே பொருந்தும்.

1947முதல், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களைப் போற்றுவிக்கும் சிறப்புக் கொள்கைகளால் உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவிற்கு ஒரு நல்ல இடம் உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உலகளவில் காணப்படும் நன்மைகளும் பிரச்சினைகளும் இந்திய நிறுவனங்களுக்கும் பொருந்தும். இந்த நிறுவனங்கள் இந்தியப் பொருளாதாரத்திற்கு மிகுந்த பங்களிக்கின்றன: 2015-16ல் இந்தத் துறைகளில் 5,10,00,000 தொழில்கள் இருந்து அவற்றில் 11,70,00,000 பேர் பணி செய்தனர். தற்போதுள்ள விலை நிலவரப்படி இந்த நிறுவனங்களின் ஏற்றுமதி மதிப்பு ரூ.84,920 கோடியாக இருந்தது. அவர்களின் மொத்த உற்பத்தி 1,81,000 கோடியாக இருந்தது (நிலையான விலைவாசி அளவில் 2012/13) (இந்திய ரிசர்வ் வங்கி 2017). 2014-15இல் இந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30.74 சதவிகிதமாக இருந்தது. இதில் பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பங்களிப்பு 6.11 சதவிகிதமாகவும் சேவைகள் துறையில் 24.63 சதவிகிதமாகவும் இருந்தது (குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் 2017). இந்த வகையில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் இந்தியப் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய தூணாக விளங்குகிறது. அவர்களின் பலதரப்பட்ட நல் விளைவுகளும் நிலைத்து நிற்கும் பங்களிப்பும் இருந்தும்கூட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், குறிப்பாக அமைப்பு சாரா துறையில், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புதியன கண்டுபிடிப்பு சார்ந்த பலவீனங்களைக் காட்டுகின்றன (அமைப்பு சாரா துறை நிறுவனங்களின் தேசிய கமிஷன், 2009). ஆகவே, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் நிலைத்து நிற்கும் தொழில் மேம்பாட்டைப் போற்றுவதற்கு பொதுவான செயல்முறைகளைப் புகுத்த நல்ல வாய்ப்பு அமைந்துள்ளது. இதற்கு, தொழில்நுட்ப மாற்றுத் திட்டம்

சிறப்பாகப் பயன்படும். இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் சிலவற்றைத் தவிர மற்றவைகளில் மிகக்குறைந்த அளவே தொழில்நுட்ப பயன்பாடு உள்ளது. ஆகவே அவை உலகளவில் வளர்ந்துவரும் சந்தையில் அவர்களுக்கு தொல்லைகள் ஏற்படுகின்றன (பாலாசுப்ரமண்யா, 2014). உண்மையில் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் வளர்ச்சிக்கு ஒரு நிறுவனத்திற்கு அதி நவீன பொருள் உற்பத்தித் தொழில்நுட்பம் தேவைப்படுகிறது. (ஸ்கேனல், மற்றவர்கள் 2012). ஆனால், அவர்களின் செயல்பாட்டு அளவைப் பார்க்கும் போது, இந்திய குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளில் முதலீடு செய்ய முடியாத நிலை மட்டுமல்ல, அதிநவீன பொருள் உற்பத்தி தொழில்நுட்பங்களை அதிக விலை காரணமாக சந்தையிலிருந்து வாங்க முடியாத நிலைமையும் உள்ளது (இந்திய அரசு 2010).

இந்த நிலையில், இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களுடைய தொழில் நுட்பங்களை மேம்படுத்திக் கொள்ள என்னவகையான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை விவாதிப்பது சரியாகவே இருக்கும். இந்த நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப மாற்றம் எப்படி பயனுள்ளதாக இருக்கும்? எந்த நோக்கங்கள், ஆதாரங்கள், வழிமுறைகள் நிறைவுகள் அவர்களை தொழில்நுட்ப மாற்றங்களுக்கு உந்துகின்றன. இந்தத் தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்பங்கள் பழமையாகி விடாமல் இருக்க என்னவகையான பொது ஆதரவுக் கொள்கைகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகள் இந்தக் கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றன.

## 2. தொழில்நுட்ப மாற்றம்: அர்த்தமும், முக்கியத்துவமும்:

தொழில்நுட்பம் என்பது காப்புரிமை பெறப்படக்கூடிய தொழில்நுட்ப உத்திகள், திட்டங்கள், செய்முறைகள், சூத்திரங்கள் ஆகியவைகளாகும் (இநாஸ் 1989). இந்தத் தொழில்நுட்ப மாற்றம் உள்நாட்டிலுள்ள ஒரு நிறுவனத்திலிருந்தோ, வெளிநாட்டிலுள்ள ஒரு நிறுவனம் மற்றும் அமைப்பிலிருந்தோ பெறக்கூடியதாக இருக்கலாம் (ஸ்மித் 1980). மற்றொரு வகையில் தொழில்நுட்பம் என்பதை பொருளாதாரத் திறன் மேம்பாட்டிற்குத் தேவையான அறிவு என்றும் கூறலாம். ஆகவே, இது காப்புரிமை பெறத்தக்க ஒரு பொருளின் அமைப்பு, செயல்பாடு அல்லது உற்பத்தி முறையாக இருக்கலாம் அல்லது நிர்வாக அமைப்பு விநியோகம் மற்றும் பிற நிர்வாக அறிவு சார்ந்த திறன்களாக இருக்கலாம் (ஸ்டுவர்டு 1977).

ஒரு நிறுவனம், தானே தொழில்நுட்ப மேம்பாடு அடைவதற்கு மாற்றாக இருப்பதை தொழில்நுட்ப மாற்றம் என்று கொள்ளலாம். ஆகவே, ஒரு நிறுவனத்தின் தொழில்நுட்ப அணுகுமுறை என்பது அந்த நிறுவனத்திலேயே உருவாக்கப்படும் நவீன தொழில்நுட்பமாக இருக்கலாம். அல்லது வெளியிலிருந்து பெறப்பட்டவையாக இருக்கலாம் (ஸகரா, மற்றவர்கள் 1994). இது, பெரிய தொழில்நிறுவனங்கள், குறு, சிறு, மத்திய தர தொழில் நிறுவனங்கள் இரண்டுக்குமே பொருந்தும் (ஸகரா 1996). வளரும் நாடுகளிலுள்ள இது போன்ற நிறுவனங்கள் வெளியிலிருந்து தொழில்நுட்பத்தைப் பெறுவதையே விரும்புகின்றன, ஏனெனில் அவர்களுடைய வளங்கள் குறைந்த அளவிலேயே உள்ளன. குறைந்த வளங்கள், திறமைகள் மற்றும் நேரம் போன்ற காரணங்களால் நிறுவனத்திலேயே புதிய தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்குப் பதிலாக வெளியிலிருந்து வாங்குவது சிறந்தது என்று நினைக்கிறார்கள் (ஸ்டாக் மற்றும் டட்டிக்கொண்டா, 2004). வெளியிலிருந்து தொழில்நுட்பத்தைப் பெறுவதை பொதுவாக செய்யப்படும் தொழில்நுட்ப மாற்றம் வழியாக மேற்கொள்ளலாம். இந்த முறையில், ஒரு பல்கலைக் கழகத்திடமிருந்தோ, ஆய்வு மையத்திலிருந்தோ, ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் துறையிலிருந்தோ ஒரு நிறுவனத்திடமிருந்தோ மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றப்படுவதை தொழில்நுட்ப மாற்றம் என்று கொள்ளலாம் அல்லது வழங்குபவர், பெறுபவர் இருவருமே கூட்டாக உருவாக்கலாம் (கிம் 1990).

இந்த நிலையில், “தொழில்நுட்பம் என்பதை அறிவுசார்ந்ததாகவும், ஒரு உத்தியாகவும் ஒரு திடப்பொருளாகவும் கொள்ளலாம். மாற்றம் என்பது, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து ஏதாவது ஒரு முறையில் இந்த தொழில்நுட்பம் பரிமாற்றம் செய்யப்படும் நிலையாகும். ஆகவே, இதன்படி பார்க்கும்போது, குறு, சிறு நடுத்தர நிறுவனங்களுக்கு பரிமாற்றம் செய்யப்படும் தொழில்நுட்பம் என்பது ஏற்கனவே உள்ள உற்பத்தியின் அளவு அல்லது தரத்தை மேம்படுத்த வல்லதாக இருப்பதாகும்.

## 3. தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப மாற்றத்தின் பலன்கள் : நோக்கங்கள், ஆதாரங்கள், வழிமுறைகள் மற்றும் சாதனைகள்

பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் போட்டித்தன்மை நிலைத்து நிற்க தங்களுடைய தொழில்நுட்ப அடிப்படை வளங்களை எப்படி பயன்படுத்துகிறார்கள், வளர்த்துக்கொள்கிறார்கள் என்பதைச் சார்ந்துள்ளது (லாங்டாட் மற்றும் ஸ்வான் 2000). தொழில்நுட்ப அணுகுமுறையின் நோக்கம் ஒரு நிறுவனம் தொழில்நுட்பத்தை வாங்கி மேம்படுத்தி தன்னுடைய தொழிலில் அதைப் பயன்படுத்தி போட்டிமிக்க ஒன்றாக விளங்குவதாகும். இந்த நிலையில் ஒரு நிறுவனம் இரண்டு வகையான முடிவுகளை மேற்கொள்ளவேண்டும். ஒன்று, தானே தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது. இது ஒரு சவாலான நிலையாகும். இரண்டாவது, மற்றவர்களிடமிருந்து ஏற்கனவே சிறப்பாக செயல்படும் தொழில்நுட்பத்தை வாங்குவது இது அதிக சவால் இல்லாத நிலையாகும். ஒரு நிறுவனம் தானே ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு திட்டங்களை மேற்கொள்வதற்கு அதிக செலவாகும் என்பதால் மற்றவர்களிடமிருந்து தொழில்நுட்பத்தை வாங்கும் நிலைமை அதிகரித்துள்ளது (நூரி, 1990). பொதுவாக, ஏற்கனவே சிறப்பாக செயல்படும் ஒரு தொழில்நுட்பத்தை பிறரிடமிருந்து வாங்கிப் பயன்படுத்தும் போது, மேலும் திறம்பட்ட பொருளை உற்பத்தி செய்யமுடியும் என்ற நிலைமை உள்ளது (லாங்டாட் மற்றும் ஸ்வான் 2000). குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள், குறிப்பாக தொழில்மயமாகி வரும் நாடுகளில், தங்களுடைய தொழில்நுட்பப் பற்றாக்குறையைப் போக்கிக் கொள்ள வெளியிலிருந்தே அதைப் பெறுகின்றனர். இதற்குக் காரணம், அவர்களால் உலகச்சந்தையில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாமையேயாகும். அவர்கள் தொழில்நுட்ப மேம்பாட்டை அலட்சியப் படுத்தியிருக்கலாம், அல்லது ஆய்வு மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்யாமல் இருந்திருக்கலாம் அல்லது சிறிதளவே முன்னேற்றம் கண்டிருக்கலாம் இதற்கு காரணம், அவர்களிடம் உள்ள தொழில்நுட்பம் சார்ந்த அறிவு, அனுபவம், திறன் மற்றும் நிதி குறைபாடுகளாகும். ஆகவே, பல வழிகளில் குறு, சிறு, நடுத்தர தொழில்நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாடு பெற கொள்கை அளவில் ஆதரவு உள்ளது (ரோமிஞ்ன் 2001).

குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் வெளியிலிருந்து தொழில்நுட்பத்தைப் பல வழிகளில் பெறலாம். அதில் சிலவற்றை இங்கே காணலாம் (டேய்ம் மற்றும் கோச்சா 2008) :

- ஒரு பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக முதலிடுவது.
- பணியாளர்களுக்கு உயர்கல்வி அளித்து அதன்மூலம் தொழில்நுட்பம் பெறுதல்.
- வெளியே உள்ள ஆய்வு மற்றும் மேம்பாட்டு மையத்தைப் பயன்படுத்திக்கொள்ளுதல்.
- வெளிச்சந்தையில் கிடைக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டறிய ஆலோசகர்களை நியமித்தல்.
- மற்றவர்களிடமிருந்து தொழில்நுட்பத்தைப் பெற உரிமம் பெறுதல்.
- மாற்று தொழில்நுட்பங்களை மதிப்பிட தொழில்நுட்ப கூட்டங்கள் தொழில்நுட்ப இதழ்கள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளை பயன்படுத்துதல்.
- தற்போதுள்ள தொழில்நுட்பத்தைப் பெற ஏற்கனவே உள்ள பொருள் வழங்குவோரிடமிருந்து பெறுதல் அல்லது மற்ற வணிக முறைகளில் பெறுதல்.

தொழில்நுட்பப் பரிவர்த்தனையை செங்குத்து தொழில்நுட்பப் பரிமாற்றம், கிடைமட்டத் தொழில்நுட்ப பரிமாற்றம் என்று இரண்டாகப் பிரிக்கலாம். செங்குத்துத் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆய்வு சார் விளைவுகளை செயல்பாட்டுக்குப் பயன்படுத்தி, பிறகு அது ஒரு பொருளாக, சேவையாக மாறி உருவெடுத்து, விற்பனையாகும் வகையில் செய்யப்படும் மாற்றமாகும். இப்படிப்பட்ட பரிமாற்றங்கள் இரு வழியிலும் நடைபெறும். அப்படி நடைபெறும்போது, தகவல்களின் வடிவம் மாறிக்கொண்டே வரும். ஆனால், கிடைமட்டத் தொழில்நுட்ப பரிமாற்றம் ஒரு இடத்தில் அல்லது நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் தொழில்நுட்பம் இன்னொரு இடத்திற்கோ, நிறுவனத்திற்கோ வழங்கப்படுவதால் ஏற்படுவதாகும் (இனோஸ் 1989). இப்படிப்பட்ட கிடைமட்டத் தொழில்நுட்பப் பரிமாற்றம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

தொழில்நுட்பப் பரிமாற்றத்தில் முதற்கட்டமாக இயந்திரங்களும், கட்டமைப்பு வசதிகளும் இடம் மாறும். ஆனால், முக்கியமான இரண்டாவது கட்டம் அவைகளை இயக்கக்கூடிய தொழிலாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதாகும். இரண்டாவது, கட்டமே மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் வாங்கப்பட்ட

தொழில்நுட்பத்தைத் தங்களுடைய துறையில் பயனளிக்கும் வகையில் பயன்படுத்தவேண்டும் என்றால் அந்தத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் திறமை மிகவும் அத்தியாவசியமாகும். இடம் மாற்றம் செய்யப்படுவது மட்டுமல்லாமல், இதில் தனி நபர் மேம்பாடு உள்ளடங்கி உள்ளது. இந்தத் தொழில்நுட்ப செயல்திறன், அறிவியலாளர்கள், பொறியாளர்கள் மட்டுமல்லாமல் கடைநிலை பணியாளர்கள் வரை போய்ச்சேர வேண்டும். இதற்கு, முக்கியமான முன் தகுதி நிலைமை என்னவென்றால், இதற்கு ஏதுவாக, அந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் புதிய தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்(பிஸ்சாஃப் 2001). ஆகவே, இடம் பெயர்ந்து வரும் தொழில்நுட்பத்தை முழுவதுமாக ஈர்த்துக்கொள்ளக்கூடிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வெளியிலிருந்து வரும் தொழில்நுட்பத்தை திறமையாகவும், வெற்றிகரமாகவும் பயன்படுத்துவார்கள்.

தொழில்நுட்பப் பரிமாற்ற வழிகள் மற்றும் அதன் வெற்றி எங்கிருந்து இந்த தொழில்நுட்பத்தை ஒரு நிறுவனம் பெறுகிறது என்பதை சார்ந்திருக்கும். வியாபார நோக்கம் அல்லாத அமைப்புகளிலிருந்து பெறப்படும் தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் புதிதாக துவக்கப்படும் பெருமளவிலான நிறுவனங்களுக்கும் ஏற்கனவே உள்ள வியாபார நிறுவனங்களுக்கும் புதிதாக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் பயன்படுகின்றன (பார்க்கர் மற்றும் சில்பர்மேன் 1993; ப்ராக்டர் 1993). நடைமுறை தொழில்நுட்பப் பரிமாற்றம் சார்ந்த ஏடுகளில் கூறப்படுபவன ;

(i) பல்கலைக்கழகங்களிலிருந்து தனியார் நிறுவனங்களுக்கு பரிமாற்றம் (பார்க்கர் மற்றும் சில்பர்மேன் 1993; ப்ராக்டர் 1993).

(ii) அரசு சார்ந்த ஆய்வுக்கூடங்கள் மற்றும் துணை அமைப்புகளிடமிருந்து தனியார் நிறுவனங்களுக்குப் பரிமாற்றம் (கோல், 1992)

(iii) தனியார் தொழில் நிறுவனங்களுக்கு இடையே ஏற்படும் பரிமாற்றம் (சக்ரவர்த்தி, மற்றவர்கள் 1993; பழனிசாமி மற்றும் பிஷப் 1993)

உலகளவில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஒப்பந்த அடிப்படையிலேயே ஏற்படுகிறது (வினான்சி 1996). ஆனால், இந்தத் தொழில்நுட்பப் பரிமாற்றம் எந்த அளவுக்கு வெற்றி அடைகிறது என்பது வழங்குவோர், பெறுவோர் இருவர்களுடைய தனிப்பட்ட ஈடுபாட்டை சார்ந்தது. இந்த இருவருக்குமிடையே, ஊக்கக்குறைவு ஏற்பட்டால், அதனால், ஒப்பந்தம் மேற்கொள்ளும் திறமும், பரிமாற்றத்தால் ஏற்படும் விளைவுகளும் பாதிக்கப்படும். இன்னொரு முக்கியமான அம்சம், தொழில்நுட்பத்தை வழங்கும் நிறுவனம் எந்த அளவிற்கு இந்த செயலில் ஈடுபாட்டோடு உள்ளது அதாவது, எந்த அளவிற்கு தொழில் நுட்பத்தை முழுமையாக அதை சார்ந்த அறிவையும், அனுபவங்களையும் வழங்குகிறது என்பதை பொறுத்துள்ளது. புதிய தொழில்நுட்பத்தை அறிந்து கொள்ளும் வசதிகள், இல்லாத குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தொழில்நுட்பப் பரிமாற்ற வழிவகைகள் மிகவும் முக்கியமாகும் (ப்ரைசன், 2001). பொதுவாக குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்குப் பெறப்படும் தொழில்நுட்பத்தின் மதிப்பு தொழில்நுட்பங்களின் ஆதாரங்கள் ஆகியவை சார்ந்த விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. அவைகளைப் பயன்படுத்துவதில் உள்ள தயக்கத்தால் அவர்கள் பிறருடைய ஒத்துழைப்பை நாடுகிறார்கள். தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் இரண்டு வகையில் ஏற்படலாம். அதாவது, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களிடையே பரஸ்பர தொழில்நுட்ப பரிமாற்றம் அல்லது வெளியே இருந்து பெறப்படும் தொழில்நுட்பம் தொழில்நுட்பப் பரிமாற்ற வலைத் தொடர்பில் உள்ள குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தகவல் பரிமாற்றம் (விளக்கக் கட்டுரைகள் மற்றும் அடிப்படைத் தகவல்கள்) தொழில்நுட்ப பரிமாற்றம் (ஆய்வு மற்றும் மேம்பாட்டு தணிக்கைகள்) திறன்சார் பரிமாற்றம் (பயிற்சி) மற்றும் சிறப்பு ஆதரவுகள் (நிதிசார் வழிகாட்டுதல்கள்).

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு செய்யப்படும் தொழில்நுட்ப வருமான மாற்றங்களின் செயல்பாடு, பலவகையான அமைப்பு சார்ந்த காரணங்களை சார்ந்ததாகும். அவைகளாவன : நிறுவனத்திலேயே இருக்கும் தொழில்நுட்பப் பணியாளர்கள், வெளியிலிருந்து அளிக்கக்கூடிய அறிவுசார் அமைப்புகள் (நிறுவனங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள்) அரசியல், சட்ட மற்றும் நிர்வாகச் சூழ்நிலைகள் மற்றும் அறிவுசார் தகவல்கள் பரிமாற்றத்தை செய்யும் அமைப்பு முறை ஆகியனவாகும். ஆனால், இவை ஒவ்வொன்றும் ஒரே அளவிலான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று கூற முடியாது. இது, ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு தொழில் துறைக்கும் ஏற்றவாறு இது மாறுபடலாம்.

**தொழில்நுட்பப் பரிமாற்றங்களால் ஏற்படும் பயன்களாவன:**

(i) புதிய பொருள்களின் எண்ணிக்கை அதிகரித்தல், (ii) புதிய பொருள் உருவாக்குவதற்குத் தேவையான கால அளவு குறைப்பு. (iii) புதிய பொருள் உற்பத்தியின் செலவு குறைவால் ஏற்படும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு. (iv) விற்பனை அதிகரிப்பு ; இவைதான் முக்கிய பயன்களாகும் (டேய்ம் மற்றும் கச்சோக்லு, 2008). ஒரு நிறுவனத்தில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் எந்த அளவிற்கு உள்ளடங்கி உள்ளதோ அந்த அளவிற்குத்தான் வெளியிலிருந்து பெறப்படும் தொழில்நுட்பப் பரிமாற்றத்தால் பயன்கள் கிடைக்கும் என்பதை நடைமுறை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன (தசி மற்றும் வாங் 2008). சமீபத்தில், பெங்களூருவைச் சேர்ந்த பொறியியல் சார்ந்த குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களிடையே இப்படிப்பட்ட நிலைமை காணப்பட்டது. தொழில்நுட்பப் பரிமாற்றத்தோடு சேர்ந்து ஒரு நிறுவனத்தின் உள்ளேயே புதியன கண்டுபிடிக்கும் திறமைகளும், போட்டித்திறன்களும் மிகுந்திருந்தால் அவைகளுடைய பொருளாதாரச் செயல்பாடுகள் மேம்பட்டதாக இருக்கும். ஆகவே, தொழில்நுட்ப பரிமாற்றத்தால் நல்ல விளைவுகள் ஏற்பட வேண்டுமென்றால் இந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உள்ளேயே தொழில்நுட்பப் பொருளாதார வலிமைகள் இருக்கவேண்டும் (பாலசுப்ரமண்யா 2015).

இத்தகைய விவாதங்களின் அடிப்படையில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட கொள்கை அளவிலான ஆதரவை கணக்கில் கொண்டு நோக்கங்கள், ஆதாரங்கள், வழிமுறைகள் மற்றும் ஏற்படக்கூடிய சாதனைகள் சார்ந்த ஒரு கொள்கை வடிவமைப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது (படம் 1இல் உள்ளது போல)

## 4. தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் : ஒரு கொள்கை வடிவமைப்பு

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்நாட்டுச் சந்தைகளிலும், வெளிநாட்டுச் சந்தைகளிலும் போட்டி மிக்கவையாக விளங்க அவர்கள் தொழில்நுட்ப மேம்பாடு பெறுவது அத்தியாவசியமாகும். ஏனெனில் நாம் அடிக்கடி பார்த்திருப்பதைப்போல குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் மிக முக்கியமான பின்னடைவுகள், அவர்கள் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் பழமையாக ஆகிவிடுவதால்தான். ஆகவேதான், இந்த நிறுவனங்கள் உலகளவில் போட்டிமிக்கதாக விளங்க வேண்டும் என்றால் தொழில்நுட்ப மேம்பாடு அவசியமாகிறது (குறு, சிறு, நடுத்தர அமைச்சகம், டிஃபாக் 2017).

### 4.1 தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் நோக்கங்கள்

தொழில்நுட்பப் பரிமாற்றத்தால் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பலவகையான பயன்கள் கிடைக்கின்றன. பொதுவாக, தங்கள் நிறுவனத்திலேயே ஆய்வு மற்றும் மேம்பாட்டு வழிகளில் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டிய திறமைகள் இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் குறைவே. ஆய்வு மற்றும் மேம்பாட்டு வழிமூலம் தொழில்நுட்ப மேம்பாட்டை உருவாக்க முதலிடுவதில் உள்ள ஆபத்துக்களை அவர்கள் அறிவார்கள், முதலிடும் சக்தியும் இல்லை. இது அல்லாமல், நிறுவனத்திலேயே ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றம் நீண்டகாலம் பிடிக்கும். ஆகையால், புதியன உருவாக்குவதில் தாமதம் ஏற்படும். ஆகவே, தொழில்நுட்ப மேம்பாட்டை விரைவாக ஏற்படுத்தவும் செலவுகளைக் குறைக்கவும் நிறுவனத்திற்குள் உள்ள தொழில்நுட்ப வலிமை குறைவையும் கணக்கில் கொண்டு இந்தக் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொழில்நுட்பப் பரிமாற்றத்தையே விரும்புகிறார்கள். சில சமயங்களில், இந்த நிறுவனங்கள் அதிக அளவிலான பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவும், புதிய பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவும் அல்லது வெளிநாட்டு சந்தையில் போட்டியிடவும், தொழில்நுட்பப் பரிமாற்றத்தை விரும்புகிறார்கள்.

### 4.2. தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கான ஆதாரங்கள் மற்றும் வழிவகைகள்

தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குப் பலவகையான வழிகள் உள்ளன. அவைகளாவன :

(i) தொழில்நுட்பம் சார்ந்த தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகம் செயல்படுத்தும்

இந்நிறுவனங்களுக்கான மேம்பாட்டுக் கமிஷன் நடத்தும் தொழில்நுட்ப வங்கி மூலம் அளிக்கப்படுகிறது (குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான மேம்பாட்டுக் கமிஷன் 2017).

(ii) ஒரு பல்கலைக்கழகம் அல்லது பொறியியல் கழகம் (இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், தேசிய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம் அல்லது பொறியியல் கல்லூரிகள் போன்று) அவர்கள் தங்கள் ஆய்வுக்கூடங்களில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களோடு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த ஆய்வுகளின் அடிப்படையில் விளைந்த பயன்களை பரிமாற்றம் செய்யலாம் அல்லது தாங்களே உருவாக்கிய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களோடு உத்திகளை வழங்கலாம். டிஃபாக் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கிடையே பரிமாற்ற வசதிகள் (டிஃபாக் 2017).

(iii) இந்திய அரசு ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் துறையில் தோற்றுவித்துள்ள தொழில்நுட்ப ஆய்வு மையம், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நம் நாட்டிற்குள் இருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தொழில்நுட்பப் பரிமாற்றம் பெற உதவலாம்.

(iv) அரசின் அறிவியல் மற்றும் தொழில்சார் ஆய்வுக் கவுன்சிலின் பல்வேறு ஆய்வுக்கூடங்களின் கண்டுபிடிப்புகளை விற்பனை செய்யும் தேசிய ஆய்வு மேம்பாட்டுக் கார்ப்பரேஷன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழிற்நுட்பப் பரிமாற்றத்தைச் செய்ய உதவுகிறது.

தேசிய பொருள் உற்பத்தி போட்டித்திறன் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (NMCP) (DCMSMEs, 2014).

(v) நாட்டிலுள்ள ஒரு பெரிய நிறுவனம் தனியார் துறையிலோ, பொதுத் துறையிலோ அல்லது பன்னாட்டு நிறுவனமாக வோ இருக்கலாம், அதனோடு உதிரிப் பொருட்களை தயார் செய்து அளிக்கும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள். உயர்தர உதிரி பாகங்களை தயாரிக்க பெரிய நிறுவனம், தொழில்நுட்பத் தகவல்கள், உதவிகள் மற்றும் அடிப்படை தொழிற்நுட்பத்தை வழங்கும்.


(vi) மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆய்வுத்துறையின் பதிவு பெற்ற தொழில்நுட்ப ஆலோசகர் ஒரு நிறுவனத்திற்குத் தேவையான தகுந்த தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுக்கவும், பெறவும் உதவி செய்யலாம்.

(vii) இந்த நிறுவனங்கள், உயர்க்கல்விக் கூடங்களுக்கு நிதி உதவி அளித்து, அதன் மூலம் தங்களுடைய நிறுவனத்திலேயே தொழில்நுட்பத் திறன் பெற்று வெளியிலிருந்து எந்த வகையான தொழில்நுட்பத்தை பெறவேண்டும் என்பதை உறுதி செய்யலாம்.

(viii) தொழில்நுட்பக் கண்காட்சிகள், தொழில்நுட்பக் கருத்தரங்குகள் ஆகியவைகளில் கலந்து கொண்டும், தொழில்நுட்ப இதழ்களை படித்தும் வலைதளம் மூலமும் எங்கெங்கு என்ன வகையான தொழில்நுட்பங்கள் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

(ix) தொழில்நுட்ப உரிமம் வழங்குதல், ஒரு நிறுவனம் தன்னிடத்தில் உள்ள காப்புரிமை, ஒரு பொருளின் வர்த்தக முத்திரை, உரிமைகள், உற்பத்தி அல்லது விநியோக திறமைகள் அல்லது அறிவுசார் சொத்துரிமைகளை தேவைப்படும் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் உரிமம் கொடுக்கலாம். இதற்கான தொகை மொத்தமாகவோ உற்பத்தியின் அடிப்படையிலோ அல்லது இரண்டும் கலந்தோ இருக்கலாம். மேற்கூறப்பட்ட அனைத்து வழிகளிலும் தொழில்நுட்ப உரிமங்களைப் பெறலாம்.

(x) ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு நிறுவனம் தொழில்நுட்ப அம்சங்களை ஒட்டுமொத்தமாக விலை கொடுத்து வாங்கிக்கொள்ளலாம். புது டெல்லியிலுள்ள ஐக்கிய நாட்டு நிறுவனத்தை சேர்ந்த APCTT என்ற நிறுவனம் ஆசிய பசிபிக் பகுதியிலுள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் தொழில்நுட்பப் பரிமாற்றம் பெற பலவகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது (APCTT 2017). இந்தியா சிறு மற்றும் நடுத்தர தொழில்நுட்பச் சேவைகள் நிறுவனம் உலகளவில் இருந்து புதிதாக தொழில்நுட்பங்களைப் பெறவும் வியாபாரக் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளவும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுகிறது.




## 4.3 தொழில்நுட்பப் பரிமாற்றங்களால் ஏற்படக்கூடிய சாதனைகள்

தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பலவகையான பலன்களைப் பெறலாம்.

- உற்பத்தித்திறன் அதிகரிப்பு
- உற்பத்திச் செலவு குறைப்பு
- அதிக எண்ணிக்கை பொருள் உற்பத்தி மூலம் விலை குறைப்பு
- பலவகையான பொருள்கள் தயாரிப்பு
- புதிய பொருள்கள் உருவாக்கல்
- பொருள்களைப் புதிய வடிவில் உற்பத்தி செய்வது
- பொருள்களின் மேம்பட்ட தரம்
- உலகச்சந்தையில் நுழைவது
- விற்பனையைப் பெருக்கி சந்தை சதவிகிதத்தை உயர்த்துவது

### முடிவாக

பல வழிகளில் தொழில்நுட்பப் பரிமாற்றத்தை மேற்கொண்டு தொழில்நுட்ப மேம்பாடு அடையும் குறு, சிறு, நடுத்தர தொழில்நுட்பங்கள் பலவகையான நோக்கங்களை நிறைவு செய்து கொள்ளலாம். அவைகளாவன: தொழில்நுட்பம் பழமையாவது, பொருள் உற்பத்தியின் எண்ணிக்கையை அதிகரிப்பது, பலதரப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வது அல்லது உலகச்சந்தையில் நுழைவது. தொழில்நுட்ப மேம்பாட்டுக்காக தொழில்நுட்ப பரிமாற்றங்களை விரும்பும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மாறுபட்ட பல ஆதாரங்களை நாடுகின்றன. ஒரு குறிப்பிட்ட ஆதாரம் முடிவு செய்தபின் எந்த வழியில் இந்த தொழில்நுட்ப பரிமாற்றம் செய்ய முடியும் என்பது உறுதி செய்யப்பட்டு நிறைவு செய்யப்படுகிறது. இப்படி தொழில்நுட்ப பரிமாற்றத்தால் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய பலவிதமான நோக்கங்களை நிறைவு செய்து கொண்டு தங்களுடைய ஒட்டு மொத்த செயல்பாட்டையும், போட்டித்திறனையும் அதிகரித்துக் கொள்ளலாம். இன்றைய நிலையில் பெருமளவிலான குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப பரிமாற்றத்தின் மூலம் தொழில்நுட்ப மேம்பாட்டை வழங்கி அந்தத் துறை மட்டுமல்லாமல் இந்தியப் பொருளாதாரமே பயன்பெற முடியும்.

- **பாலசுப்பிரமண்யமுங்கிலா ஹில்லிமனே,** பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் பொருளாதாரப்பேராசிரியர்.

# காதி ஆணையத்தின் புதிய முன் முயற்சிகள்

- வி.கே.சக்சேனா

காதி நமது தேசத்தின் புனிதக்குறியீடு. கிராமத்தொழில்கள் நம்முடைய வரலாற்றுப்பாரம்பரியம். நம்முடைய தேசிய உணர்வின் மெய்யான அடையாளம் காதி என்பதில் நாம் பெருமைகொள்கிறோம். தேசத்தந்தை காந்தியடிகள் காதியைப்பெரிதும் கொண்டாடினார். சுதந்திரம் அடைந்த பின்னர் நமது தேசியத்தலைவர்கள் நமது பாரம்பரியத்தையும், காதியின் மதிப்பையும் அடையாளம் கண்டுகொண்டார்கள். காதிப்பொருள்களின் உற்பத்தியை மேம்படுத்தி ஊரகச்சமூகம் தன்னிறைவு பெறுவதை ஊக்குவிப்பதற்காக தேசிய அளவிலான அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

காதி கிராமத்தொழில் ஆணையம் (KVIC) உருவாக்கப்பட்டு, தன்னிறைவின் அடிப்படையிலான முன்முயற்சிகள் தேசிய அளவில் பெருமளவில் உருவாக அது உதவியது. எனினும், புவியியல், அரசியல் மாற்றங்களின் காரணமாக, மக்களின் வாழ்வாதாரத்துணையாக இருந்துவந்த இத்தகைய பல நிறுவனங்களும், முன் முயற்சிகளும் நீடிக்கத்தக்கதல்ல என்று சொல்லி முறைப்படி மூடுவிழா செய்யப்பட்டன.

இவ்வாறு மூடப்பட்டுவிட்ட நிறுவனங்களையும், முன்முயற்சிகளையும் புத்துயிர் அளித்து மீட்பதை இரண்டு அனுமானங்களின் அடிப்படையில் KVIC ஏற்றுக்கொண்டது. 1. தேசத்தின் பெருமிதத்திற்கான குறியீடுகளாக ஒரு காலத்தில் இருந்துவந்தவற்றை நாம் இழந்துவிடக்கூடாது. 2. இப்போதும் கூட அவை திறமையாகச் செயல்பட்டு அவை உருவாக்கப் பட்டதற்கான நோக்கத்தை நிறைவேற்றமுடியும். இதனால், அந்தந்தப்பகுதிகளைச் சுற்றிலும் உள்ள வாழ்வாதாரங்களைத் துய்த்து வளம் பெற முடியும்.

**சேவாபுரி (வாரணசி) காதி ஆசிரமம் 26 ஆண்டுகளுக்குப்பிறகு புத்துணர்ச்சி பெற்றுள்ளது:**

சேவாபுரி, வாரணசி காந்தி ஆசிரமம் 1941ஆம் ஆண்டு காந்திஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்டது. காதியை ஊக்குவிக்கவும், வேலைவாய்ப்பு வழங்குவதற்காகவும் இது உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவர் டாக்டர்.இராஜேந்திரபிரசாத் இதனைத்திறந்து வைத்தார். இங்கு காந்தியடிகள் சில காலம் தங்கி இருந்தார். 12 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சேவாபுரியில் 500க்கும் அதிகமானோர் பணிபுரிந்துவந்தனர். தேசத்தில் சிறப்பாக செயல்பட்டுவந்த காதி மையங்களில் ஒன்றாக சேவாபுரி இருந்து வந்தது. ஆனால், நிதி நெருக்கடியின் காரணமாகவும், முறையாக நிர்வகிக்கப்படாததாலும் இந்த மையம் 1990இல் மூடப்பட்டது. பெருமைமிக்க கடந்தகாலத்தின் நினைவுச்சின்னத்தைப் போல இது பாழடைந்து நின்றது. செப்டம்பர் 17 சேவா தினத்தன்று இந்த மரபை KVIC மீட்டெடுத்து இந்த மையத்தை மீண்டும் நடத்த ஆரம்பித்தது. இதன் CSR நிதியைப்பயன்படுத்திக் கொள்வதற்காக ஊரக மின் இணைப்புக்கழகத்தை (REC) KVIC தன்னுடன் சேர்த்துக்கொண்டுள்ளது. காதி செயல்பாடுகளும் வேகம் பெறத்தொடங்கியுள்ளன. இந்தத்திட்டத்திற்காக REC ரூ.5.50 கோடியை அனுமதித்துள்ளது. இதுவரை இல்லாத அளவில் CSR நிதியை காதி செயல்பாடுகளுக்குப்பயன்படுத்தி 500 சூரியசக்தி இராட்டைகளையும், 100 சூரிய சக்தித் தறிகளையும் REC வழங்கிஉள்ளது.

இவற்றில் பயிற்சி தருவதற்காக – KVIC இரண்டு பயிற்சி மையங்களை வாரணசி மாவட்டத்தில் ஜெய்ப்பூர், காக்ரஹியா ஆகிய கிராமங்களில் உருவாக்கியுள்ளது. இதில் ஒவ்வொரு கிராமத்திற்கும் 25 சூரிய சக்தி இராட்டைகளும், 5 சூரிய சக்தித்தறிகளும் தரப்பட்டுள்ளன. இந்த மையத்தில் இதுவரை 500க்கும் அதிகமான உள்ளூர் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- சூரிய சக்தி மூலம் இயங்கும் 250 இராட்டைகளையும், 25 தறிககளையும் ஒரே இடத்தில் கொண்டிருக்கும் இந்தியாவின் முதல் அலகு இதுவாகும்.
- காதி செயல்பாடுகளுக்காக நாட்டிலேயே முதன் முதலாக CSR நிதிக்குஒப்புதல் தரப்பட்டுள்ளது.
- வாரணசி மாவட்டத்தில் லிஜ்ஜட் பப்பட் (அப்பளம்) உற்பத்தி அலகில் 170 மகளிர் பணிபுரிகின்றனர். நாளொன்றுக்கு 200கிலோ அப்பளம் இங்கு தயாரிக்கப்படுகிறது.
- 100 தேனீப்பெட்டிகளுடன் கூடிய தேனீ பண்ணையும், தேன் உற்பத்தி மையமும் செயல்படுகிறது.
- உணவில் சேர்த்துக்கொள்ளக்கூடிய உப்பை உற்பத்தி செய்து பொதியிடும் அலகு நாட்டில் வேறெந்த காதி மையத்திலும் இல்லை. ஆசிரம உப்பு என்பது இதன் பெயர்.
- ஆடவரும் பெண்டிருமாக 500 பேர் இந்த வளாகத்தில் பணிபுரிகின்றனர். இவர்களில் பலர் படித்த பெண்கள்.

**ஜம்முகாஷ்மிரில் பாம்போரில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க பயிற்சிமையம் புதுப்பிப்பு:**

ஜம்மு காஷ்மீரில் ஜீலம் நதியின் கிழக்குக்கரையில் செயல்படாமல் இருந்து வந்த பயிற்சி மையத்தை 2017, ஆகஸ்ட் 22 அன்று KVIC உயிர்ப்பித்தது. உலகம் முழுவதும் காவி நிறத்துணிகளுக்காகப் பெயர் பெற்றிருந்த மையம் இது. பாம்போர் நகரத்திற்கு ‘காஷ்மீரின் காவி நகரம்’ என்ற பெயரும் உண்டு. 1990இல் ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதம் உச்சத்தில் இருந்தபோது இந்த மையம் அழிக்கப்பட்டது. இந்த மையத்திற்கு காந்திஜி 1947இல் வருகைபுரிந்திருக்கிறார்.

இந்த மையத்தில் நூற்பு, நெசவு, EDP, தேனீ வளர்ப்பு, சூரியசக்தியில் இயங்கும் இராட்டைப்பயிற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. தீவிரவாதத்தினால் அழிவுக்குள்ளான ‘காதி இந்தியா விற்பனை மையம்’ மறுபடியும் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, குஜராத்தில் பழங்குடி இன மக்கள் அதிகமாக வசிக்கும் ஒரு வனக்கிராமத்தில் 25 இராட்டைகள், 5 தறிகளை KVIC ஏற்பாடு செய்து தந்துள்ளது. குறைந்தது 50 பழங்குடி இனப்பெண்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்புகளை KVIC உருவாக்கியுள்ளது.

மேலும், இந்த ஆண்டு ஏப்ரலில், கழிரங்கா தேசிய பூங்காப்பகுதியில் சிலிம்கௌவா என்ற இடத்தில் பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தை KVIC தொடங்கியுள்ளது. இந்தப்பகுதி வனவிலங்கு வேட்டைத்தொல்லைகள் நிறைந்தது. ஏறத்தாழ இந்தப்பகுதியில் உள்ள 50 ஊரகக்குடும்பங்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை இந்த அலகு வழங்கியுள்ளது.

**2. தேன் தோய்ந்த பாதை:**

இயற்கைத்தேன் உற்பத்தி செய்யும் அளப்பரிய ஆற்றல் இந்தியாவிற்கு உள்ளது. இந்தியத்துணைக்கண்டத்தின் பலவித நிலஅமைப்புகளும், தாவரங்களும் இணைந்து இந்த வாய்ப்பைப் பெருக்கித்தருகின்றன. காடு நிறைந்த பகுதிகளிலும், விவசாயப்பகுதிகளிலும் தேனீவளர்ப்பு ஒரு பிரபலமான கிராமியத்தொழில். தேன் உற்பத்தியினால் பலவிதமான பயன்கள் உண்டு. சுவைமிக்கத்தேனுடன் கூடவே, தேனீக்களால் தாவரங்களில் மகரந்த சேர்க்கை அதிகரிக்கிறது. விவசாய உற்பத்தி அதிகரிக்கிறது. தேன் மெழுகு, மகரந்தம், தேனீ நஞ்சு ஆகிய உபபொருள்களும் கிடைக்கின்றன. மனித குலத்திற்கு இவை பெரும் பயன்தருகின்றன. இதனை அங்கீகரிக்கும் விதமாக ‘தேன் திட்டம்’ என்ற ஒரு திட்டத்தை KVIC ஆரம்பித்துள்ளது. தேன் உற்பத்தியை முறைப்படி ஆதரிப்பதற்கு இந்தத்திட்டம் துணைசெய்கிறது. இந்தத்திட்டத்தின்படி KVIC ஒரு இலட்சம் தேனீப்பெட்டிகளை விவசாயிகளுக்கு இந்த ஆண்டு வழங்க இருக்கிறது.

தேன் திட்டத்தை குடியரசுத்தலைவர் மாளிகையிலிருந்து KVIC தொடங்கியது. மாண்புமிகு குடியரசுத்தலைவர் ராம்நாத்கோவிந்த் அவர்கள் இங்கு அமைக்கப்பட்டிருக்கும் தேனீ வளர்ப்பு அமைப்புகளைப் பார்வையிட்டார். குடியரசுத்தலைவர் மாளிகையில் 150 தேனீப்பெட்டிகளை KVIC அமைத்துள்ளது. அடுத்த சில மாதங்களில் மேலும் 500பெட்டிகள் அமைக்கப்படும். இதன் மூலம் 15ஆயிரம் கிலோ தரமான இயற்கைத்தேன் உற்பத்தி செய்யப்படும்.

வாரணசியின் சேவாபுரிப் பகுதி அதிக அளவில் விவசாயம் நடைபெறும் பகுதி. தாவர, விலங்கின வகைகள் இங்கு ஏராளமாக இருக்கின்றன. எனவே தான், இந்த வளாகத்தில் 100 தேனீ பெட்டிகளுடன் கூடிய தேன்கூடுகள் தேன் திட்டத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. இந்தப்பகுதியில் உள்ள

விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்புப் பயிற்சிதரும் உற்பத்தி மையமாக இது இருக்கிறது. இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான தேனீவளர்ப்பு ஏற்பாடுகள் இங்குதான் முதன் முதலாக அமைக்கப்பட்டது.

ஜம்முகாஷ்மீர் பாம்போர் பயிற்சி மையத்திலும் 100 தேனீபெட்டிகள் தேன் கூடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சிக்குப்பிறகு உள்ளூரில் உள்ள விவசாயிகளுக்கு தேன் பெட்டிகள் வழங்கப்படும். தாவர, விலங்கின வகைகள் அதிகமிருக்கும் "காஷ்மீரத்தின் காவி நகரம்" என்று அழைக்கப்படும் பாம்போர் தரமிக்கத்தேன் உற்பத்திக்கு பொருத்தமான இடமாகும். தேன் திட்டத்தில் இதுவும் இணைக்கப்பட்டுள்ளது.

**பச்சாதாபமும் அதிகாரம் வழங்கலும்:**

பெண்விடுதலையும், பெண்களுக்கு அதிகாரமளித்தலும் KVIC இன் அனைத்துவிதமான மேம்பாட்டு செயல்பாடுகளுக்கும் ஆதார சுருதியாக உள்ளது. சேவாபுரியிலும், பாம்போரிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. பெண்கள் அதிகாரம் பெறுவதால் ஆரோக்கியமான குடும்பங்கள் படிப்படியாக உருவாகும். தேசத்தின் கட்டமைப்பிற்கு அவை துணை நிற்கும்.

நர்மதா பள்ளத்தாக்குப்பகுதியில் பெண்களுக்கு அதிகாரமளித்தலில் ஒரு புதிய அத்தியாயத்தை KVIC எழுதுகிறது.

KVIC தனது சகாயோக் திட்டத்தின் மூலம் பழங்குடியினப்பெண்களுக்கு 80 இராட்டைகளை ஓம்கரேஸ்வர் என்ற இடத்தில் வழங்கிஉள்ளது. மத்திய பிரதேசத்தில் உள்ள நர்மதை பள்ளத்தாக்குப்பகுதியில் காதி செயல்பாடுகளை இந்தப் பெண்கள் தொடங்கியுள்ளனர். பெண் கைவினைஞர்கள் 90 பேரும் முறையான பயிற்சிக்குப்பிறகு தேசத்தில் உள்ள மற்ற பழங்குடியினப்பெண்களுக்கு ஒரு முன் மாதிரியாகத்திகழ்கின்றனர். சகாயோக் திட்டத்தின்படி, பொதுமக்களின் பங்கேற்புடன் ஆயிரத்துக்கும் அதிகமான இராட்டைகள் நாடு முழுவதும் ஊரக சமூக மக்களிடம் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**சந்தையில் சிறப்பிடம்:**

ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வழிமுறைகளில் மிக முக்கியமான கவனம் பெறுவது சந்தை. தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே ஆரோக்கியமான சூழலை இது உருவாக்குகிறது. KVIC எப்போதும் சந்தை வசதிகளில் கவனம் செலுத்திவருகிறது. சந்தையில் புழங்கும் பொருளின் அளவு ஊரக மக்களின் வேலைவாய்ப்பிற்கு நாம் எந்த அளவிற்கு ஆதரவு தரமுடியும் என்பதை வரையறை செய்கிறது. இந்தத்திசையில் ஏராளமான முயற்சிகளை KVIC மேற்கொண்டுள்ளது.

காதியின் தரமான தடிமனான துணி வகைகளைக் கொண்டு ஜீன்ஸ் போன்ற ஆடைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கு பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பலவிதமான முன்முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சந்தையை நிலைப்படுத்த இயலும். இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.40கோடி காதி விற்பனை கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 7.5 லட்சம் மனித உழைப்பு நாள்களும் கூடுதலாக உருவாகும். காதி பீட்டர்இங்கிலாந்து என்ற பெயரில் சந்தைப்படுத்தப்படும்போது காதிக்கு மறுபடியும் ஒரு சந்தை வாய்ப்பு கிடைக்கும்.

**மத்தியசுகாதரத்துறை தனது 23 மருத்துவமனைகளிலும் காதிப் பொருள்களையே பயன்படுத்த வேண்டுமென ஆணையிட்டுள்ளது.**

அரசு நிறுவனங்கள், ONGC போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் பலவற்றிடம் இருந்தும் அதிக அளவில் காதிபொருள்களுக்கான ஆர்டர்களை KVIC பெற்றுள்ளது. ONGCஇன் 35ஆயிரம் ஊழியர்களுக்குமான ஆயத்த ஆடைகள் மற்றும் காதிகிராமத்தொழில் உற்பத்திப்பொருள்களுக்காக ரூ.45கோடிக்கும், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், ஜமக்காளம் போன்றவற்றிற்காக இரயில்வே ரூ.42 கோடிக்கும், தனது முதல் வகுப்பு பயணிகளின் வசதிகருதி வழங்கும் பயணப்பொருள்பைகளுக்கு ஏர் இந்தியா ரூ.11.1 கோடிக்கும், 23 ஆயிரம் பட்டு மேலங்கிகளுக்காக NTPC ரூ.5 கோடிக்கும், சீருடைகள் வழங்குவதற்காக JK WHITE CEMENT நிறுவனம் 17 இலட்ச ரூபாய்க்கும் ஆர்டர்கள் அளித்துள்ளன.

மருத்துவமனைகளிலும், மருத்துவமனை ஊழியர்களின் பயன்பாட்டுக்குமென ரூ.150 கோடி மதிப்பிலான காதிப் பொருள்களை வாங்குவதற்கு மத்திய சுகாதார அமைச்சகம் முன்வந்துள்ளது. காதிக்கும், அதன் உற்பத்தியை சார்ந்திருப்போருக்கும் இது மிகப்பெரும் உந்துசக்தியாக அமையும். மத்திய சுகாதார அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் மத்திய அரசின் 23 மருத்துவமனைகளிலும், மருத்துவ

ஆராய்ச்சி மையங்களிலும் காதி பொருள்கள் மட்டுமே இனி பயன்படுத்தப்படும்.

### ஏர் இந்தியாவிலிருந்து ரூ.12 கோடி

ஏர் இந்தியா நிறுவனத்திடம் இருந்து ஏறக்குறைய ரூ.12 கோடிக்கு மீண்டும் ஒரு ஆர்டரை KVIC பெற்றுள்ளது. இயற்கையான, சூழலுக்கு உகந்த காதிப்பொருள்களைப் பயன்படுத்துவது என்று ஏர் இந்தியா முடிவு செய்துள்ளது. முதல் வகுப்புப் பயணிகளின் வசதிக்காக வழங்கப்படும் பொருள்கள் அடங்கிய 65500 பைகளை ரூ.7.98 கோடி மதிப்பிற்கு வழங்க ஆர்டர் பெறப்பட்டுள்ளது.

இந்த ஆர்டர்கள் அனைத்தும் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் தரத்தின் அடிப்படையில் பெறப்பட்டவை. ஜூன் 2016இல் 1.85 இலட்சம் பயணியர் பைகளுக்காக ரூ.8 கோடிக்கு ஆர்டர் தரப்பட்டிருந்தது. டிசம்பர் 2015இல் ஏர் இந்தியா 25 ஆயிரம் பைகளுக்கு பரிசோதனை முன்னோட்ட முறையில் ரூ.1.21 கோடிக்கு ஆர்டர் தந்திருந்தது. இந்தப்பைகளில் கைகளை சுத்தம் செய்துகொள்ள உதவும் காதிப்பொருள், ஈரம் தரும் களிம்பு, காதி லெமன்கிராஸ், காதிசோப், உதட்டுத்தைலம், முகம் கழுவும் திரவம், எண்ணெய்கள் போன்றவை இருக்கும்.

### அதிகமாகச் சென்றடைய முயற்சிகள்

நம்நாட்டிலேயே உற்பத்தியாகும் காதி, கிராமக் கைவினைப்பொருள்களை உலகம் முழுவதும் அதிகமாகப் பிரபலப்படுத்துவது மிக முக்கியம் என்று KVIC நம்புகிறது. காதிப்பொருள் விற்பனை மையங்களுக்கு வருபவர்கள் பலர் அதன் தூதுவர்களாக மாறியுள்ளனர். உலகம் முழுவதும் இருந்து வரும் பெருமக்கள் காதிமையங்களுக்கு வருகைதந்து மனம் கவரப்படுகின்றனர்.

### சுதந்திர தினத்தன்று அமெரிக்க தூதர் கதராடை உடுத்தி இருந்தார்

சுதேசியின் அடையாளமாக கதரை விடுதலைப்போரட்டத்தில் காந்தியடிகள் முன்நிறுத்தினார். காதிக்கு கிடைத்திருக்கும் பெருமையாகும் இது. அமெரிக்காவின் தற்காலிகத் தூதர் மேரி கேலாஸ் கேரிசன் தில்லி கன்னாட்பிளேஸ் பகுதியில் உள்ள காதி விற்பனை மையத்திற்கு வந்திருந்தார். அங்கு சேலைகளை வாங்கினார். ஆகஸ்ட் 15 சுதந்திரதின விழாவின் போது அவர் காதி சேலை அணிந்து வந்திருந்தார். காதி உடுத்தி செங்கோட்டையில் பெருமிதத்துடன் அவர் அமர்ந்திருந்தார்.

தில்லி காட்சியகத்தில் மிகப்பெரிய ஸ்டீல் இராட்டை ஒன்றையும், பாரம்பரிய இராட்டை ஒன்றையும் KVIC நிறுவியுள்ளது.

பாரம்பரிய இராட்டைக் காட்சியகத்திற்கு அருகில் கன்னாட்பிளேசில் 2.5 டன் எடையுடைய உயர்தரமான குரோமியம், நிக்கல் ஸ்டீலினால் ஆன இராட்டை நிறுவப்பட்டுள்ளது. நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள இது அனைவரையும் கவர்ந்து வருகிறது. இந்த ஸ்டீல் ராட்டை 12 அடி உயரமும் 25 அடி நீளமும் உடையது. புது தில்லி மாநகராட்சியின் (NDMC) துணையுடன் இதனை KVIC நிறுவியுள்ளது.

### காதியை சீருடையாக்க சதுரங்கக் கூட்டமைப்பு முடிவு

காதியை உலகநாடுகளில் பிரபலப்படுத்தவும், இளைய தலைமுறையினரை நம்நாட்டுப்பாரம்பரியத் துணிகளை நோக்கி ஈர்க்கவுமாக, அகில இந்திய சதுரங்கக் கூட்டமைப்பு (AICF) இந்தியாவின் சதுரங்க விளையாட்டு வீரர்களும் அவர்களின் உதவிக்கு வரும் பணியாளர்களும் அனைத்து விளையாட்டுப்போட்டிகளின் போதும் காதியை சீருடையாக அணிந்திருப்பார்கள் என முடிவு செய்துள்ளது.

### முடிவுரை

காதி சீர்திருத்த வளர்ச்சிக்குழுமம் (KRDP) 2010-11இல் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு, 2013-14இல் ரூ.96 கோடிமுதலீட்டை ADP யிடம் இருந்து பெற்றது. ஆயினும், மே 2014 வரை ஒரே ஒரு இராட்டையோ, தறியோ கூட யாருக்கும் வழங்கபடவில்லை. கடந்த 2 ஆண்டுகளில்5323க்கும் அதிகமான தறிகளுக்கு அனுமதி தரப்பட்டு 1350க்கும் அதிகமான தறிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. அதைப்போலவே, 27 ஆயிரத்திற்கும் அதிகமான இராட்டைகள் வழங்க அனுமதி பெறப்பட்டு 16 ஆயிரம் இராட்டைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன.

மறுமலர்ச்சிக்கான களியாட்டத்தில் KVIC பங்கேற்று இருக்கிறது. கிராமத்தொழில்களை மேம்படுத்துவதில்தான் இந்தியாவின் வளர்ச்சிக்கான ஆதாரம் அமைந்திருக்கிறது என்கிற மகாத்மாவின் கனவை அடிமட்ட அளவிற்கு எடுத்துச்செல்வதும் KVIC இன் இலக்காகும்.

---

- **வி.கே.சக்சேனா**, புதுதில்லியில் உள்ள காதி கிராமத்தொழில்கள் ஆணையத்தின் தலைவர்.

●

# இந்தியாவின் குறு, சிறு, நடுத்தரத்தொழில் (MSME) அமைப்புகளுக்கு அதிகாரமளித்தல்

- Dr. அருண் குமார் பாண்டா

**கண்ணோட்டம்:**

குறு, சிறு, நடுத்தரத்தொழில் (MSME) அமைப்புகள் உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டவை. உள்நாட்டு ஒட்டுமொத்த உற்பத்திக்குப் பெரும் பங்கு அளிப்பவை. பொருளாதார வளர்ச்சியைத்தூண்டுபவை. அதிக வேலைவாய்ப்பு அளிப்பதிலும், தொழில் முனைவை ஊக்குவிப்பதிலும், புதுமைகள் படைத்து வளர்ச்சியை முன்னெடுத்துச்செல்வதிலும் மிக முக்கியமான பங்கினை MSME பிரிவு வகிக்கிறது துணை அலகுகளாக செயல்பட்டு பெருந்தொழில்களின் தேவைகளை நிறைவேற்றிவைக்கிறது. இதன் மூலம் தேசத்தின் சமூகப்பொருளாதார வளர்ச்சிக்கு MSME துணை நிற்கிறது.

**இந்திய MSMEகளின் காட்சி:**

இந்தியப்பொருளாதாரத்தின் செயல்பாடுகளில் MSME பிரிவு திறம்வாய்ந்த ஒரு இடத்தை வகிக்கிறது. 'இந்தியாவில் உற்பத்தி', 'மின்னணு இந்தியா', 'திறன் இந்தியா', 'தொழில் தொடங்கும் இந்தியா' ஆகிய பல முன்முயற்சிகளில் இந்தத் துறையின் முழுமையன வளர்ச்சிக்கு கவனம் செலுத்தப்படுகிறது.

**MSMEகளுக்கு நிதி உதவி:**

சிறுதொழில்களுக்கு குறித்த காலத்தில் கடன் பெறுவதற்கு முன்னுரிமை தேவை. ஆனால் இது ஒரு சவாலாகவே நீடித்துவருகிறது. இந்தக் கவலையைப் போக்கும் விதமாக அரசாங்கம் கடன்உத்திரவாதநிதித் திட்டத்தை உருவாக்கியுள்ளது. ஈட்டுறுதியோ, பிணையோ இல்லாமல் ரூ.2கோடி வரை கடன் பெறமுடியும். ஸ்டார்ட் அப் திட்டத்தின் கீழும் MSME க்கள் கடன் பெறமுடியும்.

**பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத்திட்டம் (PMEGP):**


இந்தத்திட்டத்தின் மூலம் உருவாகிவரும் குறுநிறுவனங்கள் நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் வேலைவாய்ப்பை உருவாக்கிவருகின்றன. புதிய சுய தொழில் முயற்சிகள், திட்டங்களின் மூலம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்குவது முக்கிய நோக்கமாக இருக்கிறது. ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் இந்தத்திட்டத்திற்கு இருக்கிறது.

**காதி, கிராமத்தொழில்கள்:**

இந்தியாவின் பாரம்பரியப்பெருமை மிக்க தேசியத் தொழில்கள் இவை. குறைந்த மூலதனத்தில் அதிகமான வேலைவாய்ப்புகளை கிராமப்புறங்களில் இவை உருவாக்குகின்றன. சமூகத்தின் நலிந்த பிரிவினைச் சேர்ந்த மக்களுக்கு இவை உதவுகின்றன. குறு, சிறு, நடுத்தரத்தொழில்கள் அமைச்சகம் காதி, கிராமத்தொழில்கள் மூலம் ஆதாயம் தரும் வேலைவாய்ப்புகளை அவர்கள் வசிக்கும் இடத்திலேயே ஏற்படுத்துவதற்கென பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. கிராமப்புற இளையோருக்கும், பெண்களுக்கும் இது உதவும்.

**தொழில்நுட்பத்தில் கவனம்:**

உலக அளவில் விரும்பப்பட்டு போட்டியிட வேண்டுமென்றால் சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். புதுமையான தீர்வுகளையும், பங்கேற்பாளருக்கு சிறந்த மதிப்பையும் வழங்க வேண்டும். இந்த நிலையில் தொழில்நுட்ப மேம்பாடு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. மிகுதிறன் பெறுவதற்கான தொழில்நுட்ப வசதியை வழங்குவதற்கு அமைச்சகம் கருவி அறைகள் கொண்ட 18 தொழில்நுட்ப மேம்பாட்டு மையங்களை




நாடு முழுவதும் அமைத்துள்ளது. அதனோடு கூட, குறு, சிறு, நடுத்தரத்தொழில்களுக்கு என 2200 கோடி ரூபாய் நிதியை உலக வங்கியிடருந்து பெற்று வழங்கியுள்ளது. இதனைக்கொண்டு தற்போதுள்ள மையங்களை மேம்படுத்துவதுடன், 15 புதிய தொழில்நுட்ப மையங்களும் அமைக்கப்பட இருக்கின்றன. இதனால் MSMEக்களின் ஒட்டுமொத்த உற்பத்தி பெருகும். உலகத்தரம் மிக்க உற்பத்தி தொழில்நுட்பங்கள், திறன் மிக்க மனித வளம், வணிக ஆலோசனை ஆகியவை கிடைப்பதற்கு இந்த மையங்கள் உதவிடும். கடன் உதவியோடு கூடிய முதலீட்டு மானியத்திட்டமும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழிலகம், இயந்திரங்கள் ஆகியவற்றை நவீனப்படுத்திக்கொள்வதற்கு இந்தத்திட்டம் உதவும். அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரையிலான 15% மானியம் இந்தத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும். ஜூன் 2017 வரை 1293 MSMEகளுக்கு ரூ.78.68 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.




மாண்புமிகு பிரதமர் அவர்கள் சமீபத்தில் MSMEக்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக Zero Defect Zero Effect (ZED) Certification என்ற திட்டதை அறிவித்துள்ளார். குறு, சிறு, நடுத்தரத் தொழிலகங்களுக்கு விழிப்புணர்வை விரிவான அளவில் உருவாகுவதற்கும், ஊக்கமளிக்கவும், துணைபுரியவும், மதிப்பீடு செய்வதற்கும் இந்த திட்டம் கைகொடுக்கும்.

**உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்:**

பயன்படுத்தத்தேவையானவற்றை அணுகுதல், சந்தை, திறன் மிகுந்த மனிதவளம், அண்மைத்தொழில்நுட்பம் ஆகிய உள்கட்டமைப்புகள் எந்த ஒரு தொழிலும் சந்தையில் வெற்றிகரமாக இயங்குவதற்குத் தேவையானவை. இதற்கு, அரசாங்கம் தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறையை மேற்கொண்டுள்ளது. இந்த அணுகுமுறை கூட்டுறவு நடத்தையையும், போட்டியையும் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள அமைப்புகளுக்கிடையே ஏற்படுத்துகிறது.




மூலதனப் பற்றாக்குறையின் காரணமாக குறு, சிறு தொழில் நிறுவனங்கள் அண்மைக்கால கருவிகளையும், தொழில்நுட்பங்களையும் பெறுவதற்கு இயலாத நிலை ஏற்பட்டு, உற்பத்திப்பொருளின் தரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, தொகுப்பு மேம்பாட்டுத்திட்டம் Common Facility Centers (CFC) எனப்படும் மையங்களின் மூலம், கருவிகள், தொழில்நுட்பம், வடிவமைப்பு ஆகியவற்றிற்கான பொதுவான வசதிகளை தெளிவாக தெரியக்கூடிய வகையில் உருவாக்கி அளிக்கிறது. அரசாங்கத்தின் முயற்சியால் நாடு முழுவதும் பல தொகுப்பு அமைப்புகள் உருவாகி பயனடைந்துவருகின்றன. MSME அமைச்சகம் தொகுப்புத் திட்டத்திற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கி இன்னும் பல தொகுப்புகளை ஏற்படுத்தி உதவிட எண்ணம் கொண்டுள்ளது. பாரம்பரிய தொகுப்புகள் (SFURTI) இன்னும் இன்னும் அதிகமான தொகுப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.



**புதிய சந்தைகளை அணுகும் வசதி:**

MSMEக்களின் சந்தைகளை அதிகரிக்கும் வகையிலும், நீண்டகால உறவைப்பேணும் வகையிலும் அரசாங்கம் நீண்டகால ஒட்டுமொத்த இலக்கு ஒன்றை உருவாக்கிஉள்ளது. மத்திய, மாநில அரசுத்துறைகள் 20% சரக்குகளையும் சேவைகளையும் குறு,சிறு தொழில் அமைப்புகளிடம் இருந்து பெறவேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம் MSEக்கள் ஊக்கம் பெறுவதோடு, தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் வைத்துள்ள MSEக்கள் பொதுச்சந்தையின் மூலம் பயன் பெறமுடியும். எனவே 4 சதவீத உள் ஒதுக்கீட்டு இலக்கு தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் நடத்தும் MSEக்களிடமிருந்து வாங்கப்படவேண்டும் என்கிறது. இவர்கள் நடத்தும் நிறுவனங்கள் மிகுந்த சங்கடங்களுக்கிடையே நடக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்களும் பழங்குடியினரும் நடத்தும் MSEக்களை ஊக்குவிக்க மாண்புமிகு பிரதமரால் ஒரு தேசிய SC-ST மையம் (NSSH) அக்டோபர் 18 அன்று நிறுவப்பட்டுள்ளது.

**மனித மூலதனம் :**

புதிய திறமைசாலிகளை ஈர்ப்பதும் தக்க வைத்துக்கொள்வதும் MSMEக்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய ஒரு முக்கியமான கூறாகும். 125கோடி மக்கள் தொகை இருக்கக்கூடிய நம்நாட்டில் திறன் உடைய மனித ஆற்றல் குறைவாக இருப்பதாகவே காட்டப்படுகிறது. MSME பிரிவுதான் வேலைபார்க்கும் பட்டாளத்தின் திறன்களை அதிகரிக்கக்கூடிய ஆற்றலைப்பெற்றுள்ளது. நூற்றுக்கு அறுபத்தைந்து பேர் முப்பத்தைந்து வயதிற்கும் கீழ் இருக்ககூடிய இந்த தருணத்தில் இதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.




**முடிவுரை:**

பொருளாதார வளர்ச்சியைத்தூண்டும் நோக்கில் மட்டுமே செயல்படக்கூடிய இந்த நேரத்தில் இந்தப்பிரிவின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து அரசாங்கம் எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. எளிதாகத்தொழில் செய்தல், உத்யோக் ஆதார் குறிப்பாணை ஆகியவை அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளன. தொழிலைப்பதிவு செய்துகொள்வதற்கு இது ஒரு எளிய வழி.

ஒரு தேசம் ஒரே வரி எனும் ஜிஎஸ்டி ஏற்பாடும் இவற்றிற்கு உதவும்.

- **Dr. அருண் குமார் பாண்டா**, செயலர், MSME அமைச்சகம், இந்திய அரசு.

# குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கான ஊக்குவிப்பு திட்டங்களும் இத்துறை தேசிய கழகத்தின் பங்கும்

- சந்திரசேகர் ரெட்டி, திவ்யேந்து சௌத்ரி

**அறிமுகம்**

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை போற்றி வளர்ப்பதில் முக்கிய பங்கு மாநில அரசுகளுக்காகும். இந்தியப் பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்கும் வேலைவாய்ப்பு உற்பத்திக்கும் இந்தத் துறையின் பங்கை மத்திய அரசும் அங்கீகரிக்கிறது. இத்துறைக்கான மேம்பாடு சார்ந்த கொள்கைகளை வடிவமைப்பதில் அனைத்திந்திய அணுகுமுறையை ஏற்கவேண்டும் என்பதை அறிந்த மத்திய அரசு மாநில அரசுகளின் முயற்சிகளுக்கு பக்க பலமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படிதான் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாடு சட்டம் 2006 உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் இயற்றப் பட்டதற்குப்பின் அப்போதிருந்த சிறு தொழில்துறை, கிராமப்புற விவசாயப் பொருள்கள் சார் தொழில்கள்துறை ஆகியவற்றை இணைத்து புதிதாக குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகம் 9.5.2007அன்று அமைக்கப்பட்டது. ஆறாவது பொருளாதார மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2013இன்படி இந்தத் துறையில் 4,53,00,000 தொழில்கள் இருந்து 11,70,00,000 மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. இந்தியாவின் மொத்தத் தொழில் உற்பத்தியில் 45 சதவிகிதத்தையும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 40 சதவிகிதமும் இந்தத் துறை கொண்டுள்ளது.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டிற்கு இந்திய அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவைகளாவன : கடன் வழங்குதல், தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான திட்டங்கள், தர மேம்பாடு மற்றும் விநியோக உதவி, முத்ரா திட்டம், நிமிர்ந்து நில் இந்தியா, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் உறுதியை விரிவுபடுத்துதல் ஆகியவை இந்தத் துறைக்கு கடன் வசதியை அதிகமாக்க உதவுகிறது.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவன அமைச்சகம் காதி, தென்னை நார் மற்றும் கிராமப்புறத் தொழில்களை ஊக்குவிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. காதி, கிராமப்புறத் தொழில்கள் வாரியம் கிராமப்புற பகுதிகளில் உள்ள மூலப்பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கும் தொழில்களை போற்றுவிப்பது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் 150 இலட்சம் மக்களுக்கு நிலைத்துநிற்கும் வேலை வாய்ப்பை வழங்குகிறது. காதி, கிராமப்புற தொழில்கள் துறை, நம் பாரம்பரிய பொருள்களுக்கும், ஒவ்வொரு பகுதிக்கான சிறப்புப் பொருட்களுக்கும், நேர்மையான பொருள் உற்பத்திக்கும் பெயர் பெற்றவை. நடுத்தர, உயர்மட்ட மக்களின் பேராதரவை பெற்ற துறையாகும்.

இந்த அமைச்சகம், தென்னை நார்த் தொழிலையும் ஊக்குவிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. இந்தத் தொழில் தற்போது கேரளாவிலிருந்து விரிந்து பரந்து தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கர்நாடகம், கோவா, ஒரிசா, மகாராஷ்டிரா மற்றும் பிற மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. இந்தத் துறையில் 7 இலட்சம் மக்களுக்கும் அதிகமாக வேலை செய்கின்றனர். பல ஆண்டுகளாக ஏற்றுமதித் துறைக்கும் இந்தத் தொழில் உதவியுள்ளது. சுற்றுசூழலுக்கு ஏற்ற பொருளாக உள்ளதால் தென்னை நார் மிகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் துறையில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியும் நாரிலிருந்து துணிகளை உற்பத்தி செய்யவும் நல்ல வாய்ப்புகள் உள்ளன.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் ISO 9001-2008 சான்றிதழை மற்றவர்களைவிட முதலில் வாங்கியிருப்பது அரசு இத்துறையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அளிக்கக்கூடிய ஊக்கத்தையும் கவனத்தையும்

வெளிப்படுத்துகிறது. இந்தத் துறைக்கு ISO தரங்கள் செயல்படுத்துபடுவதால் பல மேம்பாடுகள் ஏற்பட்டு இந்தத் துறையின் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையும் ஏற்படும். காதி, கிராமப்புறத் தொழில்கள் வாரியம், தேங்காய் நார் வாரியம், தேசிய சிறுதொழில் கார்ப்பரேஷன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தேசியக் கழகம், மற்றும் இந்த அமைச்சகத்தின் பிற துறைகளும் இந்த ISO தரச் சான்றிதழை பெற்று பின்பற்றி வருகின்றன.

அக்டோபர் 18, 2016இல் பிரதம மந்திரி திரு. நரேந்திர மோடி இந்த அமைச்சகத்தின் இரண்டு புதிய திட்டங்களான தேசிய ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடி மக்கள் மையம் மற்றும் குறையில்லா உற்பத்தித்திட்டம் ஆகியவற்றைத் துவக்கி வைத்தது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு புகழ் சேர்ப்பதாக அமைந்துள்ளது. 2007இல் இந்த அமைச்சகம் புதிதாகத் துவங்கப்பட்டபின் பிரதம மந்திரி இந்த அமைச்சகத்தின் திட்டங்களைத் துவக்கி வாழ்த்தியுள்ளார். டிசம்பர் 31, 2014ல் நாட்டிற்கு ஆற்றிய உரையிலும் பிரதம மந்திரி குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பற்றி குறிப்பிட்டார். அப்போது அவர் இந்தத் துறைக்கான அதிக கடன் வசதி திட்டங்களையும், குறு, சிறு தொழில்களுக்கு கடன் வழங்கு நிதி அதிக ஒதுக்கீட்டையும் அறிவித்தார். ஜனவரி 1, 2017இல் வெளியிடப்பட்ட மத்திய பட்ஜெட்டிலும் முதன்முறையாக குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு அந்நிறுவனங்களில் ரூ.50 கோடிக்கும் குறைவான மொத்த விற்பனை இருந்தால் அவற்றிற்கான கார்ப்பரேட் வரி 30 சதவிகித்திலிருந்து 25 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகத்தின் பங்கு**

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகத்தின் பங்கு மாநிலங்கள் இந்தத் துறையில் தொழில் முனைவு, வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை பெருக்குவதற்கும் இப்போதுள்ள புதிய பொருளாதார சூழ்நிலையில் போட்டிமிகுந்து விளங்குவதையும் உறுதிபடுத்தும் திட்டங்களை நடத்த ஆதரவு அளிப்பதாகும். இந்த அமைச்சகம் மற்றும் அமைப்புகளின் திட்டங்கள் பின் வருவனவற்றை செயல்படுத்துகின்றன : (i) நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிலிருந்து தேவையான கடன் வசதிகள் கிடைத்தல் ; (ii) தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீன மயமாக்கல் (iii) ஒருங்கிணைந்த உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (iv) நவீன சோதனை வசதிகள் மற்றும் தரநிர்ணய சான்றிதழ் வழங்குதல் (v) நவீன மேலாண்மை செயல்பாடுகளை வழங்குதல் (vi) தகுந்த பயிற்சிகள் மூலம் தொழில்முனைவு மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு (vii) புதிய பொருட்கள் உருவாக்குதல், வடிவமைப்பு முன்னேற்றம் மற்றும் பொருள்களை விற்பதில் மேம்பாடு (viii) இந்தத் துறையிலுள்ள கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலம் (ix) உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளை அணுக உதவி (x) ஒவ்வொரு உற்பத்தி மையத்திலும் திறன் வளர்ப்பு மற்றும் அதிகாரமயமாக்கல்.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகத்தின் பல்வேறு துறைகள் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன :

**சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை திட்டங்கள் :**

(1) பன்னாட்டு ஒத்துழைப்பு

(2) பயிற்சி நிறுவனங்களுக்கு உதவி

(3) பொருள்கள் விநியோகத்திற்கு

**மேம்பாட்டுக் கமிஷனர் (குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்) திட்டங்கள்**

1. கடன் உத்திரவாதம்
2. தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு கடன் வழி மூலதன மானியம்
3. ISO 9000 / ISO 14001 தரச் சான்றிதழ் பெறும் செலவை திரும்ப அளித்தல்
4. குறு, சிறு தொழில் நிறுவனங்கள் மைய மேம்பாடு திட்டம்
5. குறு நிதி வழங்கும் திட்டம்
6. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சந்தை மேம்பாடு உதவி

7. குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு தேசிய விருது வழங்குதல்
8. தேசிய பொருள் உற்பத்தி போட்டித்திறன் திட்டம்
   (i) குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சந்தை விநியோகத்தில் ஆதரவு / உதவி (பார் கோடு)
   (ii) சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புதிதாக உருவாக்க தொழில்முனைவு, நிர்வாக மேம்பாடு
   (iii) தர மேம்பாடு மூலம் இந்தத் துறையை போட்டிமிக்கதாக்குவது
   (iv) அறிவுசார் சொத்துரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
   (v) குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறைந்த வசதிகளுடன் போட்டிமிக்கதாக விளங்குதல்.
   (vi) குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பொருள்களை வடிவமைப்பதில் உதவி.
   (vii) சந்தை விநியோகம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு உதவி.
   (viii) தொழில்நுட்ப மற்றும் தர மேம்பாட்டுக்கு உதவி

**தேசிய சிறு தொழில் கார்ப்பரேஷன் திட்டங்கள்.**

1. செயல்பாடு மற்றும் கடன் தகுதி மதிப்பீடு
2. வங்கிக்கடன்கள் வழங்குதல்
3. மூலப்பொருட்களை பெறுவதில் உதவி
4. ஒரே இடத்தில் பதிவு செய்தல்
5. தகவல்கள், ஊடகங்கள் சேவை
6. சந்தைசார் நுண் தகவல் சேவைகள்
7. வாங்கும், விற்கும் பொருள், சீட்டுகளின் பெயரில் கடன் வழங்குதல்
8. தேசிய சிறு தொழில் கார்ப்பரேஷன் உள் கட்டமைப்பு வசதி
   (i) காட்சிக்கூடம், ஐதராபாத்
   (ii) தகவல் தொழில்நுடபம் ஊக்குவிப்பு மையம்
   (iii) காட்சிக்கூடம் மற்றும் விற்பனை மேம்பாட்டு வணிக மையம்
   (iv) மென்பொருள் தொழில்நுட்ப மற்றும் வணிக மையம்
   (v) வணிக மையம், புது டெல்லி

**விவசாயப் பொருள்கள்சார் தொழில் நிறுவனங்கள் துறைத் திட்டங்கள்**

1. பிரதம மந்திரி வேலை வாய்ப்பு உருவாக்கல் திட்டம்
2. காதி கைவினைஞர்களுக்கு ஜன்ஸ்ரீ காப்புத் திட்டம்
3. வர்த்தக மேம்பாட்டுத் திட்டம்
4. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டம்
5. தேங்காய் நார் மேம்பாட்டுத் திட்டம்
6. தேங்காய் நார் விரிவாக்கத் திட்டம்
   (i) ஏற்றுமதிச் சந்தை மேம்பாடு
   (ii) திறன்மேம்பாடு மற்றும் மகளிருக்கான தேங்காய் நார்த் திட்டம்
   (iii) உற்பத்தி உள் கட்டமைப்பு வசதி மேம்பாடு
   (iv) தேங்காய் நார் தொழில் திட்டப் பணியாளர்களுக்கு விபத்துக் காப்பீட்டுத் திட்டம்
   (v) வர்த்தகம் மற்றும் தொழில்சார் செயல்பாட்டிற்கான உதவித் திட்டங்கள்
   (vi) உள்நாட்டு விநியோக மேம்பாடு திட்டம்
7. விவசாய பொருள்கள், தொழில் நிறுவனங்களில் நவீன தொழில்முனைவு
8. பாரம்பரிய தொழில்களை புதுப்பிக்க நிதியம்

பிரதம மந்திரி வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் கடன்சார் மானியத் திட்டம் ஒன்றை இந்த அமைச்சகம் செயல்படுத்தி இளம் தொழில்முனைவோர், பொருள் உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் புதிய குறு தொழில்களை துவங்க உதவி செய்கிறது. 2014-16இல் (மார்ச் 8, 2016 வரை) இந்தத் திட்டத்தின்கீழ் 112883 தொழில்கள் துவக்கப்பட்டு 8,71,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன. 2015இல் கிராமப்புற தொழில் முனைவு மற்றும் புதியன கண்டுபிடிப்புக்கு இந்த அமைச்சகம் ஒரு திட்டத்தை துவக்கியது. விவசாய பொருட்கள் சார்ந்த தொழில்களில் புதியன கண்டுபிடிக்கும் தொழில் முனைவையும் ஊக்குவிக்க தொடர் தொழில்நுட்ப மையங்களும், புதிய தொழில்களை உருவாக்கும் மையங்களும் அமைக்கப்பட்டன. இந்தத் திட்டங்களின் கீழ் தொழில்நுட்ப வணிக மையங்கள், வாழ்வாதார வியாபார மையங்கள் மற்றும் இந்தத் துறை மேம்பாட்டிற்கான நிதியங்களுக்கு பணம் வழங்கு, பெறு நிதியமும் உருவாக்கப்பட்டது.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகம், சிறு தொழில் மேம்பாட்டு வணிகக் கழகம் ஆகியவை இணைந்து குறு சிறு தொழில்களுக்குக் கடன் உறுதி நிதியம் ஒன்றை அமைத்து அதன் மூலம் நிறுவனங்களுக்கு வங்கிகள் மூலம் எந்தவொரு பொருளையும் பிணையாகவும் மூன்றாவது நபர் உத்தரவாதம் இல்லாமலும் கடன் வழங்கி அவர்கள் புதிதாக தொழில் துவங்க உதவி வருகிறது.

செப்டம்பர் 2015இல் இந்த அமைச்சகம் தொழில் ஆதார் திட்டத்தை துவக்கியது. இந்தத் திட்டத்தின் மூலம் தொழில் முனைவோர் தங்களுடைய புதிய தொழில்களை மிகவும் எளிதாக பதிவு செய்யலாம். இந்த அமைச்சகம் செயல்படுத்தும் உத்யோக் ஆதார் இணையதளம் http://udyogaadhaar.gov.in மூலம் கணினிசார் பதிவு செய்யலாம். இதற்கு எந்த செலவும் இல்லை. எத்தனைத் தொழில்களை வேண்டுமானாலும் பதிவு செய்யலாம். இந்தப் பதிவை தொழில் முனைவோர் தாங்கள் வெளியிடும் தகவல்களின் அடிப்படையில் செய்யலாம். இந்த வகையில் இது வரையில் 4,17,000 மேற்பட்ட குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொருள்களை விற்பனை செய்வதில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. உலகெங்கும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவன பொருட்களை பொதுக் கொள்முதல் செய்வது ஒரு பெரிய சந்தைப் பழக்கமாக உள்ளது. அரசு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனப் பொருள்களுக்கு பொதுக் கொள்முதல் ஆதரவு அளிப்பதற்கான கொள்கையை ஏப்ரல் 1, 2012 அன்று அறிவித்தது. இந்தத் திட்டத்தின்படி மத்திய அரசின் அமைச்சகங்கள், துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் தங்களுடைய மொத்த பொதுக் கொள்முதலில் 20 சதவிகிதத்தை இந்த நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டும். மேலும் தனிப்பட்ட வகையில் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடி மக்களின் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களிலிருந்து செய்யப்படும் பொதுக் கொள்முதல் 4 சதவிகிதம் இருக்க வேண்டும்.

இந்தியப் பொருள் உற்பத்தி போட்டித்திறனை ஊக்குவிக்க ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்புக்கூட்டு முறையில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஜனவரி 31, 2016 வரை ரூ.43.15 கோடி செலவில் தர மேம்பாடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகம் இந்தத் தொழில்களுக்கு உதவுவதற்காக 18 தொழில்நுட்ப மையங்களை உருவாக்கியுள்ளது. இந்த மையங்கள் இந்தியத் தொழில்களுக்கு மதிப்பிட முடியாத சேவைகளை வழங்குகிறது. துல்லியமான கருவிகளையும் நன்கு பயிற்சி பெற்ற கைவினைஞர்களையும் உருவாக்குகிறது. பலதரப்பட்ட பொருட்களின் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஏதுவான மனித வளங்களை இந்தத் தொழில்நுட்ப மையங்கள் வழங்குகின்றன.

இந்தத் தொழில்களுக்கு ஏற்ற பயிற்சித் திட்டங்களையும் இந்த மையம் செயல்படுத்தி வருகிறது. செயல்படாமல் இருக்கும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீண்டும் செயல்பட ஏதுவான திட்டம் ஒன்றை 29.5.2015 அன்று அரசு வெளியிட்டுள்ளது.


ஆகஸ்ட் 15, 2015இல் இந்திய பிரதமர் நிமிர்ந்து நில் திட்டத்தை அறிவித்தார். இது ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் மற்றும் மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடி மக்கள் மற்றும் மகளிர் தொழில்கள் துவங்க ரூ.10 இலட்சம் முதல் 1 கோடிவரை 7 ஆண்டு வங்கிக்கடன் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் புதிய தொழில்களை உருவாக்குவதற்கு ஏற்ற சுற்றுச்சூழலை போற்றுவிக்கிறது. இந்தத் திட்டத்தை ஊக்குவிக்க இந்தத் துறையில் தொழில் நிறுவனங்களை உருவாக்குபவர்களுக்கு முன் அனுபவம் மற்றும் உற்பத்தி அளவு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், தரம் மற்றும் தொழில்நுட்ப நிலைகளில் எந்த விலக்கும் அளிக்கப்படமாட்டாது. சட்ட திட்டங்களுக்கு ஏற்ப இவர்கள் தொழில்களைத் துவங்கவேண்டும் - உற்பத்தி மையம் இந்தியாவில் இருக்கவேண்டும்.

தற்போது உலகளவில் பல முன்னேறிய நாடுகளில் வயது முதிர்ந்தோர் உள்ளனர். 2020 வாக்கில் இந்தியாவில் இளைஞர்கள் மிகுதியாக இருப்பார்கள். ஆகவே, நாம் இளைஞர்கள் மேம்பாட்டில் முதலிட வேண்டும். நாட்டு மொத்த ஜனத்தொகையில் இவர்களின் பங்கு 63 சதவிகிதம் இருக்கும் ஆதலால், அவர்களுக்கு தேவையான வேலை வாய்ப்பும், வாழ்வாதாரமும், சுய வேலை வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்தத் துடிப்பான இளைஞர்கள் ஒரு நாட்டின் மிக முக்கியமான மனித வளமாகும். நாட்டை மேம்படுத்துவதில் அவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. அதற்கேற்றவாறு அவர்களை வேலை வாய்ப்புகளுக்குத் தயார்படுத்த வேண்டும்.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தேசியக் கழகத்தின் பங்கு தற்போது செயல்படும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தேசிய கழகம் முன்பு 1960லிருந்து புது டெல்லியில் மத்திய தொழில் விரிவாக்கப் பயிற்சிக்கழகமாக செயல்பட்டு வந்தது. இந்த நிறுவனம் கட்டுப்பாடுகள், நியதிகள் ஆகியவைகளால் பாதிக்கப்பட்டு சிறப்பாக செயல்படாத நிலையில் அவற்றிலிருந்து விடுபட்டு சிறு தொழில்களுக்கு சிறப்பாகச் சேவை செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிறுவனம் 1962இல் சிறு தொழில் விரிவாக்கப் பயிற்சி என்ற பெயரில் ஐதராபாத்துக்கு மாற்றப்பட்டது. இந்த நிறுவனத்தை மத்திய அரசு நியமித்த நிர்வாகக் கவுன்சில் நடத்தி வருகிறது. பிறகு, 2007இல் தேசிய அளவு சிறப்பு பெற்று குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தேசிய கழகம் என்று பெயர் மாற்றப்பட்டது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகத்தின்கீழ் இந்தக் கழகம் பயிற்சிகள், ஆராய்ச்சிகள், ஆலோசனைகளை வழங்குவதற்கான மையமாக செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்திற்கு சுயமாக செயல்படும் அதிகாரமும் நிதி சேர்க்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தொழில்நுட்பக் கூட்டுறவுக்கான காமன்வெல்த் நிதியம், ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனம், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம், ஃபோர்டு நிதியம், ஜெர்மனியின் GTZ, பன்னாட்டு மேம்பாட்டிற்கான அமெரிக்க ஏஜென்சி, பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் ஆகிய நிறுவனங்களுடன் இலாபகரமான போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கும் பணியாளர்களுக்கு மாற்றுத் திறன்கள் வழங்கவும், திறன்களை மேம்படுத்தவும் இந்த அமைப்பு மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது.

**செயல்பாட்டு அமைப்பு முறை**

- தொழில் முனைவு
- தொழில்பகுதி மேம்பாடு
- திறன் மேம்பாடு
- குறு நிதி வழங்குதல்
- வியாபார மேம்பாட்டுச் சேவைகள்
- உட்பிரிவு துறைகள் மேம்பாடு



**• திறன் வளர்ப்பு :**

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வலுப்படுத்த தேசிய அளவில் ஆதாரங்கள் மேம்படுத்தப்பட்டது. பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் தொழில்முனைவு மேம்பாடு, குறு ஆய்வுக்கூடங்கள் நிறுவன மேம்பாடு மற்றும் நிர்வாகம் மாநிலங்களில் உள்ள சிறு, குறு தொழில்களுக்குத் திறன் வளர்ப்பு உதவி அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட பகுதியில் செயல்படும் பல குறு, சிறு நிறுவனங்களுக்கு தேவைக்கேற்ற பயிற்சித் திட்டங்கள்.

**• தகவல் அளித்தல் மற்றும் அறிவுசார் மேலாண்மை :**

தொழில்துறைசார் இதழ்களை வெளியிடுதல், வலைதளம் மூலம் பயிற்சி வகுப்புகளை நடத்துதல் வெளியீடுகளை வெளியிட்டு குறு, சிறு, நடுத்தரத் தொழில்களைப் பற்றிய தகவல்களைப் பரப்புதல் (ஆங்கிலம், இந்தி, இதர இந்திய மொழிகளில்) குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனத் தகவல் வலைதளம் மூலம் இந்நிறுவனங்களுக்கு உதவுதல். சம்மந்தபட்டவர்களுக்கு தகவல் அளித்தல், இது சார்ந்த கைப்பேசி செயலிகள் உருவாக்குதல்.

**• ஆய்வு மற்றும் கொள்கைசார் பரப்புரை :**

குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான பல திட்டங்களைப்பற்றி தேசியஅளவிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறு, சிறு, நடுத்தரத் தொழில்சார்ந்த முனைவர் பட்ட ஆய்வு உதவி நிதியை நிர்வகித்தல், நாட்டில் தொழில்முனைவை ஊக்குவிக்கும் வண்ணம் தங்கள் மாநிலங்களில் உள்ள இந்நிறுவனங்களுக்காக செயல்படும் துறைகளை மாற்றியமைக்க மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**• குறு. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனம்சார் பன்னாட்டுக் கூட்டுறவு :**

விவசாயம் அல்லாத வாழ்வாதாரங்கள், தொழில் மேம்பாடு, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்சார் பன்னாட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதுவரை குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்ந்த நிலைமைகளில் 10,000 வெளிநாட்டினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**• தொடர்பு வலை :**

குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான மத்திய மாநில அரசுகளின் பல்வேறு குழுக்களின் பங்கேற்பு, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளைத் துவக்கி வலுவூட்டுதல். தேசிய மாநில அளவிலான பன்னாட்டு தொழில் அமைப்புகளோடு தொடர்பு ஏற்படுத்துதல்.

**• உற்பத்தி மையங்களின் தகவல் சேகரிப்பு :**

ஒரே இடத்தில் குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், தொழில்நுட்ப மேம்பாடு, தனியார் பொதுத்துறை கூட்டு முயற்சியாக பொதுச் சேவை மையங்களைத் துவக்குதல். தேவையான முன்னேற்றங்களை ஏற்படுத்த உற்பத்தி மையங்களில் சிறப்பு நிறுவனங்களை அமைத்து தொழில்நுட்ப மேம்பாட்டை ஏற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு.

**• வாழ்வாதாரம்சார் புதிய வியாபாரங்களைத் துவக்க மையம் :**

எட்டு வியாபாரத் துறைகளில் இந்த மையங்களை அமைத்து நிலைத்து நிற்கும் வாழ்வாதாரத்தை உருவாக்க தொழில் முனைவோருக்கு உதவி மற்றும் வங்கி, பிற நிதி வசதிகள் அளித்தல்.

இந்தப் பயிற்சிக் கழகம், 2015-16 வரை 14034 திட்டங்களை செயல்படுத்தி 4,62,393 பேருக்கு பயிற்சி அளித்துள்ளது. இதில், தற்போதுள்ள மற்றும் புதிய தொழில் முனைவோர்கள் மற்றும் மத்திய மாநில அரசுகளின் அலுவலர்கள் அடங்குவர். வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மற்ற நாட்டவர்க்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் 1976முதல் 142 வளரும் நாடுகளிலிருந்து 9450 பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதுவரை 909 ஆய்வு மற்றும் கலந்தாய்வு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

---

- **சந்திரசேகர் ரெட்டி,** தெலுங்கானா ஹைதராபாத்தில் உள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான தேசிய நிறுவனத்தின் தலைமை இயக்குநர்

- **திவ்யேந்து சௌத்ரி,** குறு சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தேசிய நிறுவனத்தில் ஆசிரியர்.

# குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்களுக்கான தரச்சான்றிதழ்

- டாக்டர் ஜிதேந்திரசிங்

எந்த ஒரு தொழிலுக்கும் உந்து சக்தியாக சர்வதேச போட்டியே அமைகிறது. மாறிவரும் சந்தை நிலைமைகள் மற்றும் போட்டிக்கு ஏற்ப சர்வதேச சவால்களை எதிர்கொண்டு தகவமைத்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் குறு, சிறு மற்றும் நடுத்தரத் (எம்.எஸ்.எம்.இ) தொழில்களுக்கு இருக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான ஆதார மையமாக எம்.எஸ்.எம்.இக்கள் விளங்குகின்றன. ஏனெனில் இந்தப் பிரிவுதான் நம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில்முனைவுக் கலாச்சாரத்தைப் பரப்பி வருகிறது. உள்நாட்டு மொத்த உற்பத்தியில் (ஜி.டி.பி) எம்.எஸ்.எம்.இ பிரிவின் பங்கு 8 சதவிகிதம் ஆகும். அதேபோன்று உற்பத்தி வெளியீடுகளின் பங்கு 45 சதவிகிதம் ஆகும். நாட்டின் ஏற்றுமதியில் பங்கு 40 சதவிகிதம் ஆகும். இந்தப் பிரிவில் அனைவரையும் உள்ளடக்கும் இந்திய அரசின் முயற்சிகள் பாராட்டப்படுகின்றன. பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், விளிம்புநிலை சமுதாயத்தினர், மாற்றுத் திறனாளிகள் என அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கும் பல்வேறு திட்டங்கள் இந்தப் பிரிவில் உள்ளன. இவர்கள் தொழில்கள் தொடங்குவதற்கு இந்தத் திட்டங்கள் உதவி செய்கின்றன.

உலகம் இப்போது மாற்றத்தின் இடைப்பட்ட காலகட்டத்தில் உள்ளது. நுண் பொருளாதாரம் மற்றும் பேரியல் பொருளாதாரங்களில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு சர்வதேச அணுகுமுறைகள்தான் தேவைப்படுகின்றன. இந்தியா எம்.எஸ்.எம்.இ பிரிவில் மிகப்பெரும் தொழிற்சாலைத் தொகுதிகளைப் பெற்றுள்ளது. சாதகமான தொழில் கொள்கைகளின் பின்புலத்தோடு இப்பிரிவில் தகுதியையும் தொழில்நுட்பத்தையும் சுதந்திரமாகச் செயல்பட வாய்ப்பு ஏற்படுத்தித் தரலாம்.

இதன் மூலம் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உறவுப்பின்னலை மேம்படுத்த முடியும். கொள்கை உருவாக்குபவர்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தோமானால், புதிய சேவைகள், புதிய உற்பத்திப் பொருட்கள், செயல்முறைகள், வர்த்தக புத்தாக்க மாதிரிகள் ஆகியவற்றை எம்.எஸ்.எம்.இ தொழிற்சாலைகள் உருவாக்குவதோடு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும் அவை முக்கியப் பங்காற்றுவதை உணர முடியும். தர மேலாண்மை அமைப்புகள், வலைப்பின்னல் அமைப்புகள் மற்றும் பெரும் தொழிற்சாலைகளுடனான உறவுகள் ஆகியவற்றின் மூலம் எம்.எஸ்.எம்.இக்கள் வர்த்தக புத்தாக்கங்களைச் செம்மைப்படுத்தி பெருமளவில் உற்பத்தி செய்ய முடியும். ஏற்றுமதியில் ஆழமாகக் கால் ஊன்றிச் செயல்படவும் போட்டிச் சந்தைகளில் பங்கேற்கவும் தரச் சான்றிதழ் பெற்றிருப்பது என்பது மிகவும் குறிப்பிடத்தக்க தேவையாக மாறி உள்ளது. தரச் சான்றிதழ்கள் பெறுவது என்பது பெரிய தொழிற்சாலைகளின் பணி என இனியும் ஒதுங்கி இருக்க முடியாது. தேவையின் அடிப்படையில் எம்.எஸ்.எம்.இகள் தரச் சான்றிதழ் பெற முன்வருவது இப்போது அதிகரித்து வருகிறது. எம்.எஸ்.எம். இகளுக்கான போட்டி அனுகூலங்கள் அதிக உற்பத்தித் திறனையும் இலாபத்தையும் ஏற்படுத்தித் தருகின்றன. ஒரு தொழிற்சாலையின் தர மதிப்பு அளவுகள் சர்வதேச மதிப்பீடுகளுடன் ஒருங்கிணைந்து இருந்தால் மட்டுமே அந்தத் தொழிற்சாலை அதிக உற்பத்தித் திறனையும் தொடர்ச்சியான இலாபத்தையும் அடைய முடியும்.

எம்.எஸ்.எம்.இ-களின் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கு தரம் மற்றும் தொழில்நுட்பங்களின் நிலையை உயர்த்துவது என்பது முக்கியமான காரணிகளாக உள்ளது. மிகப்பெரும் தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில்நுட்பத்தையும் தரத்தையும் தொடர்ந்து நிலை உயர்த்துவதற்கு தேவையான சாதனங்களையும் மூலவளங்களையும் வைத்திருக்கின்றன. ஆனால் எம்.எஸ்.எம்.இ-களிடம் மூலவளங்கள் குறிப்பிட்ட அளவே உள்ளன. மேலும் அவற்றுக்கான நிதியும் குறைவாகவே கிடைக்கும். எனவே தங்களது நிலையை உயர்த்திக் கொள்ளுதல் என்பது எம்.எஸ்.எம்.இ-களுக்கு சிரமமானதாகவே இருக்கிறது. இவற்றில் பெரும்பான்மையானவை சர்வதேச மதிப்புச் சங்கிலியில் ஒரு குறிப்பிட்ட புள்ளியைத் தாண்டி வளர முடியாமல தேங்கி விடுகின்றன. இதற்குக் காரணம் அவற்றின் போட்டியிட முடியாத தன்மையே ஆகும். பொருளாதார வளர்ச்சியில் எம்.எஸ்.எம்.இகளின் இன்றியமையாத தன்மையை உணர்ந்த எம். எஸ்.எம்.இ அமைச்சகம் எம்.எஸ்.எம்.இ தொழில் அலகுகளின் உற்பத்திச் செயலில் உள்ள தரம் மற்றும் தொழில்நுட்ப அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டது. சிறுவர்த்தகத்தில் போட்டித் தன்மையை அதிகரிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களையும் இந்த அமைச்சகம் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

ஒரு நிறுவனம் தரச் சான்றிதழ் பெற்றால் அதனால் கீழ்வரும் பலன்கள் அந்நிறுவனத்திற்குக் கிடைக்கின்றன:

- அங்கீகாரம் மற்றும் பிராண்டின் நற்பெயர்
- தொடர்ச்சியான அபிவிருத்தி
- கவனம் தொடர்ச்சியாக குவிக்கப்படுதல்
- தன்னம்பிக்கை
- ஊழியர்கள் திருப்தி அடைதல் மற்றும் உற்பத்தியில் அவர்கள் ஊக்கத்துடன் பங்கேற்றல்

இந்திய அரசாங்கத்தின் தரச்சான்றிதழுக்கான பல்வேறு திட்டங்கள்:

**தேசிய உற்பத்திப் போட்டித் திட்டம் (என்.எம்.சி.பி)**

இந்தத் திட்டத்தின் கீழ் பத்து செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஐ.சி.டி. மேம்பாடு, சிறிய உபகரண அறை, வடிவமைப்பு கிளினிக்குகள், எம்.எஸ்.எம்.இகளுக்கான சந்தை ஆதரவு போன்ற செயல் திட்டங்கள் இதில் உள்ளடங்கும். இந்தச் செயல் திட்டங்கள் உற்பத்தி பிரிவானது போட்டியைச் சமாளிக்க உதவும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளன. இந்த உற்பத்தி பிரிவானது தர மேலாண்மை மதிப்பீடுகள் மற்றும் தர தொழில்நுட்பக் கருவிகள் (கியூ.எம்.எஸ்/ கியூ.டி.டி) வழியாக செயல்படுத்தப்படும்.

**எம்.எஸ்.எம்.இ-களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தர நிலை உயர்த்துதலுக்கான ஆதரவு**

உற்பத்தித் தொழில் பிரிவுகளில் ஆற்றலைத் திறம்படப் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்க இந்தத்திட்டம் ஊக்கப்படுத்துகிறது. இதன் மூலம் உற்பத்திச் செலவு குறைக்கப்படும். மேலும் மாசு ஏற்படுத்தாத வளர்ச்சி மாதிரியை இது கடைபிடிக்க ஊக்கப்படுத்தும்.

**ஜெட் (ஜீரோ பாதிப்பு ஜீரோ தாக்கம்) சான்றிதழ் திட்டத்துக்காக எம்.எஸ்.எம்.இ-களுக்கு நிதி உதவி**

எம்.எஸ்.எம்.இகளில் ஜீரோ பதிப்பு உற்பத்தியை வலுப்படுத்துவதற்கான சூழல் அமைப்பை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. தர உபகரணங்கள் மற்றும் ஆற்றலைத் திறம்படப் பயன்படுத்தும் உற்பத்தி ஆகியவற்றைக் கடைபிடிப்பதன் மூலம் இந்த இலக்கு அடையப்படும். இந்தத்திட்டம் இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் என்ற பிரச்சாரத்திற்கு ஆதரவாக இருக்கிறது. இத் திட்டத்தின் கீழ் எம்.எஸ்.எம்.இகள் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலத் தரச் சான்றிதழ்களைப் பெற்றாக வேண்டும். அப்போதுதான் ஒப்பந்தங்கள் கிடைக்கும். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிகத்

தரத்திலான பொருட்களை எம்.எஸ்.எம்.இகள் உற்பத்தி செய்து விநியோகிக்க இந்தத்திட்டமானது உதவும். ஜெட் சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கைகளுக்காக எம்.எஸ்.எம்.இகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. மதிப்பீடு/ தரவரிசைப்படுத்துதல், இடைவெளி பகுப்பாய்வு, ஆதரவு தருதல் ஆகியன இதில் உள்ளடங்கும். எம்.எஸ்.எம்.இகளைத் தரவரிசைப்படுத்துவதற்கான ஆலோசனையானது தகுந்த ஆலோசகர்கள் மூலம் வழங்கப்படும். ஜெட் தரவரிசைப்படுத்தலுக்கு 50 காரணிகள் உள்ளன. மேலும் ஜெட் முதிர்வு மதிப்பீட்டு மாதிரியின் கீழ் ஜெட் தற்காப்பு தரவரிசைப்படுத்தலுக்கு மேலும் கூடுதலாக 25 காரணிகள் உள்ளன. ஜெட் சான்றிதழை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனமானது (கியூ.சி.ஐ) தேசிய கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்துதல் அலகாகச் (என்.எம்.ஐ.யூ) செயல்படுகின்றது. ஜெட் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 22,000 எம்.எஸ்.எம்.இகளுக்கு வெண்கல நிலை சான்றிதழ் அளிப்பதை இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் இலக்காக நிர்ணயித்துள்ளது. அரசாங்கமும் தொழில் பிரிவினரும் ஒன்றாகச் சேர்ந்து தேசிய அங்கீகார அமைப்பை நிறுவவும் தரமதிப்பீடுகளை மேம்படுத்தவும் கியூ.சி.ஐ நிறுவனத்தை அமைத்துள்ளனர்.

**இந்தத் திட்டத்தின் விவரம் கீழே தரப்படுகின்றது:**

| செயல் | மொத்த செலவு* | இந்திய அரசின் உதவி | மானியத்துக்குப் பிறகு விண்ணப்பதாரருக்கு ஏற்படும் செலவு* |
|---|---|---|---|
| பதிவு செய்தல் | இலவசம் | பொருந்தாது | இலவசம் |
| ஆன்லைனில் சுயமதிப்பீடு | இலவசம் | பொருந்தாது | இலவசம் |
| டெஸ்க்டாப் மதிப்பீடு | ரூ. 10,000/ | குறுந்தொழில்: 80% | ரூ. 2,000/ |
| | | சிறு தொழில்: 60% | ரூ. 4,000/ |
| | | நடுத்தரத் தொழில்: 50% | ரூ. 5,000/ |
| தள மதிப்பீடு | ரூ. 80,000/ | குறுந்தொழில்: 80% | ரூ. 16,000/ |
| | | சிறு தொழில்றீ: 60% | ரூ. 32,000/ |
| | | நடுத்தரத் தொழில்: 50% | ரூ. 40,000/ |
| மறு-மதிப்பீடு | ரூ. 40,000/ | குறுந்தொழில்: 80% | ரூ. 8,000/ |
| | | சிறு தொழில்: 60% | ரூ. 16,000/ |
| | | நடுத்தரத் தொழில்: 50% | ரூ. 20,000/ |
| தற்காப்பு மதிப்பீடு | ரூ. 40,000/ | குறுந்தொழில்: 80% | ரூ. 8,000/ |
| | | சிறு தொழில்: 60% | ரூ. 16,000/ |
| | | நடுத்தரத் தொழில்: 50% | ரூ. 20,000/ |
| இடைவெளி பகுப்பாய்வு - ஆதரவு | ரூ. 1,90,000/ | குறுந்தொழில்: 80% | ரூ. 38,000/ |
| | | சிறு தொழில்: 60% | ரூ. 76,000/ |
| | | நடுத்தரத் தொழில்: 50% | ரூ. 95,000/ |

ஆதாரம்: இந்தியத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனம்

## தரச் சான்றிதழ்கள் ஐ.எஸ்.ஓ தரச்சான்றுக்கு உதவி

ஐ.எஸ்.ஓ 9001 என்பது உலக அளவில் அதிகம் அங்கீகரிக்கப்பட்ட தர மேலாண்மை அமைப்பாகும் (கியூ.எம்.எஸ்). தங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் நிறைவு செய்யும் ஒரு நிறுவனத்துக்கு இந்த அமைப்பானது உதவுகிறது. இது மட்டுமல்லாமல் வேறு பலன்களும் இதனால் கிடைக்கின்றன. ஒரு ஐ. எஸ்.ஓ 9001 தர மேலாண்மை அமைப்பானது ஒரு தொழிற்சாலையில் அதன் அனைத்து வகையான இயக்கங்களிலும் செயல்பாடுகளிலும் தொடர்ச்சியாகத் தரத்தைக் கண்காணிக்கவும் உறுதிப்படுத்தவும் உதவுகிறது. தொடர்ச்சியாக செயல் திறனையும் சேவையையும் ஒரே விதமாகப் பராமரிப்பதற்கான வழி முறைகளையும் இது எடுத்துக்காட்டுகிறது. ஒரு தொழிலின் அனைத்துச் செயல்பாடுகளிலும் சிறந்த தகுதி நிலையை மேம்படுத்துவதற்கான ஒரு மேலாண்மைக் கருவியாகவும் இது இருக்கிறது. இந்தத் தர அளவுகள் தர மேலாண்மை அமைப்புகளோடு (கியூ.எம்.எஸ்) தொடர்புடையவை ஆகும். மேலும் இவை நிறுவனங்கள் அவற்றின் தர மதிப்பீட்டு அளவீடுகளை நிறைவு செய்வதை உறுதிப்படுத்த உதவுவதோடு அனைத்துப் பங்குதாரர்களின் தேவைகளையும் நிறைவு செய்கின்றன. ஐ.எஸ்.ஓ சர்வதேச தர மதிப்பீடுகள் எம்.எஸ்.எம்.இகள் கூடுதல் திறனுடன் செயல்பட உதவுகின்றன. ஏனெனில் பெரும்பான்மை உற்பத்தி நிறுவனங்களின் தர மதிப்புகளாக இவை மாறிவிடுவதே இதற்குக் காரணம் ஆகும். ஐ. எஸ்.ஓ 9001 தர மதிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்தின் உள்முகமான மற்றும் வெளியில் இருக்கும் பங்குதாரர்கள் என அனைவரிடம் இருந்தும் ஒத்துழைப்பும் பின்னூட்டமும் தேவைப்படும். தர மேலாண்மை விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு ஒட்டுமொத்தமான மதிப்பீட்டை நிறுவனத்துக்குள் மேற்கொள்ள வேண்டும்.

தரச் சான்றிதழ் பெறுவதற்கான நிதி உதவிகளைப் பல்வேறு வகையாக பல்வேறு மாநில அரசுகள் வழங்கி வருகின்றன. குஜராத் மாநில அரசு எம்.எஸ்.எம்.இகளுக்கு கீழ்வரும் திட்டத்தை வகுத்துள்ளது:

### தகுதியான செலவு

தகுதி வாய்ந்த ஒரு தொழில் நிறுவனம் ஐ.எஸ்.ஐ / டபிள்யூ.ஹெச்.ஓ / ஜி.எம்.பி / ஹால்மார்க் போன்ற தரச்சான்றுகள் மற்றும் இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் (கியூ.சி.ஐ) அங்கீகரித்துள்ள தேசிய, சர்வதேச சான்றிதழுக்கான இ.ஆர்.பி மற்றும் ஐ.எஸ்.ஓ போன்ற தரச்சான்றுகளைப் பெறுவதற்கு செலவிடும் தொகையைத் திரும்பப் பெறலாம். ஒவ்வொரு சான்றிதழுக்குமான செலவையும் திரும்பப் பெறமுடியும் (இதில் சான்றிதழைப் புதுப்பித்தல் கட்டணம் அடங்காது).

### தகுதியான செலவு என்பதில் கீழ்வருவன உள்ளடங்கும்:

- சான்றிதழ் அளிக்கும் ஏஜென்சி வசூலிக்கும் கட்டணம்
- தொழிற்சாலைகள் ஆணையரகம் அனுமதித்துள்ள தொழில் நிறுவன மூலவள திட்டமிடல் (இ.ஆர்.பி) அமைப்புச் சேவைகள்
- சான்றிதழ் பெறுவதற்காக உபகரணங்களைப் பரிசோதித்துப் பார்க்கும் செலவு
- உபகரணங்களை மறுசீரமைக்கும் செலவுகள்
- ஐ.எஸ்.ஓ சான்றிதழ் பெறுவதற்கான ஆலோசனைக் கட்டணம் (பயணச் செலவு, ஹோட்டல் மற்றும் கண்காணிப்பு செலவுகள் இதில் அடங்காது).
- இ.ஆர்.பி கணினி மென்பொருள் நிறுவப்படுகின்றது. உற்பத்திப்பொருள் திட்டமிடல், பொருட்களை வாங்குதல், இருப்பு கட்டுப்பாடு, விநியோகம், கணக்குப் பதிவியல், சந்தைப்படுத்துதல், நிதிச் சேவைகள், மனிதவள மேலாண்மை போன்ற சான்றிதழ்

அளிக்கப்படலாம் (அனைத்து பிரிவுகளும் சர்வர் லிங்க்கேஜ்களுடன் நெட்வொர்க் மூலம் இணைக்கப்பட வேண்டும்).

**கிடைக்கும் உதவிகள்**

கீழே குறிப்பிடப்படும் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் தனியாக அல்லது கூட்டாக உதவி பெற ஒரு தொழில் நிறுவனம் தகுதி பெறலாம்.

**1. இ.ஆர்.பி அமைப்பு:-**

தொழிற்சாலைகள் இயக்குநரகம் வழங்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட இ.ஆர்.பி சேவைகளின் இ.ஆர்.பி அமைப்பை நிறுவுகின்ற தொழில் நிறுவனத்திற்கு அதன் மூலதனச் செலவில் 50 சதவிகிதம் தொகை கிடைக்கும். இத் தொகையானது அதிகபட்சமாக ரூ.50,000/ வரை கிடைக்கும்.

**2. ஐ.எஸ்.ஓ சான்றிதழ்:-**

ஐ.எஸ்.ஓ சான்றிதழ் பெறுவதற்கான ஆலோசனைக் கட்டணத்தில் 50 சதவிதம் வரை உதவி கிடைக்கும். அதிகபட்சமாக ரூ.50,000 வரை உதவி பெறலாம்.

**3. தேசிய மற்றும் சர்வதேசச் சான்றிதழ்:-**

டபிள்யூ.எச்.ஓ, ஜி.எம்.பி, ஹால்மார்க் சான்றிதழ் மற்றும் இதர தேசிய மற்றும் சர்வதேச சான்றிதழ்கள் பெறுவதற்காகச் செலுத்தப்படும் அனைத்துக் கட்டணத்திலும் 50 சதவிகதம் வரை கிடைக்கும். அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை பெறலாம்.

தரச்சான்றிதழ் பெறுவதற்கு முன்பு தேவைப்படும் உபகரணம் மற்றும் கருவிகளைப் பரிசோதித்துப் பார்த்தல், அவற்றை வாங்குதல் ஆகியவற்றுக்கான செலவில் 50 சதவிகிதம் வரை பெறலாம். சான்றிதழ் பெறும் தேதி வரையில் அல்லது செயல்பாட்டுக்கு வரும் காலகட்டம் இரண்டில் எது முந்தையதோ அது வரையிலான மொத்த செலவில் அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை திரும்பப் பெறலாம்.

**பயணிக்க வேண்டிய பாதை**

அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி விகிதமானது 8-10 சதவிகிதம் என்ற அளவில் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால், சர்வதேச சவால்களைச் சமாளிக்கும் வகையில் வலுவான, துடிப்பான பிரிவாக எம்.எஸ்.எம்.இ செயல்பட்டாக வேண்டும். கடந்த ஐந்து ஆண்டுகளில் எம்.எஸ்.எம்.இ பிரிவின் சராசரி வளர்ச்சி விகிதம் 18 சதவிகிதமாக இருந்து வந்துள்ளது. உரிமையாளர்களும் / தொழில் முனைவோர்களும் நிறுவனக் கலாச்சாரத்திற்குள் தரம் குறித்த பிரக்ஞையை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை இப்போது உள்ளது. குடிமையியலைப் பொறுத்த வரையில் நமது நாடு பல வித்தியாசங்கள் கொண்ட நாடாக உள்ளது. எம்.எஸ்.எம்.இ தொழில் தொகுப்புகள் நாடு முழுவதும் பரவலாக பல இடங்களில் இருந்தாலும் இவை சீராக அமைந்திருக்கவில்லை. பல வகையான மற்றும் உயர் நிலையாக்களுக்கான தரச் சான்றிதழ்கள் குறித்து எம்.எஸ்.எம்.இ தொழில் பிரிவுகளுக்கு எடுத்துரைப்பதும் இதற்கான ஆதரவைத் தருவதும் இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். இந்திய எம்.எஸ்.எம்.இ-களுக்கு சர்வதேச தொழில் நிறுவனங்களாக உருவாகும் ஆற்றல் உள்ளது. இதனை வெளிப்படுத்த, எம்.எஸ்.எம்.இகள் தரச் சான்றிதழ்களிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலும் முதலீடு செய்தாக வேண்டும். சர்வதேச போட்டியை முன்வைக்கும் எம்.எஸ்.எம்.இகள் மூலமாக நிலையான தீர்வுகளை உருவாக்குவதன் மூலம் தொழில் உலகின் தேவைகளும் சவால்களும் நிறைவு செய்யப்பட வேண்டும்.

---

- **டாக்டர் ஜிதேந்திரசிங்,** பி.எச்.டி வர்த்தகம் மற்றும் தொழில் அவையின் இயக்குநராக உள்ளார்.

•

# இந்தியாவில் சிறு, குறு, நடுத்தரத்தொழில்களுக்கு நிதி வழங்குவதில் உள்ள சவால்கள்

- அனில் பரத்வாஜ்

**பின்புலம்:**

சிறு, குறு, நடுத்தரத்தொழிலகங்கள் (MSMEs) பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உலகெங்கும் கருதப்படுகின்றன. சமூகப்பொருளாதார, அரசியல், தொழில்நுட்பப்பரிமாணங்களில் பெருமளவிலான இதன் பங்களிப்பை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். அதே சமயத்தில் இவற்றிற்கு நிதி கிடைக்கப்பெறுவதில் ஏராளமான தடைகள் நிலவுகின்றன என்பது ஒருமித்த கருத்தாக இருக்கிறது.

இந்தியாவில் MSMEக்கள், தொழில்கூடங்கள், கருவிகள் ஆகியவற்றிற்கு செய்துள்ள முதலீடுகளின் அடிப்படையிலேயே (கட்டிடங்கள், நிலம் ஆகியவற்றை தவிர்த்து) வரையறை செய்யப்படுகின்றன. ஆனால் பெரும்பாலான மற்ற நாடுகளில் விற்றுமுதல், வேலைவாய்ப்பு அடிப்படையில் தான் MSMEக்கள் வரையறுக்கப்படுகின்றன.

**அட்டவணை: MSME பற்றிய வரையறை**

| வகைகள் | உற்பத்தி (ரூபாயில்)<br>(தொழிற்கூடம், இயந்திரங்களுக்கான முதலீடு) | சேவைகள் (ரூபாயில்)<br>(உபகரணகளுக்கான முதலீடு) |
|---|---|---|
| குறு | 25 இலட்சத்திற்கு மிகாமல் | 10 இலட்சத்திற்கு மிகாமல் |
| சிறு | 25 இலட்சத்திற்கு அதிகமாகவும் 5 கோடிக்கு குறைவாகவும் | 10 இலட்சத்திற்கு அதிகமாகவும் 2 கோடிக்கு மிகாமலும் |
| நடுத்தரம் | 5 கோடிக்கு அதிகமாகவும் 10 கோடிக்கு குறைவாகவும் | 2 கோடிக்கு அதிகமாகவும் 5 கோடிக்கு குறைவாகவும் |

நான்காவது MSME கணக்கெடுப்பு (2006-07), ஆறாவது பொருளாதார கணக்கெடுப்பு (2013), MSMEக்கான மத்திய அமைச்சகத்தின் ஆண்டறிக்கை (2016-17) ஆகியவை இந்தியாவில் 5.13 கோடி MSMEக்கள் இருப்பதாகவும் இவற்றில் 11.1 கோடி பேர் வேலை பார்ப்பதாகவும் தெரிவிக்கின்றன.

உற்பத்தி வெளிப்பாட்டிலும் ஒட்டுமொத்த மதிப்புக்கூட்டிலும் இந்தியாவில் MSMEக்களின் பங்களிப்பு:

| தற்போதைய விலை நிலவரப்படி உற்பத்தி வெளிப்பாடு | | | Share of MSME GVA to GVA\GDP at constant price for base year 2011-12 (%) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | MSME உற்பத்தி (ரூ.கோடியில்). | ஒட்டுமொத்த உற்பத்தியில் MSME உற்பத்தி வெளிப் பாட்டின் பங்கு (%) | MSME உற்பத்திப்பிரிவு | | MSME சேவைப்பிரிவு | | மொத்தம் | |
| | | | IN GVA | In GDP | IN GVA | In GDP | IN GVA | In GDP |
| 2011-12 | 2167110 | 33.12 | 6.64 | 6.16 | 25.66 | 23.81 | 32.29 | 29.97 |
| 2012-13 | 2385248 | 33.22 | 6.77 | 6.27 | 26.05 | 24.13 | 32.89 | 30.40 |
| 2013-14 | 2653329 | 33.27 | 6.79 | 6.27 | 26.40 | 24.37 | 33.19 | 30.64 |
| 2014-15 | 2783433 | 33.40 | 6.63 | 6.11 | 26.72 | 24.63 | 33.34 | 30.74 |

MSMEகளுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன்கள் (நிலுவையில் உள்ள கடன் கோடிகளில்)

| ஆண்டு | பொதுத்துறை வங்கிகள் | தனியார் துறை வங்கிகள் | வெளிநாட்டு வங்கிகள் | பட்டியலிடப்பட்ட அனைத்து வணிக வங்கிகள் |
|---|---|---|---|---|
| மார்ச் 2012 | 5,33,279.29 | 1,24,725.66 | 23,300.71 | 6,81,305.66 |
| மார்ச் 2013 | 6,43,525.02<br>(20.7%) | 1,82,247.82<br>(46.1%) | 43,251.30<br>(85.6%) | 8,69,024.14<br>(27.6%) |
| மார்ச் 2014 (தற்காலிகக் கணக்கு) | 7,54,391.07<br>(17.2%) | 2,46,025.76<br>(35.0%) | 34,359.17<br>(-20.6%) | 10,34,775.99<br>(19.1%) |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி

குறிப்பு: அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டிருக்கும் சதவீதம் ஆண்டுக்கு ஆண்டு ஏற்பட்டுள்ள வளர்ச்சி/வீழ்ச்சியைக் குறிக்கிறது.

MSMEக்களினால் வருவாய் ஈட்டாத நிலையில் உள்ள வங்கி சொத்துக்கள்

(வசூலாகாத மொத்தக் கடன் தொகை கோடிகளில் /வருவாய் ஈட்டாத நிலையில் உள்ள வங்கிச் சொத்துக்கள் சதவீதத்தில்)

| ஆண்டு | பொதுத்துறை வங்கிகள் | தனியார் துறை வங்கிகள் | வெளிநாட்டு வங்கிகள் | பட்டியலிடப்பட்ட அனைத்து வணிக வங்கிகள் |
|---|---|---|---|---|
| மார்ச் 2012 | 24,272.44<br>(6.1%) | 1,880.73<br>(1.7%) | 159.83<br>(0.7%) | 26,312.99<br>(5.0%) |
| மார்ச் 2013 | 28,575.29<br>(5.7%) | 2,506.44<br>(1.6%) | 396.23<br>(1.3%) | 31,477.96<br>(4.6%) |
| மார்ச் 2014 தற்காலிகக் கணக்கு | 38,949.80<br>(6.3%) | 3,021.63<br>(1.5%) | 457.36<br>(1.5%) | 42,428.79<br>(5.0%) |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி

குறிப்பு: அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டிருக்கும் சதவீதம் வருவாய் ஈட்டாத நிலையில் உள்ள வங்கி சொத்துக்களைக் குறிக்கிறது.

மேலும், நான்காவது MSME கணக்கெடுப்பு ஏறத்தாழ 90% MSMEக்கள் நிதித்தேவைக்கு, முறைசாராத ஆதாரங்களையே சார்ந்திருப்பதாகத் தெரிவிக்கிறது.

எந்தப்புள்ளிவிவரத்தை எடுத்துக்கொண்டாலும் MSMEக்கு கடன்கள் வழங்குவதில் மிகப்பெரிய இடைவெளி இருப்பது தெரியவருகிறது.. இந்தத்துறைக்கு மொத்த நிதித்தேவை 32.5 இலட்சம் கோடி. கடன் தேவை 26 இலட்சம் கோடி. பங்குகளின் தேவை 26 இலட்சம் கோடியாக உள்ளது. MSMEக்கள் வங்கிகளுக்கு திரும்பச் செலுத்தவேண்டிய கடன்கள் மொத்தம் 10.34 இலட்சம் கோடி என மதிப்பிடப்படுள்ளது (அட்டவணையைப் பார்க்கவும்). மார்ச் 2016இல் இந்தத்தொகை 11இலட்சம் கோடியாகும். ஏறத்தாழ 2 கோடி MSME கடன் கணக்குகள் உள்ளன. நாட்டில் உள்ள மொத்த MSMEக்களின் எண்ணிக்கை 5 கோடியாகும். மிகப்பெரிய கட்டமைப்பு கொண்டுள்ள MSMEக்களுக்கு தேவையான நிதிக்கட்டமைப்பு இல்லை என்பது இதன் மூலம் வெளிப்படையாகத்தெரிகிறது.

MSMEக்கள் நிறுவனங்கள் சார்ந்த நிதி உதவிகளைப் பெறமுடியாமல் இருப்பதற்கு தேவை,

வழங்கல் ஆகிய இரண்டு பகுதிகளிலும் நெருக்கடிகள் உள்ளன.

**வழங்கல் பகுதியில் உள்ள நெருக்கடிகள்:**

இந்தியாவின் வங்கித்துறையில் 27 அரசுடமை வங்கிகளும், 26 தனியார் வங்கிளும், 46 வெளிநாட்டு வங்கிகளும், 56 மண்டல அளவிலான ஊரக வங்கிகளும், 1574 நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளும், 93913 ஊரக கூட்டுறவு வங்கிகளும் உள்ளன. இவைதவிர கூட்டுறவுக் கடன் சங்கங்களும் இருக்கின்றன. வங்கித்துறையின் மொத்த சொத்துக்களில் 70% சொத்து அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது. வங்கிகளில் உள்ள இருப்பினை (அரசாங்கத்தின் ஈடு, பத்திரங்கள் போன்றவற்றை) இந்தியாவின் அரசாங்கங்கள் பட்ஜெட் பற்றாக்குறைகளை சமாளிப்பதற்காகவும், அரசியல் ரீதியிலான திட்டங்களுக்கு முதலீடு செய்வதற்கும், தங்களுக்கு விருப்பமான திட்டங்களுக்கும், திட்டங்களை செயல்படுத்துவோருக்கும் நிதி வழங்கவும் பயன்படுத்திக்கொள்கின்றன என்ற குற்றச்சாட்டு உள்ளது.

பொதுத்துறை வங்கிகளின் மீது உள்ள அரசின் கட்டுப்பாடு போட்டியை முடக்கிவிடுகிறது. போதுமான அளவிற்குப் பயன்கள் விளையாமல் செய்துவிடுகிறது. 20 கிளைகளுக்கு மேல் உள்ள உள்நாட்டு, வெளிநாட்டு வணிகவங்கிகள் அவை வழங்கும் மொத்தக்கடனில் 40% கடனை வேளாண்மை, MSMEக்கள், கல்வி, வீட்டுவசதி, ஏற்றுமதிக்கடன் போன்றவற்றிற்கு வழங்கிட வேண்டும். முன்னுரிமைத்துறைகளில் இடம்பெறும் MSMEக்களுக்கு எவ்வளவு கடன் தருவது என்பது பற்றிய உள் ஒதுக்கீட்டு இலக்கு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது இங்கு கருதத்தக்கது, கடன்கள் வழங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச Basel-II விதிமுறைகள் MSMEக்களுக்கு கடன் வழங்குவதற்கு தடையாக உள்ளன. கடனை திரும்பப்பெற முடியாத போது சொத்துக்களைக் கைப்பற்றும் சட்ட நடைமுறைகளும் நீண்டுகொண்டேபோவதாக, செலவு பிடிப்பதாக, கடினமானதாக இருக்கின்றன.

**வழங்கல் பகுதியில் நிலவும் நெருக்கடிகள்:**

MSMEக்களில் சிறு, குறு, நடுத்தரம் என்ற மூன்று வகைகள் கலந்து இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் வேறுபட்ட தேவைகளும், வித்தியாசமான சவால்களும் இருக்கின்றன. இவற்றின் முறைசாரத் தன்மையின் காரணமாகவும், இவற்றில் பெரும்பாலானவை அனுமதி பெறாமல் நடைபெறுவதாலும் வங்கிகள் கேட்கும் ஆவணங்களை இவற்றால் வழங்க முடிவதில்லை. துணை ஈடாக பத்திரங்களைத்தரமுடிவதில்லை.

**கொள்கைகை ரீதியான மறுமொழி:**

பிரதம மந்திரியின் ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் நிதி சார் உள்ளடக்கலுக்கு கடந்த சில ஆண்டுகளாக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வங்கிகளுக்கு மேலிருந்து அழுத்தம் தரப்படுகிறது. வங்கிகளின் வசதி கருதி, ஈடு எதுமின்றி MSMEக்களுக்கு கடன் வழங்குவதற்கு கடன் உத்திரவாதப் பொறுப்பு அமைப்பு உருவாகப்பட்டுள்ளது. இந்த நிதியம் திரும்ப வராத கடன்களுக்கு 75% கடன்தொகை வரையிலான காப்பீட்டை வங்கிகளுக்கு செய்துதருகிறது. 2015-16 நிதியாண்டின் இறுதிவரையிலும் ரூ. 1,08,991 கோடி மதிப்பிலான கடன்களுக்கு 23,23,673 கடன் உத்திரவதங்களை கடன் உத்திரவாத பொறுப்பு அமைப்பு (CGTMSE) வழங்கியுள்ளது. இது தவிர இன்னும் பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

**நம் முன்னுள்ள பாதை:**

ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டி இருக்கிறது. தொலைதொடர்புத்துறையில் சேவை வழங்குபவர்கள் எப்படி வாடிக்கையாளர்களைத் துரத்துகிறார்களோ அப்படி ஒரு புரட்சியை வங்கித்துறையிலும், நிதித்துறையிலும் உருவாக்கவேண்டிய தேவை இருக்கிறது.

---

- **அனில் பரத்வாஜ்**, இந்திய குறு சிறு நடுத்தரத் தொழில் கூட்டமைப்பின் செயல்தலைவர்.

●

# இந்தியாவின் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் : தற்போதைய சவால்கள், வாய்ப்புகள் மற்றும் உடனடி தேவைகள்

- P.M. மேத்யூ

## அறிமுகம்

இந்தியக் குடியரசை தோற்றுவித்த முன்னோடிகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு சிறு தொழில்கள் மிகவும் அவசியம் என்று கருதினர். காலப்போக்கில் இந்தத்துறை பல தரப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்து, இந்தியாவின் பொருள் உற்பத்தித்துறைக்கு அடித்தளமாக அமைந்தது. புதிதாக உருவாகும் தொழில்நுட்பங்களால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள உலகப் பொருளாதார மாற்றங்களுக்கிடையே இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கை பரவலாகவும், உண்மையாகவும் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்தான் தொழில்முனைவின் அடித்தளமாக விளங்குகிறது. தொழில்முனைவு என்பது அடிமட்டத்தில் உருவாகிறது - மக்கள் தாங்களே வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளும் நோக்கத்தோடு. இத்தகைய ஆர்வங்களை அறிவுபூர்வமாக ஆராய்ந்து அவர்களை நாம் போற்றி வளர்க்கவேண்டும். ஆகவே, பொருளாதார வளர்ச்சியைப்பற்றி நாம் கருதும் போது, குறிப்பாக வேலைவாய்ப்பை உருவாக்குவதைப் பற்றி நாம் சிந்திக்கும் போது, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் பற்றி ஆலோசிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

## உலகளாவிய முதலீடு மற்றும் தொழில்நிறுவனங்களின் நிலைமை

எந்தவொரு நாட்டிலும், பொதுக்கொள்கை என்பது, உலகளாவிய நிகழ்வுகளால் உந்தப்படுகிறது. பொதுத்துறைக்கும் பொதுத் திட்டங்களுக்கும் இது பொருந்தும். இந்தியாவின் கொள்கை வகுப்புக்கு இந்த அடிப்படை நிலைமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புதிதாக உருவாகி வரும் உலகளாவிய வியாபார உத்திகள் தற்போது புதிய இடங்களில் தொழில்களை நிறுவுதல், இரு பகுதிகளுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் பகுதிசார் பொருளாதாரம் ஆகியவற்றை சார்ந்தே உள்ளன. மிக அதிக அறிவுசார் நிறுவனங்களான கூகுள், ஆப்பிள், ஃபேஸ் புக் மற்றும் அமேசான் போன்றவை ஒரு புதிய தொழில்நுட்ப அலையையும், போட்டிமிக்க சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளன. இதுவே, தொழில்புரட்சியின் அடுத்தகட்ட நிலைமையாக உள்ளது.

நாம் 2017இல் உணர்வது என்னவென்றால், ஒவ்வொரு வியாபாரமும் ஒரு பகுதியைச் சார்ந்து செயல்படுகிறது. இதைத்தான் நாம் பகுதிசார் பொருளாதாரம் என்கிறோம்.

இந்தியா சுதந்திரமடைந்ததற்குப் பிறகு ஏற்பட்ட தொழில்மயமாக்கல் இரண்டு அணுகுமுறைகளைக் கொண்டது : 1) வேலை வாய்ப்புக்களை வழங்குவது மற்றும் 2) இந்த வாய்ப்புக்களை முடிந்த அளவிற்கு கிராமங்களுக்கு எடுத்துச் சென்று பகுதி மேம்பாட்டை ஏற்படுத்துவது. இந்த வகையான அணுகுமுறையினால், பல சிறு நகரப்பகுதிகள் உருவாக்கப்பட்டு அங்கே குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மிகுந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நகர்ப்புறப் பகுதிகளில் பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இருவருமே உள்ளனர். அவர்கள் தங்களுடைய வருமான வாய்ப்பிற்கு தனித்தனியான உத்திகளை மேற்கொள்கிறார்கள். உள்ளூரில் பொருளாதார மேம்பாட்டை உருவாக்குவதற்கு சுய வேலை வாய்ப்பே நல்ல பங்களிக்கிறது. ஆகவே, பொதுக்கொள்கை என்பது, நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளிடையே உள்ள தொடர்புகளை மேம்படுத்துவதாகும்.

“இந்தியாவில் உற்பத்தி செய்வோம்” என்ற திட்டம் மிகவும் பிரபலமாகத்தெரியும் தேசிய அளவிலான இயக்கமாகும். இது, இரண்டு கட்டத்தில்

செயல்படுத்தப்படவேண்டும். முதலாவதாக, மிகப்பெரிய அளவில் அந்நிய மற்றும் உள்நாட்டு மூலதனத்தை நாம் பெற வேண்டும். இரண்டாவதாக, இந்தப்பெரிய தொழில் நிறுவனங்களுக்குக்கூட அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தேவை. அப்படிப்பட்டத் தொடர்புகளை ஏற்படுத்த நம்முடைய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் செயல்திறமைகளை நாம் முழுவதுமாக உணர வேண்டும்.


### சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

இந்தியா சுதந்திரம் பெற்றபின் மேற்கொள்ளப்பட்ட ஐந்தாண்டு திட்டக்காலங்களில் மேற்கூறப்பட்ட அணுகுமுறை பின்பற்றப்பட்டது. ஆனால், திட்டமிட்டு செயல்படுத்தப்பட்ட போது, நிறுவன அமைப்புகளும், கொள்கைச் செயல்பாடுகளும் மையப்படுத்தப்பட்டன. இந்த நிலைமை, ஆங்காங்கே உள்ளூரில் உள்ள பொருளாதார நிலைமைக்கும் செயல்படுத்தப்பட்டது. இந்த அடிப்படையில்தான் நவீன சிறு தொழில் நிறுவனங்களுக்கும் அதே சமயம் கிராமப்புற தொழில்களுக்கும் அடிப்படையாக அமைகிறது (உதாரணமாக, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் ஐவுளித்துறையில் உள்ள பலதரப்பட்ட துறைகளை பார்த்தோம்). இந்த இரண்டு அமைப்புகளுக்குமிடையே, நல்ல உறவு ஏற்பட தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படவில்லை. ஆகவே, உள்ளூர் மக்களையும் அவர்களின் வாழ்வாதாரங்களையும் பாதிக்கும் பொதுத் திட்டங்களின் அவசியம் பற்றி நாம் மீண்டும் ஆராயவேண்டியுள்ளது.

இந்த நிலைமையில், செங்குத்து மற்றும் கிடைமட்டப் பிரச்சினைகள் உள்ளன. ஒரு புறம் உள்ளூர் மக்களின் எதிர்ப்பார்ப்புக்களில் கூட்டுறவு மற்றும் போட்டி என்ற இரு அம்சமும் கலந்துள்ளது. உள்ளூர் உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற நிலைமைகளில் மக்களின் எதிர்பார்ப்புக்களில் எதிரும், புதிருமான போட்டி நிலைமை மிகக்குறைவே. ஆனால், அங்கே உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் சேவைகளில் எதிரும் புதிருமான போட்டிகள் காணப்படுகின்றன. ஆகவே, உள்ளூர் நிலைமையில் "மேம்பாடு" என்பதற்கு எல்லா சூழ்நிலைகளுக்கும் ஒரே மாதிரியான செயல்பாடு இருக்கமுடியாது. ஆகவே, இந்தப் புதுவகையான (மேம்பாட்டு நிலைமைக்கு புதிய வழிமுறைகளை நாம் காண வேண்டியுள்ளது.) மேம்பாட்டின் அடிப்படை நோக்கம் மக்களின் நலத்தை மிகுதிப்படுத்துவதாகும். மக்கள் நலம் என்பதுகூட எல்லோருக்கும் பொதுவான ஒரு நிலைமையாகக் கருதமுடியாது. ஆகவே, நிலையான பின்வரும் வழிமுறைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் :

1) "மேம்பாட்டின்" மையமாக மக்களைப் பார்க்க வேண்டும்.

2) அடிப்படை நிலைமைகளுக்கு ஏற்ப "மக்கள் நலம்" என்பதை விளக்க வேண்டும்



மக்கள் நலம் என்பதில் மூன்று அம்சங்கள் உள்ளன : a) பொருளாதார b) சமூக c) சுற்றுசூழல் சார்ந்தவைகள். உள்ளூர் பொருளாதார மேம்பாட்டுக் கொள்கை இந்த மூன்று அம்சங்களையும் உள்ளடக்கிய நடவடிக்கைகளாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட கொள்கையில் உள்ளூர் மக்களில் பெரும்பான்மையோர் பயனடையத்தக்க வகையில் அவர்களுக்கு அடிப்படைப் பொருளாதார நிலைமையை உருவாக்கவேண்டும். இப்படிப்பட்ட அடிப்படைப் பொருளாதார நிலைமை ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக நிலைமைகளை பாதிக்காத வண்ணமும் இருக்கவேண்டும். இது அல்லாமல், உள்ளூர் பொருளாதார மேம்பாட்டில் சுற்றுசூழலையும் பாதுகாத்து அவை நிலைத்து நிற்கும் வண்ணமும் எதிர்வரும் சந்ததியினருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் இருக்க வேண்டும். ஆனால், மேம்பாட்டு உத்திகளை மேற்கொள்ளும் அரசுகள் பொதுவாக மனிதவள சுற்றுசூழலை தன்னிச்சையாக கிராமப்புற - நகர்ப்புற பெண் - ஆண், இளைஞர்கள் - முதியோர் என்று பிரித்து செயல்படுத்துகின்றனர்.

தேசிய அளவில் தேவைகளும் இலக்குகளும் மேற்கூறப்பட்ட வகையில் இருந்தாலும் உலகளவில் மூலதனம் என்பது செங்குத்து நிலைகளைச் சார்ந்ததாகும். ஆகவே, ஒரு பகுதிக்கான மேம்பாட்டுத் திட்டத்தை வகுப்பதில் முடிவுகளை மேற்கொள்வது சிக்கலானதாகும். ஆகவே, தகுந்த ஆதாரங்கள் இல்லாத நிலையில் இந்தியாவில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை மேற்கொள்ள இயலாது.

**ஒருங்கிணைந்த மேம்பாட்டு அணுகுமுறை அவசியம்:**

நம்நாட்டுப் பொருளாதாரத்தில் உள்ள சிக்கலான நிலைமைகளை கவனத்தில் கொண்டு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தவேண்டும். இதற்குத் தேவையான பலதரப்பட்ட வாய்ப்புகளையும் முக்கியமான பாதகங்களையும் துல்லியமாக அறிய வேண்டும். புதிய ஆய்வுகள் மற்றும் ஆதாரங்கள் அடிப்படையில் ஏற்கனவே உள்ள கொள்கைகளை கீழ்க்கண்ட அணுகுமுறையில் மாற்றியமைக்க வேண்டும்.

**அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்கள்**

அரசியலமைப்பு சட்டத்தின் 56வது திருத்தத்தின் அடிப்படையில் கிராமப்புற மற்றும் சிறு தொழில்கள் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் வருகிறது. இந்தியாவின் அடிமட்டத் தொழில்கள் கிராமப்புறங்களில் அமைவதால் சிறு தொழில்களின் உற்பத்திக்கு அங்குள்ள சிறு, குறு நிறுவனங்கள், அவை கிராமங்களில் இருந்தாலும் சிறிய ஊர்களில் இருந்தாலும் மிகுந்த பங்களிக்கின்றன. ஆகவே, தொழில் முனைவை ஊக்குவிப்பதும், தோற்றுவிப்பதும், வளர்ப்பதும் உள்ளூர் செயல்பாடாகும். ஆனால், துரதிஷ்டவசமாக உள்ளாட்சி அமைப்புகள் இந்நிலைமையை அறியாத காரணத்தினாலும் தங்களுடைய அதிகாரங்களை செயல்படுத்த விரும்பாததினாலும், சில சமயங்களில் மேல்மட்ட அரசு நிர்வாகம் இந்த அதிகாரங்களை எடுத்துக்கொள்வதாலும் நிலைமை வேறு விதமாக உள்ளது. சில மாநிலங்களில் இந்தச் சூழ்நிலையில் வெற்றி பெற்ற பஞ்சாயத்துக்களாக காட்டப்பட்ட போதுகூட அங்கு வெற்றி பெற்றதற்கான அடிப்படை காரணங்களை நாம் ஆராய வேண்டும். பொதுவாக, வெற்றி பெற்ற முறை என்பதை அரசியல் மிகுந்த தேசிய மற்றும் மாநிலம் தழுவிய திட்டங்களான கழிவுநீர் சுகாதாரம், தண்ணீர் வழங்குதல், அடிப்படை மருத்துவ சேவைகள், ஆரம்பக் கல்வி ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவைகளில் மக்கள் பங்களிப்போடு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுவது மிகவும் குறைவே.

**செயல் திறமைகள் :**

இது மட்டுமல்லாமல், இவ்வகையான அதிகாரங்களை செயல்படுத்த கீழ்மட்ட அரசியல் அமைப்புகளுக்கு தேவையான நிர்வாக அமைப்பு உள்ளதா என்பதை நாம் ஆராயவேண்டும். உள்ளூர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில், குறிப்பாக தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அவர்களிடம் தேவையான திறமை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இதில் முக்கியமாக விடுபட்டுப்போகும் அம்சம், தொழில் முனைவு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும், அவைகளை செயல்படுத்தவும் அளிக்கப்படக்கூடிய ஆலோசனை சேவைகளாகும் (இது இப்போது உள்ளூர் அளவிலும், மாநில அளவிலும் குறைபாடாகவே உள்ளது). செயல்திறமை என்று நாம் சொல்வது நாம் மேற்கூறிய சேவைகளை சார்ந்திருக்க வேண்டும். மேல்மட்டத்திலிருந்து அடிமட்டப் பஞ்சாயத்து வரை உள்ள நிர்வாக

அமைப்புக்களை குறிக்காது. உண்மையில், உள்ளூர் அளவில் இந்தச் சேவைகளை ஒருங்கிணைக்கும் திறனும், தொழில் முனைவோருக்கு ஒவ்வொரு கட்டத்திலும் நேரடி உதவி செய்யும் வகையிலும் இருக்கவேண்டும். இது அல்லாமல், வெறும் நிர்வாகத்திற்கு மட்டும் மதிப்பு அளிக்காமல் பின்வரும் குறிப்பிட்ட செயல்துறைகளில் இருக்க வேண்டும் : a) என்ன வகையான திட்டங்கள் மற்றும் வியாபாரங்களுக்கு வாய்ப்புள்ளது. b) பொதுவான தகவல்களையும் வழிகாட்டுதல்களையும் அளித்தல் c) மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய பணிகளுக்கு உதவி அளித்தல் மற்றும் d) தொடர்புகளை வளர்த்தல் மற்றும் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியங்களை உருவாக்குவது. இந்தச் செயல்களைத் திறம் மிகு வியாபார மேம்பாட்டுச் சேவை நிறுவனங்கள் செய்ய முடியும்.

புதிய பொருளாதாரம் உருவாகி வரும் இந்தத் தருணத்தில் அதனால் விளையும் பயன்களைப் பெறும் வண்ணம் சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்யவேண்டும். வியாபார மேம்பாட்டுச் சேவைகளையும் சமூக நிதியத்தையும் மேம்படுத்தி உறுதிப் படுத்துவதன் மூலம் இந்த நிலைமையைச் சமாளிக்கலாம். சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மிகப்பெரிய பிரச்சினை அறிவு சார்ந்த தேவைகளாகும். தொழில்நுட்பமே சில சமயம் பெரிய பிரச்சினையாகிவிடுகிறது. சிறு தொழில்கள் அவற்றை பெறுவதில் கால தாமதம் ஆவதால் அவை காலாவதியாகிவிடுகின்றன.

### வளங்கள்

மாநில அரசுகளும் உள்ளாட்சி அமைப்புகளும் வளங்களைப் பிரித்துக்கொள்வதில், தற்போதுள்ள நிலைமையில் தொழில் முனைவை ஊக்குவிப்பதற்குள்ள சேவைகளை ஒருங்கிணைப்பதில் இந்த அதிகாரம் உள்ளாட்சிகளிடமே உள்ளது. தற்போது மாவட்டத் தொழில் மையங்களில் இருக்கும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கலாம். ஆனால், அதோடு கூட நிதியும் அவைகளுக்கு வழங்கப்படவேண்டும். அப்போதுதான், உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான நிதி ஆதாரங்கள் கிடைக்கும்.

### கூட்டு வலிமையை மேம்படுத்துதல்

தொழில்முனைவு மேம்பாட்டில் கூட்டுத் தொடர் அமைப்பும் மிகவும் அவசியமாகும். இன்று இப்படிப்பட்ட கூட்டு வலிமை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் - குறிப்பாக மத்திய மாநிலங்களுக்கிடையேயும் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகத்துக்குமிடையேயும். உண்மையில் இந்தக் கூட்டு வலிமை மாவட்ட ஆட்சித் தலைமையில் செயல்படும் பல்வேறு குழுக்களால் ஏற்படுகின்றது. அதற்கு குறிப்பிட்ட துறையும் முன் முயற்சி எடுத்துக்கொள்கிறது. இதனால், ஒரு செயலில் சிறப்பு செயல்திறமைசார் பற்றாக்குறை தேவைப்படுகிறது. தொழில் முனைவை மேம்படுத்தத் தேவையான கூட்டு வலிமையை ஏற்படுத்துவதற்கு செங்குத்து மற்றும் கிடைமட்ட நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. பல துறைகள் சம்மந்தப்பட்டிருந்தாலும் ஒரு குறிப்பிட்ட தொழிலின் சிறப்புத்தன்மைகளை அறிந்து கொள்வது செங்குத்து முறையாகும். இந்தத் துறையை ஸ்திரப்படுத்துவதும் அதற்குத் தேவையான தெளிவையும் ஏற்படுத்தவும் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிலையும், அதாவது மத்திய மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள் தங்களுக்குண்டான பங்கையும் செயல்பாட்டையும் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். அப்படித் தெளிவு இல்லாத நிலையில் ஒவ்வொரு அரசு செயல்மட்டமும் தன் கற்பனைக்கேற்றவாறு திட்டங்களை வகுத்து அவற்றைத் தன் கீழுள்ள அரசு நிர்வாக அமைப்பின் மீது திணிப்பார்கள். இதனால், திட்டங்களுக்கும் மக்கள் தேவைக்கும் விருப்பங்களுக்குமிடையே பெரிய இடைவெளி உருவாகும்.

### மத்திய அரசின் சமீப கால முயற்சிகள்

2014 முதல் இந்திய அரசு, திறன் மேம்பாடு, தொழில்முனைவு மேம்பாடு மற்றும் பொருள் உற்பத்தி மேம்பாடு ஆகியவற்றிற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள் இரண்டு வகையாக வெளிப்படுகிறது : 1) கொள்கை வடிவமைப்பு உருவாக்கல் 2) இந்த மூன்றுவகை தொழில்களுக்கும் தேவையான தனியாக உருவாக்கப்பட்ட திட்டங்களை அறிமுகப்படுத்துதல். இந்தியாவை ஒரு பொருள் உற்பத்தி மையமாக உருவாக்க அரசின் முக்கிய திட்டமாக ''இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம்'' என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. இதன், அடுத்த கட்டமாக மற்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. திறன் குறைவு இருப்பதை களைய ''திறன்மிகு

இந்தியா'' திட்டம் அறிவிக்கப்பட்டது. இது மேலும் இருவகையாக - தொழில்நுட்ப, மேலாண்மை திறன்கள் என்று பிரிக்கப்பட்டது. இப்படிபட்ட ஒருங்கிணைந்த திறன் வளர்ப்புத் திட்டங்கள் மூலம் ஒரு புறம் கார்ப்பரேட் நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் செல்வதையும் தடுக்கமுடியும் என்று கருதப்படுகிறது. ஆகவே, தொழில்முனைவு மேம்பாட்டிற்கு சத்துணவாக திறன் மேம்பாடு அமையும் என்று அறியப்பட்டது.

தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டத்தோடு திறன் மேம்பாட்டுத் திட்டத்தை சிறப்பாக ஒன்றிணைக்க ஒரு புதிய திட்டமாக "புதியன துவங்கு இந்தியா'' என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் புதிய பொருளாதாரத்தின் பயன்பாடுகளை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சில பெரிய திட்டங்களை செயல்படுத்தும்போது, அதனால் விளையும் பயன்கள் சிலருக்கே போய்ச்சேரும் வாய்ப்புள்ளது. இதனால், சிலர் விடுபடுவதைத் தவிர்க்கவும் அதனால் ஏற்படும் முதலீட்டுப் பிரச்சினைகளை சமாளிக்கவும் "நிமிர்ந்து நில் இந்தியா'' திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் இரண்டு வகையான அணுகு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. சிலர் விடுபடுவதைத் தவிர்ப்பது மற்றும் வங்கித் துறையில் உள்ள வளங்களை சமத்துவ முறையில் வழங்குவது.

குறு தொழில்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புத் திட்டமான "முத்ரா'' திட்டம் நிதி ஆதாரங்களை பரவலாக அளிக்கும் திட்டமாகும். இந்த முத்ரா கடன் திட்டம் மிகவும் பரவலாக்கப்பட்டு அடித்தளம் உறுதியாக்கப்பட்டுள்ளது.

பெரும் நிறுவனங்களுக்கு உதிரி பாகங்களை தயார் செய்யும் தொழில் நிறுவனங்களின் ஊக்கமும் ஒரு பெரிய சாதனையாகும். இதனைப் பாதுகாப்பு துறைக்கான தளவாடங்களை உற்பத்தி செய்யும் துறையில் நாம் மிகத் தெளிவாகக் காணலாம். ஆனால், பிற துறைகளில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உதிரி பாகங்களை தயாரிப்பதில் நாம் பல நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### சமீப கொள்கை முயற்சிகளின் தாக்கங்கள்

மேற்கூறப்பட்ட நிலைகளை நாம் விவாதிக்கும் அதே நேரத்தில் மத்திய அரசின் சமீப கால கொள்கை முயற்சிகளும், அதனால், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மீது ஏற்படும் தாக்கங்களையும் நாம் உன்னிப்பாக பரிசீலிக்க வேண்டும். மேற்கூறப்பட்ட திட்டங்களின் மூலம் மத்திய அரசு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனத் துறைக்குண்டான இனிவரும் பாதையை காட்டியுள்ளது. முறைப்படுத்தப்படாத நிலைமைதான் இந்தியாவின் குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறையின் முக்கிய அம்சமாகும். இந்தச் சூழ்நிலையில் இனி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில் ஒரு முக்கியமான கொள்கை அடங்கியுள்ளது. நம்முடைய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கடந்த காலங்களைப் போலவே முறைப்படுத்தபடாமலேயே இருக்க வேண்டுமா அல்லது முறைப்படுத்தப்படுவதற்காக திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதாகும். முறைப்படுத்தப்பட்ட என்று சொல்லும் போது, பலவகையான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். அவைகளாவன : புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்துதல், சிறப்பான நிர்வாகம், சிறப்பான நிர்வாகச் செயல்பாடுகள், நவீன மேம்பாட்டுத் திட்டங்களாகும். இந்த வகையில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் புதியனவற்றை உருவாக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதியனவற்றைத் தோற்றுவிக்கும் பாதையை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இந்த மாற்றத்தினால் ஏற்படும் குறுகிய கால மற்றும் நீண்ட கால விளைவுகளை நாம் கவனிக்கவேண்டும். குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் இரண்டு வகையான சிறப்பு அம்சங்களை நாம் பார்க்க முடியும். ஒன்று அவை எளிதாகப் பாதிக்கப்படக்கூடியவை. மற்றொன்று, பெருமளவிலான மாற்றங்களால் ஏற்படும் இன்னல்களை எதிர்கொள்ள அவர்களிடம் உள்ள சிறப்பு வலிமைகள். பொருள்கள் மற்றும் சேவைகள் வரி, ரூபாய் நோட்டு மதிப்பு இழப்பு செயல்பாடுகளால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி விரிவான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலகில் உள்ள பல நாடுகளில் இப்படிப்பட்ட தீவிர கொள்கை முடிவுகளால்

குறுகிய கால பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நீண்ட காலப் பயன்கள், இந்த குறுகிய கால இழப்புகளை ஈடுகட்டும் என்று நாம் கருதினாலும் பொதுக்கொள்கை செயலற்று இருக்கக்கூடாது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துவதற்கான திட்டங்களோடு அவற்றிற்காக சிறப்புத் திட்டங்களையும் அறிவிக்க வேண்டும்.

தற்போது மத்திய அரசு மேற்கொண்டுள்ள அனைத்து முயற்சிகளும் தொழில் முனைவுகளை முறைப்படுத்துவதற்காக என்றிருந்தாலும் அடுத்த கட்டமாக ஐந்து முக்கிய திட்டங்களை நாம் செயல்படுத்தியாக வேண்டும் : 1) குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் உள்ள முக்கியமான உட்பிரிவுகளை முழுவதுமாகப் புரிந்துகொள்ளுதல். 2) பொருளாதாரத்தின் செயல்பாட்டை நாம் முன்பு கிராமப்புற - நகர்ப்புற, ஆண் - பெண் என்று வகுத்து புரிந்து கொள்ளப்பட்டதை போல் அல்லாமல் புதிதாக அவைகளின் செயல்பாடுகளுக்கு தகுந்த முறையில் விளக்கவேண்டும். 3) விரிவான ஆய்வுகளுக்குப்பின் இவற்றிற்காக செயல்படும் அமைப்புகளை சீர்திருத்துதல். 4) நிதி செயல்பாட்டின் பங்கை புதிதாக விளக்கி உண்மையான துறைகளோடு அவைகளை இணைக்கவேண்டும். 5) தொழில் முனைவை ஒரு முக்கியமான வளமாகக் கருதித் திட்டமிட வேண்டும்.

**முடிவாக**

உள்ளூர்ப் பொருளாதார மேம்பாட்டில் சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவமும் உள்ளூர்ப் பொருளாதார மேம்பாட்டுத் தேவையும் மறுக்க முடியாத ஒன்றாகும். ஆனால், இதற்கான கொள்கை அணுகுமுறையிலும் அதன் விளக்கங்களிலும் தெளிவு தேவை. இப்படி ஒரு புதிய அணுகு முறையை உருவாக்கும் போது அது ஒரு சாராருக்காக இருக்கக்கூடாது. நம் நாட்டின் பல்வேறு பகுதிகளின் பன்முகத்தன்மையை தொழில் முனைவு மேம்பாட்டிற்கான ஒரு சிறப்பு வளமாக கருதி அதற்கு ஏற்றவாறு உயர்மட்டப் பொருளாதாரக் கொள்கையை வகுக்கவேண்டும்.

**- P.M. மேத்யூ**, கொச்சியில் உள்ள சிறு தொழில்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர். ●



# உங்களுக்குத் தெரியுமா?

## உத்யோக் ஆதார் குறிப்பாணை (UAM)

சிறு, குறு, நடுத்தரத்தொழில்முனைவு அமைப்புகள் MSME அமைப்பின் கீழ் பதிவு செய்துகொண்டால்தான் மத்திய, மாநிலஅரசுகள் வழங்கும் பல்வேறு சலுகைகளைப்பெறமுடியும். சிக்கல் நிறைந்த பல்வேறு வகையான படிவங்களைப் பூர்த்திசெய்வது போன்ற சிரமங்களால் பல சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்துகொள்வதில்லை. இதன் காரணமாக அரசின் சலுகைகளைப் பெறமுடிவதில்லை. MSME துறைக்கு முதலீடு செய்வதுபற்றி ஆராய அமைக்கப்பட்ட கே.வி.காமத் குழு சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் MSME இல் பதிவு செய்துகொள்ள வேண்டியதைக் கட்டாயப்படுத்துகிறது. சரியான புரிதல் இல்லாத, சிக்கல் நிறைந்த நடைமுறைகளைத் தவிர்ப்பதற்காகவே உத்யோக் ஆதார் குறிப்பாணை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏராளமான நிறுவனங்கள் மிக எளிமையாகப் பதிவு செய்துகொள்ளமுடியும். அரசு வழங்கும் சலுகைகளும், பயன்களும் கிடைக்கும்.

உத்யோக் ஆதார் குறிப்பாணை என்பது ஒரு பக்க அளவிலான படிவமாகும். இதன் மூலம் சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் தங்களின் தொழில்களைப் பதிவுசெய்துகொள்ளலாம். சிக்கல்கள் நிறைந்திருந்த, தெளிவில்லாத EM-1, EM2 படிவப்பதிவு நடைமுறையை நீக்குவதற்காகவே அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஒரு எளிய முறையே உத்யோக் ஆதார் (UAM) ஆகும்.

உத்யோக் ஆதார் குறிப்பாணையானது சுய சான்றுப்படிவம் எனும் தன் தொழில் பற்றி தானே சான்று அளித்துக் கொள்ளும்படியாகவும், மிகக் குறைவான தகவல்களை மட்டுமே வேண்டுவதாகவும் உள்ளது.

உத்யோக் ஆதார் குறிப்பாணையின் சிறப்பம்சங்கள்:

1. ஒரே ஒரு பக்கம் கொண்ட மின்னணு பதிவு முறை
2. தற்சான்று அளிக்கும் வசதி
3. ஒன்றுக்கு மேற்பட்ட உத்யோக் ஆதாரைப்பதிவுகொள்ளலாம்
4. ஆவணங்கள் தேவை இல்லை
5. கட்டணமும் இல்லை

சிறு, குறு நடுத்தரத்தொழில் முனைவுகள் அமைச்சகம் உத்யோக் ஆதார் முனையம் என்ற தரமான ஒரு உள்கட்டமைப்பின் மூலம் http://udygaadhaar.gov.in என்ற இணையதள முகவரியில் ஒரு நுழைவாயிலை உருவாக்கியுள்ளது. கைபேசியுடன் தொடர்புகொள்ளும் வகையிலும் இந்த வசதி அமைக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்துகொண்டுள்ள ஒவ்வொரு நிறுவனமும் தங்களுக்கென ஒரு பதிவெண்ணையோ, அடையாள எண்ணையோ பெறுகின்றன. அதன் மூலம் அரசுகளின் அனைத்து நலத்திட்டப்பயன்களையும் பெறமுடிகிறது. வயதுவந்தோரில் 92% பேர் ஆதார் எண் பெற்றுள்ளதால், இந்த புதிய உத்யோக் ஆதார் குறிப்பாணையம் மூலம் ஒற்றைச்சாளர முறையில் பதிவுசெய்துகொண்டு எளிதாகத் தொழில் செய்வதை உத்யோக் ஆதார் குறிப்பாணை உறுதிசெய்கிறது.

MSME சேகரித்திருக்கும் தகவல்களை, MSME அமைச்சகத்தின் மூலம் நிர்வகிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளின் காரணமாக மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் இத்தகைய தகவல்களை நிர்வகிக்கும் தேவை குறைந்து செலவு மிச்சப்படுத்தப்படும். இதுவரை 3,629,754 சிறு, குறு, நடுத்தரத்தொழில்முனைவோர் உத்யோக் ஆதார் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

உத்யோக் ஆதார் எண் பதிவு மூலம் சிறு, குறு, நடுத்தரத்தொழில்முனைவுகளின் ஆற்றல் என்ன என்பது தெரியவரும். எளிதாகத் தொழில் செய்வதில் உலக அளவிலான தரவரிசையில் இந்தியா முன்னிலை பெறவும் உத்யோக் ஆதார் உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.